
# SOMASKANDAN

# சோமாஸ்கந்தன்




**J/Sri Somaskanda College**

**Puttur**

*September 10th 2003*

# Somaskandan

# சோமாஸ்கந்தன்

**J / Sri Somaskanda College,**
**Puttur.**
**2003.**

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத்
திகழ்பரத கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலும்
தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த
திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ
லனைத்துலக மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்தபெருந் தமிழணங்கே

பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்
இருந்தபடி இருப்பது போல்
கன்டனமுங் களிதெலுங்குங்
கவின் மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம் போலுலகவாழ்க்
கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே



*'மனோன்மணியம்'* - சுந்தரம்பிள்ளை

**மலர் வடிவமைப்பு**

**தகவல் தொழில் நுட்ப மையம்**

யா / ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி ,

புத்தூர்.



# OUR REVERED FOUNDER




**The late Shriman Malavarayar Kandaiah**

*This*
*Annual Number*
*Is*
*Gratefully Dedicated*
*To*
*Our Founder*
*By The College Community*

*10 September 2003*

# OUR PRINCIPAL



**Mr . V . ARUMUGAM**

B.Sc Hons (Cey) , Dip-in-Ed (Cey)

# கல்லூரியின் கொடிக் கீதம்


*இராகம் : ஹிந்தோளம்* *தாளம் : ஆதி*

காணும் கலைக்கொடி பாரீர் சோமாஸ்
கந்த மணிக்கொடிபோற்றிட வாரீர்
தாலால் உயர்ந்ததோர் தம்பம் அதன்
தலைமிசை அம்பரம் தளையுதே பாரீர்

( காணும் )

உண்மையோடுக்கமும் அறிவுடன் ஆண்மையும்
கண்ணியம் கடமை கற்றாங்கு ஒழுகலும்
எண்ணுடன் எழுத்தும் எழுத்தறி சாஸ்திரம்
வெண்மையும் பசுமையும் விளங்குதே பாரீர்

( காணும் )




## The Magazine Committee

Mr. P Arulkumar
Mrs.S.Gnaneswaran
Mr. S.Laleesan
Mr .M.Muralitharan
Mrs.M.Philip Thambirajah
MrsT.Sathiyalingam
Mrs.S.Shanthakumar
Mr .K.Shivakumar
Mr. K.Thillainathan
Mr. K.Vakeesan

# 🕮 பொருளடக்கம் 🕮


| | | |
|---|---|---|
| 01. | ஆசிச்செய்திகள் | 01 |
| 02. | பதிப்புரை | 06 |
| 03. | அதிபர் அறிக்கை | 07 |
| 04. | நயத்தலும் விமர்சித்தலும் | 18 |
| 05. | ஒதுக்கங்களும் ஏற்பாடுகளும் | 23 |
| 06. | பாடசாலை மட்டத்திலான கலைத்திட்ட முகாமைத்துவத்தில் நவீன செல் நெறி | 26 |
| 07. | மனந்திறந்து ஒரு மடல் | 37 |
| 08. | சேவை நயப்புரை | 38 |
| 09. | நினைவில் நீங்காதவர் | 39 |


**மாணவர் பகுதி**



| | | |
|---|---|---|
| 10. | கல்வி | 40 |
| 11. | பொம்மை | 40 |
| 12. | சுத்தம் காப்போம் | 40 |
| 13. | மாதா பிதா குரு | 40 |
| 14. | உலகம் பற்றிய தகவல்கள | 41 |
| 15. | எமது கல்லூரி பற்றிய தகவல்கள் | 41 |
| 16. | இலங்கைபற்றிய தகவல்கள் | 41 |
| 17. | பூக்கள் | 42 |
| 18. | விடுகதைகள் | 42 |
| 19. | கார்த்திகை விளக்கீடு | 43 |
| 20. | கல்வி | 44 |
| 21. | பொர்ணமிநாள் | 45 |
| 22. | தொலைக்காட்சியும் மாணவர்களும் | 46 |
| 23. | அன்பு | 48 |
| 24. | வடக்கிலிருந்து தெற்கு நோக்கி | 49 |
| 25. | ஒரு தனி மரத்தின் மரணம் | 52 |
| 26. | தீதும் நன்றும் பிறர்தர வாரா | 54 |
| 27. | ஓழுக்கமே எங்கள் உயிர் | 56 |
| 28. | கற்றுணர் | 56 |
| 29. | தேசத்தின் செல்வங்கள் தெருவோரத்தில் | 57 |
| 30. | ஈழத்து இசை வரலாறும் வளர்ச்சியும் | 58 |

31. My self 63
32. My pet 63
33. My best friend 63
34. My village 63
35. My petty 64
36. Advantages of travelling 64
37. Sripada Religious but adventurous 65
38. Dimonds 66
39. Sri lanka Matha Our National Anthem 68
40. Extinction of species 69
41.Snake bite 70

**மன்ற அறிக்கைகள்**

42 நலன்புரிக் கழகம் 73
43. இந்துமன்றம் 74
44. தமிழ்ச்சங்கம் 76
45. English Union 77
46. சாரணர் குழு 78
47. மக்கள் நலன்புரிச்சங்கமும் படையணியும் 79
48. கவின்கலை மன்றம் 80
49. கணித விஞ்ஞான மன்றம் 81
50. சமூகவியல் மன்றம் 82
51. விளையாட்டுத்துறை அறிக்கை 83
52. The "A" Level Union 84
52. வணிக மன்றம் 85

53. Prize List - 2002 86
54. Staff List 97
55. நெஞ்சம் நிறைந்த நன்றிகள் 101
56. கல்லூரிக் கீதம் 102



***இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்***
**மாண்புமிகு தி.மகேஸ்வரன் அவர்கள் விடுக்கும்**

## வாழ்த்துச் செய்தி

சைவப் பிள்ளைகள் சைவப் பாரம்பரியச் சூழலில் கல்வி பயில வேண்டும் என்று விரும்பிய நாவலர் பெருமான் முதன் முதலில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வண்ணார் பண்ணையில் சைவப் பாடசாலை ஒன்றை நிறுவினார். இவருடைய வேண்டுகோளை ஏற்று சைவப் பெரியார்கள் கிராமங்கள் தோறும் சைவப் பாடசாலைகளை நிறுவினார்கள். ஆங்கிலக் கல்வியை சைவப் பாரம்பரியச் சூழலில் வழங்குவதற்குப் பல சைவப் பெரியார்கள் முயற்சி செய்தார்கள். புத்தூர்க் கிராமத்தைச் சேர்ந்த கொடைவள்ளல் அமரர் மழவராயர் கந்தையா அவர்களால் 1931 ஆம் ஆண்டு ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி நிறுவப்பட்டது. புத்தூர் மழவராயர் அவர்களும் அவருடைய மைந்தன் கந்தையா அவர்களும் சைவ சமயத்தின் வளர்ச்சிக்காகவும் சைவப் பெருமக்களின் நன்மைக்காகவும் பல்வேறு அறப் பணிகளைப் புத்தூர்க் கிராமத்திலே ஆரம்பித்தார்கள்.

தர்மங்களிலே மிக உயர்ந்த தர்மமாகப் போற்றப்படுவது வித்தியா தர்மம் ஆகும். வாழையடி வாழையாகத் தனது கிராம மக்களுக்குக் கல்வியைப் போதிக்கக் கூடிய கல்லூரியை நிறுவியதுடன் கல்லூரியின் செயற்பாடுகளுக்கு உதவக் கூடிய வகையில் வருமானம் தரக்கூடிய அறக்கட்டளைகள் பலவற்றையும் இவர் எழுதி வைத்தார். பாடசாலைக்குள்ளே சோமாஸ்கந்தருக்கு ஆலயம் ஒன்றை நிறுவினார். ஆலயத்தில் நாளாந்தம் இரண்டு நேரம் நித்திய பூசை நடைபெறுவதற்கும் வழி செய்து வைத்தார். சிவனை மறவாச் சிந்தையாளர்களாக வாழ்ந்த அறுபத்து மூன்று நாயன்மார்களின் குருபூசைத் தினத்தை கொண்டாடும் ஒரேயொரு பாடசாலை புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியே ஆகும்.

2006 ஆம் ஆண்டில் பவழவிழாக் காண இருக்கின்ற இக்கல்லூரியில் ஆயிரத்து எழுநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். புத்தூர் நீர்வேலி , சிறுப்பிட்டி , அச்செழு , நவற்கிரி , அச்சுவேலி , ஆவரங்கால் , வாதரவத்தை போன்ற அயற் கிராமங்களில் எல்லாம் இருந்து மாணவர்கள் இங்கே வந்து கல்வி பயில்கிறார்கள்.

எங்கள் அமைச்சினால் நடாத்தப் பெற்ற இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டிய சிறப்பு நிகழ்ச்சிகளை இக்கல்லூரியினர் சிறப்பாக நடாத்தினார்கள் என்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

நாவலர் மணிமண்டபத்தில் எங்கள் அமைச்சின் பிராந்திய அலுவலகத்தினால் வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் நடாத்தப் பெறும் நிகழ்வில் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி ஆசிரியர்களும் , மாணவர்களும் (21.03.2003 இல்) கலந்து கொண்டு சிறப்பு நிகழ்வுகளை நடாத்தியிருந்தார்கள்.

இக்கல்லூரி எல்லா வளமும் , சிறப்பும் பெற்று வாழையடி வாழையாக எமது மாணவ சமுதாயத்துக்கு அரும்பணியாற்றும் அறிவாலயமாக மிளிர எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானை திருவருள் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன். கல்லூரியால் வெளியிடப்படும் சோமாஸ்கந்தன் சஞ்சிகை சிறக்க வாழ்த்துகிறேன்.

*(ஒப்பம்) தி.மகேஸ்வரன் , பா.உ*
*இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர்.* *01.08.2003*

*வடக்கு கிழக்கு மாகாண கல்வி , பண்பாட்டலுவல்கள் ,*
*விளையாட்டுத்துறை , இளைஞர் விவகார*
*அமைச்சின் செயலாளர்*

**உயர்திரு இ. தியாகலிங்கம் அவர்கள் விடுக்கும்**

# ஆசிச் செய்தி

" தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும் " என்பது வள்ளுவர் வாக்கு. அதற்கிணங்க இவ்வுலகை விட்டு நீங்கிய பின்னரும் மக்களின் மனங்களில் நிறைந்து நிற்கும் புத்தூரைச் சேர்ந்த அமரர் மழவராயர் கந்தையா அவர்களின் தர்ம சிந்தனையின் வெளிப்பாடாக 1931 இல் உதயமான புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியானது , ஆண்டுகள் பல கடந்து அறிவுத்துறையில் மட்டுமன்றி அனைத்துத் துறைகளிலும் அருஞ்சாதனைகள் படைத்து முன்னேறி வருவது கண்டு மகிழ்ச்சியடையாதார் யாருமிலர்.

இக்கல்லூரியில் வெளியிடப்படும் சோமாஸ்கந்தன் சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்க கிடைத்த சந்தர்ப்பத்தைப் பெரும் பாக்கியமாகவே கருதுகிறேன்.

சோமாஸ்கந்தன் சோபையோடு மலர்ந்து மணம் பரப்ப எனது நல்லாசிகளைத் தெரிவிப்பதோடு , இக்கல்லூரி மேன்மேலும் பல வளர்ச்சிப் படிகளைத் தாண்டி வளம் பெற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

*(ஒப்பம்) ஆர்.தியாகலிங்கம்*
*செயலாளர் ,*
*கல்வி பண்பாட்டலுவல்கள்*
*விளையாட்டுத்துறை ,*
*இளைஞர் விவகார அமைச்சு.*
*வடக்கு கிழக்கு மாகாணம் ,*
*திருகோணமலை.*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்*

**பேராசிரியர் சு.மோகனதாஸ் அவர்களின்**

# ஆசிச் செய்தி

புத்தூர் மக்களின் ஆன்மீக வாழ்வுக்கும் , கல்விப் புலமைக்கும், பாரம்பரிய பண்பாட்டுப் பெருமைக்கும் பின்புலமாக இருந்து அவ்வூரின் மையத்தில் உள்ள சோமாஸ்கந்தக் கல்லூரி செயற்பட்டு வருகின்றதென்பதைப் பலரும் அறிவர். அத்தகைய பெருமைக்குரிய பாடசாலையை நிறுவிய நாளையும் , அதை நிறுவிக் கொடுத்த கொடைவள்ளல் அமரர் மழவராயர் கந்தையா அவர்களையும்நினைவு படுத்தி இன்று வெளியிடப்படும் “சோமாஸ்கந்தன்” என்ற மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆங்கிலேயர் ஆட்சியில் சுதேச பண்பாடு பலவீனப்பட்டு , மேற்கத்தைய பண்பாட்டு மோகம் மேலோங்கத் தொடங்கிய கட்டத்தில் தெற்கே அநாரீக தருமபாலாவும் , வடக்கே ஆறுமுக நாவலரும் தமது சுதேச பண்பாட்டு விழுமியங்களுக்கு மீண்டும் புத்துயிர் அளிக்க வேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டனர். ஆறுமுக நாவலரின் அர்ப்பணிப்புடன் கூடிய செயற்பாடுகள் தான் தமிழரின் மதத்தையும் , மொழியையும் நேசித்த சமூகப் பற்றா ளரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன் விளைவால் அப்பெரிய வர்களில் சிலரே யாழ்ப்பாணத்தில் பல சைவப் பாடசாலைகள் தோற்றுவிப்பதற்கும் காரண கர்த்தாவாக இருந்தனர். அவர்களுள் யா/ கந்தரோடை மகா வித்தியாலயத்தை நிறுவிய அமரர் அம்பலவாணர் கந்தையா , யா/புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியை நிறுவிய அமரர் மழவராயர் கந்தையாவும் சிறப்பாகக் குறிப் பிடத்தக்கனர். இவ்வாறான சமூகப் பற்றாளர்கள், கொடைவள்ளல்கள் அன்றைய காலகட்டத்தில் தோன்றியிருக்காவிட்டால் இன்று நாம் கல்வியறிவு அற்ற பல கிராமங்களையே தரிசிக்க வேண்டி யிருந்திருக்கும்.

சோமாஸ்கந்தக் கல்லூரியின் கல்விச் சாதனை என்பது புத்தூர்க் கிராமத்துக்குள் மட்டும் உள்ளடங்கியதல்ல. இன்று அது நீர்வேலி , சிறுப்பிட்டி , அச்செழு , நவற்கிரி , அச்சுவேலி , ஆவரங்கால் , வாதரவத்தை போன்ற கிராமங்களுக்கெல்லாம் தாய்க் கிராமமாகக் கருதப்படுவதற்கு சோமாஸ்கந்தக் கல்லூரியின் பணியே முக்கிய காரணம் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. 1931 ஆம் ஆண்டு ஒருசில மாணவர்களுடன் அமரர் மழவராயர் கந்தையாவால் தோற்றுவிக்கப்பட்ட இக்கல்லூரியில் இன்று ஒரு நகரத்துப் பாடசாலைகளுடன் போட்டி போடக்கூடிய அளவிற்கு

மாணவர்கள் சல்வி கற்று வருகின்றனர். இந்த வளர்ச்சிக்குப் பின்னால் உள்ள காரணங்கள் எதுவாக இருந்தாலும் அதில் பாடசாலையின் தொடர் வளர்ச்சிக்காக அமரர் மழவராயர் கந்தையா விட்டுச் சென்ற நிரந்தர சொத்தே முக்கிய காரணம் என்பதில் எந்த ஐயமும் இல்லை. அமரர் கல்லூரிக்கு மட்டுமல்ல தான் நிறுவிய புத்தூர் சிவன் ஆலயத்திற்கும் , புத்தூரில் நிறுவிய அன்ன சத்திரத்திற்கும் பெருமளவு அசையும் , அசையாச் சொத்துக்களை விட்டுச் சென்ற பெருமைக்குரியவர். அமரரால் மக்களுக்காக விட்டுச்சென்ற இந்த அபரிமிதமான சொத்தை அறிந்த அமரர் ஜி.ஜி பொன்னம்பலம் ஒரு தடவை பாராளு மன்றத்தில் உரையாற்றும் போது அரசு எமக்கென ஒரு பல்கலைக்கழகம் அமைக்க அனுமதி தரட்டும். அதைக் கொடை வள்ளல் புத்தூர் மழவராயரின் சொத்தை வைத்தே அமைத்துக் காட்டுகிறோம் எனக் கூறியது இவ்விடத்தில் என் நினைவுக்கு வருகின்றது.

இப்பாடசாலையில் கல்வி கற்ற பலர் இன்று அரசியல் வாதிகளாக , பல்கலைக்கழகப் பேராசிரியர்களாக , மருத்துவர்களாக , பொறியியலாளர்களாக , சிறந்த விஞ்ஞானிகளாக உள்நாட்டிலும் , வெளிநாட்டிலும் சேவையாற்றி வருவதை நான் நன்கு அறிவேன். அப்பாடசாலையால் நன்மை பெற்ற பலர் இன்று கனடா போன்ற பிற நாடுகளில் இருந்து பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெருமளவு நிதியுதவி அளித்து வருவதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். காலம் தப்பாது வருடாவருடம் இப்பாடசாலை நிறுவிய நாளையும் , இதை நிறுவிக் கொடுத்த கொடைவள்ளல் அமரர் மழவராயர் கந்தையாவின் பெயரையம் நினைவு படுத்தி ஆண்டுதோறும் விழா நடாத்தும் பாடசாலை நிர்வாகத்துக்கும் , ஆசிரிய , மாணவ குழாத்திற்கும் , அவ்வூர் மக்களுக்கும் என் வாழ்த்துக்கள்.

இன்று ஆண்டு மலராக வெளிவரும் “சோமாஸ்கந்தன்” மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் உவகை அடையும் நான் 2006 இல் இக்கல்லூரி பவள விழாக் கொண்டாடும் போது வெளியிடப்படும் மலர் கல்லூரியின் பெருமையையும் , அமரர் மழவராயர் கந்தையாவின் புகழையும் உலகெங்கும் வாழும் தமிழர்கள் அறிந்து பெருமை அடையும் வகையில் மிகப் பெரிய அளவில் வெற்றி பெற முன் கூட்டியே வாழ்த்துக் கூறி மகிழ்கிறேன்.

# பதிப்புரை

எங்கள் கல்லூரியின் பவழ விழா நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இம்மலரை வெளியிடுவதில் பெருமையடைகின்றோம். புத்தூரையும் அதனை அண்டிய பிரதேசங்களையும் சார்ந்தவர்களுக்கென வள்ளலாரால் நிறுவப்பட்ட அறிவுக் கலைக்கூடத்தின் பெருமைகளைச் செப்பிடும் ஏடாக காலச் சுவடாக இம்மலர் முகிழ்கிறது.

இந்து விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தி.மகேஸ்வரன் வடக்கு கிழக்கு மாகாணக் கலடவி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலர் திரு.இ.தியாகலிங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பேராசிரியர் சு.மோகனதாஸ், ஆகியோரது செய்திகள் மலரை அலங்கரிக்கின்றன.

உலகறிந்த தமிழ்ப் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் எமது வேண்டுகோளுக்கிசைந்து "நயத்தலும் விமர்சித்தலும்" என்ற உயர்தரத்தில் கற்பிக்கும், கற்கும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்தரத்தக்க கட்டுரை ஒன்றை வழங்கியுள்ளார். எங்கள் கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவர்களில் ஒருவரும் தற்போது சென்னைப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டத்திற்கான ஆய்வை மேற்கொண்டிருப்பவருமான திரு.தி.வேல்நம்பி கணக்கீட்டுத் துறை சார்ந்தவர்களுக்குப் பயன்படத்தக்க வகையில் "ஒதுக்கங்களும் ஏற்பாடுகளும்" என்ற கட்டுரையை வழங்கியுள்ளார். இவை இம்மலருக்குப் பெருமை சேர்ப்பனவாய் அமைந்துள்ளன.

மேலும் எங்கள் மலரின் வழமையான அம்சங்களாகிய, அதிபர் அறிக்கை, ஆசிரியர்களதும், மாணவர்களதும் படைப்புக்கள், இணைப்பாடவிதானச் செயற்பாட்டு மன்றங்களின் அறிக்கைகள், மாணவர்களின் பரிசுப்பட்டியல் எனப் பல்வேறு விடயங்களையும் இம்மலர் உள்ளடக்கியுள்ளது.

எங்கள் கல்லூரித் தகவல் தொழில்நுட்ப மையத்திலே அச்சு வடிவமைப்புச் செய்யப்பட்ட பெருமை சோமாஸ்கந்தனுக்கு மேலும் அழகு சேர்க்கிறது.

"சோமாஸ்கந்தன்" இவ்வாண்டிற்கான வெளியீடு, கடந்த வெளியீடுகளைக் காட்டிலும் சிறப்புடன் அமையவேண்டும் என்ற அதிபர் அவர்களின் விருப்பினையும் வழிகாட்டலையும் ஏற்று இம்மலரைச் சிறப்பாக வடிவமைத்துள்ளோம். காலத்தின் பதிவேடாக அமையும் "சோமாஸ்கந்தனை" உங்கள் கரங்களில்த் தவழ விடுவதிற் பெருமையடைகிறோம்.

10.09.2003 மலர்க்குழு

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் - 2003
## அதிபர் அறிக்கை

வணக்கத்திற்குரிய சிவாச்சாரியார் சிவஸ்ரீ சாமி சோமசுந்தரக் குருக்கள் ஐயா அவர்களே, பிரதம விருந்தினராக வருகை தந்துள்ள எமது மதிப்பிற்குரிய வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ப.விக்னேஸ்வரன் அவர்களே, சோமாஸ்கந்தன் சஞ்சிகைக்கான மதிப்பீட்டுரையினை ஆற்றுவதற்கு வருகை தந்துள்ள கலாநிதி. இ.முருகையன் அவர்களே, நிறுவுநர் நினைவுப் பேருரை ஆற்ற வருகை தந்துள்ள எமது கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவர்களில் ஒருவரும், கோப்பாய்ப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தருமாகிய திரு.க.சிதம்பரப்பிள்ளை அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள கோப்பாய்க் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.இ.சிவஞானசுந்தரம் அவர்களே, அன்பான பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நலன் விரும்பிகளே, அயற்பாடசாலை அதிபர்களே, திணைக்களம் சார்ந்த அலுவலர்களே, கல்லூரியின் ஆசிரிய சகோதரர்களே, மாணவச் செல்வங்களே, அனைவருக்கம் எனது பணிவான வணக்கம். இன்றைய விழாவைச் சிறப்பிக்க வருகை தந்துள்ள அனைவரையும் கல்லூரிச் சமூகத்தின் சார்பில் வருக! வருக! என இருகரங் கூப்பி வரவேற்பதில் பேருவகை அடைகிறேன். இவ்வேளையில் கடந்த செப்ரெம்பர் பதினோராம் திகதியிலிருந்து இன்று வரையான காலப்பகுதிக்கான அதிபர் அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன்.

வணக்கத்திற்குரிய சிவஸ்ரீ சாமி சோமசுந்தரக் குருக்கள் ஐயா அவர்களே, நீங்கள் எங்கள் நிறுவுநரால் விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமானுக்கென அமைக்கப்பட்ட தேவஸ்தானத்தின் ஆதீன சிவாச்சாரியாராக இருந்து ஆன்மீகப் பணி ஆற்றி வருகின்றீர்கள். எப்போதும் எம்பெருமானின் திருமேனியைத் தீண்டிப் பூசிக்கும் பாக்கியம் வாய்க்கப் பெற்றவராகிய நீங்கள் - சிவாச்சாரியார் ஒருவருக்குரிய சிறந்த இலக்கணங்களை உள்வாங்கிச் செயற்பட்டு வருகின்றீர்கள். இவ் விழாவிற்கு தங்களை வருக வருக என வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

மதிப்பிற்குரிய வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ப.விக்னேஸ்வரன் அவர்களே, பேராதனைப் பல்கலைக்கழகப் பௌதிக விஞ்ஞானத் துறைப் பட்டதாரியாகிய தாங்கள், எங்கள் வலயக் கல்விப்பணிப்பாளராக இருந்து எங்கள் பிரதேசக் கல்வி நலனில் மிகுந்த அக்கறை செலுத்தி வருகிறீர்கள். பார்வைக்கு எளியவராகவும், பழகுவதற்கு இனியவராகவும் திகழும் தாங்கள் - பதவி வழியாக எங்கள் தர்மகர்த்தா சபையினுடைய தலைவராகவும் இலங்குகின்றீர்கள். தங்கள் வரவு எங்கள் யாவருக்கும் புத்துணர்வையும் ஊக்கத்தையும் அளிக்கின்றது. தங்களை வருக வருக என வரவேற்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பெருமதிப்பிற்குரிய கவிஞர் கலாநிதி. இ.முருகையன் அவர்களே, உலகறிந்த தமிழ்க் கவிஞராகிய தாங்கள் கல்விப் பணிப்பாளராக, மொழியியலாளராக, பல்கலைக் கழகப் பதிவாளராகப் பல்வேறு பெரும் பதவிகளை வகித்த பெருமகன். மிக நீண்ட காலமாக எமது கல்லூரியுடன் நெருக்கம் கொண்டவர். 1956 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட எமது கல்லூரியின் வெள்ளிவிழா மலரில் "ஈழத்தீவு" என்ற தலைப்பில் தங்கள் கவிதை அமைந்திருந்தது. இன்று "சோமாஸ்கந்தன்" சஞ்சிகைக்காக தாங்கள் மதிப்பீட்டுரை

ஆற்றுவதால் சஞ்சிகையின் பெருமை வியாபகமுற்றுள்ளது. தங்களது வரவு கண்டு மகிழ்வதுடன் தங்களை வருக வருக என வரவேற்பதில் பேருவகையடைகின்றோம்.

இன்றைய நிகழ்விலே நிறுவுநர் நினைவுப் பேருரையாற்ற வந்துள்ள திரு.க.சிதம்பரப்பிள்ளை அவர்களே, கல்லூரியில் கல்வி கற்கும் காலத்தில் அதிபர் ஆசிரியர்களுடைய பேரபிமானத்தைப் பெற்றுச் சிறந்த மாணவனாகக் கல்லூரியில் இலங்கிய தாங்கள், எழுதுநர் சேவையில் இணைந்து படிப்படியாகப் பதவியுயர்வுகள் பெற்று இன்று கோப்பாயப் பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகச் செயற்படுவது கண்டு மகிழ்வடைகிறோம். எமக்கும் எம் பிரதேச மக்களுக்கும் உயரிய சேவையாற்றும் தங்களை இந் நன்நாளில் வாழ்த்தி வரவேற்பதில் பெருமையடைகின்றோம்.

சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள மதிப்பிற்குரிய கோப்பாய்க் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு இ சிவஞானசுந்தரம் அவர்களே, எமது கல்விக் கோட்டப் பாடசாலைகளின் மேம்பாட்டிற்காக மிகுந்த சுறுசுறுப்புடனும் ஊக்கத்துடனும் பணியாற்றி வருகிறீர்கள். தங்களது ஆசிரிய சேவைக் காலப்பகுதியில் எமது கல்லூரியிலும் ஆசிரியராகக் கடமையாற்றிச் சிறப்பித்திருந்தீர்கள். எங்கள் கல்லூரியின் தேவைகளை நிறைவேற்றுவதில் முழுமனதுடன் தாங்கள் காட்டும் ஒத்துழைப்புக்களுக்கு நன்றி கூறுவதுடன் தங்களை இந்நன்நாளில் வருக வருக என வரவேற்பதில் பெருமகிழ்வடைகிறோம்.

## சமர்ப்பணம்

வள்ளலார் அமரர் மழவராயர் கந்தையா அவர்கள் தீர்க்க தரிசனத்தோடு மேற்கொண்ட பணிகள் எமது பிரதேசத்தின் விருத்திக்கு அடி நாதமாக அமைந்துள்ளன. ஆன்ம மேம்பாட்டிற்காக விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமான் ஆலயத்தையும் , அறிவு மேம்பாட்டிற்காக ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி ஆகிய இக் கலைக்கூடத்தையும், பசிப்பிணி போக்குவதற்காக அன்ன சத்திரத்தையும் நிறுவியதோடல்லாமல் அவை செவ்வனே இயங்கும்பொருட்டு அசையும், அசையாச் சொத்துக்களையும் அவ்வமைப்புக்களுக்கு உரித்தாக்கினார்கள்.

“உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது” என்ற சுவாமி விபுலாநந்தரின் கூற்றுக்கமைய, இதய சுத்தியோடு அவ் உத்தமரின் உணர்வுகளுடன் எங்கள் உணர்வுகளை வலுப்படுத்தவும் அவரது இலட்சிய வழியில் பயணித்து முதன்மைபெற்ற மாணவர்களுக்குப் பரிசில் வழங்குவதற்கும் , நிறுவுநருடைய பிறந்த தினமாகிய செப்ரெம்பர் பத்தாம் நாளாகிய இந்நாளினைத் தெரிவு செய்ததோடு இந்நன்நாள் நிகழ்வுகள் யாவற்றையும் அவருக்குச் சமர்ப்பணம் செய்வதில் மகிழ்வடைகிறோம்.

## மாணவர்கள்

எமது கல்லூரியில் ஆரம்ப நிலையான 1 - 5 வரையிலான தரங்களில் 520 மாணவர்களும், கனிஷ்ட இடைநிலையான 6 - 9 வரையான தரங்களில் 599 மாண வர்களும் , சிரேஷ்ட இடைநிலையான 10 - 11 வரையான தரங்களில் 339 மாணவர்

களும், உயர்நிலைப் பிரிவான 12 - 13 வரையிலான தரங்களில் 275 மாணவர் களுமாக மொத்தம் 1733 மாணவர்கள் பயில்கின்றனர்.

## ஆசிரியர்கள்

எமது பாடசாலை மாணவர்களின் கற்கும் ஆற்றலை மேம்படுத்தி அவர்களின் உயர்விற்காக வழிகாட்டி வருகின்ற ஆசிரிய ஆளணியினருள் 22 டிப்ளோமா பட்டதாரி ஆசிரியர்களும், 7 பட்டதாரி ஆசிரியர்களும், 34 பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் ஒரு தகுதிகாண் ஆசிரியருமாக மொத்தம் 64 பேர் நிரந்தர ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றனர். இவர்களுடன் கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள் நால்வரும் ஆசிரிய ஆளணியினருடன் இணைந்து பணிபுரிகின்றனர்.

## புதிதாக வருகைதந்தோர்

திரு.து.கனகசபேசன், திரு.எஸ்.மோகனதாசன், திரு.பொ.சற்குணானந்தன், திருமதி.ஞா.பத்மநாதன், திருமதி.ஜெ.இராஜமகேந்திரன், செல்வி.செ.விஜயநாயகி, திரு.பொ.பரஞ்சோதி, ஆகியோர் எமது பாடசாலையில் கல்விப் பணியை மேற்கொள்ள வருகை தந்துள்ளார்கள். இவர்களை வரவேற்பதுடன் அவர்களது சேவை சிறப்புற அமைய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

மேலும் தற்காலிக நியமனம்பெற்று எமது கல்லூரியிற் கல்வி கற்பித்துவந்த திரு எஸ்.லலீசன் அவர்கள் தற்போது நிரந்தர நியமனம்பெற்று மிகச் சிறப்பான முறையில் தமது சேவையினை ஆற்றி வருகின்றார். இவரையும் நாம் வரவேற்பதுடன் மேலும் அவரது சேவை சிறப்புற அமைய வாழ்த்துகிறோம்.

இவர்களுடன் எமது கல்லூரியில் கல்வி கற்பித்து ஆசிரியர் கலாசாலைக்குச் சென்று தமது பயிற்சியினை மேற்கொண்டு மீண்டும் எமது பாடசாலைக்கு வருகை தந்துள்ள செல்வி.எஸ்.தாரணி, திருமதி.கோ.சுதாயினி செல்வி.எஸ்.சிவமலர், திருமதி.ச.செல்வகுமார். திருமதி.சு.பேமராஜ் திருமதி.வ.சுதா, செல்வி.எஸ்.தர்மானந்தி, செல்வி.செ.செல.வரூபா, திரு.வி.செவ்வந்திநாதக்குருக்கள், திருவ.செந்தூரன் ஆகியோர் ஆசிரிய பயிற்சியினை முடித்துக் கொண்டு எமது பாடசாலையில் தொடர்ந்தும் கல்விகற்பிக்க வருகை தந்துள்ளார்கள். இவர்கள் அனைவரையும் வரவேற்பதோடு அவர்களது சேவை சிறப்புற அமைய வாழ்த்துகிறேன்.

## நலன்புரி ஆசிரியர்கள்

மிக நீண்டகாலமாக ஆசிரிய ஆளணிப் பற்றாக்குறையானது தவிர்க்க முடியாத ஒன்றாக அமைந்தது. இவ்வேளையில் எமது பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் உற்ற நேரத்தில் கைகொடுத்து உதவிசெய்யத் தாமே மனமுவந்து முன்வந்தார்கள். இந்த வகையில் செல்வி ந. விஜித்திரா, செல்வி.க.உஷாந்தினி, செல்வி அ.விஜயலட்சுமி, திரு.க.கோமளேஸ்வரன், செல்வி.செ.மதிவதனா, செல்வி.செ.சுகிர்தா, திருமதி. க.சந்திரகுமார, செல்வி த.ஜெயப்பிரியா முதலான ஆசிரியர்கள் தொண்டர் ஆசிரியர்களாக

அர்ப்பணிப்புணர்வுடன் சேவையாற்றி வந்தனர். தற்போது , தர்மகர்த்தா சபையினரின் உதவியுடன் மெல்லக் கற்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் முகமாக மேற்கண்ட ஆசிரியர்களுடன் செல்வி .செ.கிருஷ்ணவேணி, செல்வி.எஸ்.சகுந்தலாதேவி, செல்வி.பா.சுலோஜனா, ஆகிய ஆசிரியர்களும் நலன்புரி ஆசிரியர்களாகச் சேவையாற்றிப் பாடசாலையின் கல்வி முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டு வருகின்றார்கள். இவர்கள் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

## இடமாற்றலாகிச் சென்றோர்.

திருமதி. ஜெ.சிவானந்தன் அவர்கள் பட்டதாரியும், பயிற்றப்பட்ட வர்த்தக ஆசிரியருமாவார். இவர் குறுகிய காலமே எமது பாடசாலையில சேவையாற்றியபோதும் சிறந்த முறையிற் தமது சேவையினை மேற்கொண்டிருந்தார். தற்போது இவர். நீர்வேலி றோ.க.த.க பாடசாலைக்கு இடமாற்றம்பெற்றுச் சென்றுள்ளார். இவர் தமது சேவையின் போது எமது கல்லூரிக்கு ஆற்றிய பணிகளுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு இ.பாலச்சந்திரன் அவர்கள் கலைப் பட்டதாரி ஆசிரியராவார் . இவர் உயர்தர மாணவர்களுக்குப் புவியியல் பாடத்தினையும் , சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்களில் சமூகக்கல்வி , புவியியல் போன்ற பாடங்களினையும் கற்பித்து வந்தார். இவரது சிறந்த சேவைக்கு பொதுப் பரீட்சை முடிவுகளே தக்க சான்றாக அமைகின்றன. தற்போது கிளிநொச்சி, பூநகரி ம.வி இற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார் . இவர் ஏறத்தாள 3 வருடங்கள் தமது சேவையினை மிகச் சிறந்த முறையில் கல்லூரியில் ஆற்றியுள்ளார். இவரது சேவைகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

செல்வி தருமானந்தி சின்னத்துரை அவர்கள் ஆசிரியர் பயிற்சியினை நிறைவு செய்த பின்னர் சில வாரங்கள் சேவையாற்றினார். தற்போது சிறுப்பிட்டி அ.த.க பாடசாலைக்கு ஆங்கில ஆசரியர் இல்லாத நிலையில் அங்கு இடமாற்றலாகிச் சென்றுள்ளார் . இவர் எமது பாடசாலையில் இருந்த காலப்பகுதியில் சிறந்த முறையில் கல்வி போதித்து வந்தார் . இவரது சேவைகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

திருமதி லதா ஸ்ரீலபேந்திரா அவர்கள் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர். இவர் ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களை எமது மாணவர்களுக்குப் போதித்து வந்தார். தற்போது உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு இடமாற்றலாகிச் சென்றுள்ளார். இவர் தமது சேவையினை சிறப்புற ஆற்றியமைக்கு எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செல்வி மணிவதனி சுப்பிரமணியம் அவர்கள் வர்த்தகப் பட்டதாரி . உயர்தர வகுப்பு மாணவர்களிற்கு வர்த்தகம் , கணக்கியல் பாடங்களையும் , சிரேஷ்ட இடைநிலை மாணவர்களுக்கு கணக்கியல் , சமூகக்கல்வி பாடங்களையும் போதித்து வந்தார். தற்போது மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றலாகிச் சென்றுள்ளார். இவர் தமது சேவைக்காலத்தின் போது சிறப்பாகச் செயற்பட்டு வந்தார். அவரது சேவைகளுக்கு எமது நன்றிகள்.

திரு தம்பையா சிவாகரன் அவர்கள் ஓர் பயிற்றப்பட்ட விவசாய ஆசிரியர். சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்களில் விவசாயப் பாடத்தினையும், சமயம் , தமிழ் ஆகிய பாடங்களை ஏனைய தரங்களிலும் கற்பித்து வந்தார். இவரது சிறந்த சேவைகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

திரு பாக்கியநாதன் சத்தியநாதன் அவர்கள் பயிற்றப்பட்ட ஆரம்ப ஆசிரியர். தற்காலிக இணைப்புப் பெற்றுக் கல்லூரியிற் சேவையாற்றி வந்தார். சிறந்த முறையில் ஆரம்பப் பிரிவு மாணவர்களிற்கு கற்பித்து வந்த இவர் தற்போது தனது நிரந்தரப் பாடசாலையாகிய முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திற்குச் சென்றுள்ளார். இவரது சேவைகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

மேலும் எமது பாடசாலையில் எழுதுவினைஞராகக் கடமையாற்றிய திருமதி விஜயலஷ்மி லிங்கநேசன் அவர்கள் தற்போது வெளிநாடு சென்றுள்ளார். கடந்த ஏழு வருட காலமாக கல்லூரியில் அலுவலக நிர்வாகத்தில் நிதித் துறைசார்ந்த அனைத்து நடவடிக்கைகளைப் பேணுவதில் பூரண ஒத்துழைப்பு வழங்கியதுடன் கல்லூரியின் தொகை மதிப்பு, வருடாந்த நிதித் திரட்டு என்பவற்றை பூரணமாக்குவதிலும் முழு ஒத்துழைப்பை நல்கினார். இவரது சேவைக்கு நன்றி கூறுவதோடு வாழ்க்கையில் அனைத்துச் செல்வங்களையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

## ஓய்வு பெற்றோர்

எமது கல்லூரியின் சிரேஷ்ட இடைநிலைப் பிரிவிற்கான பகுதித் தலைவராக , அளப்பரிய சேவையாற்றிய திருமதி யோ.புண்ணியமூர்த்தி அவர்கள் 14.07.2003 அன்று, அகவை அறுபது எய்தப் பெற்று , அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் . கலைப் பட்டதாரியாகிய இவர் 19 வருடங்களுக்கு மேலாக எமது கல்லூரி ஆசிரியராகச் செயற்பட்டு தமிழ் , சமூகக்கல்வி , புவியியல் போன்ற பாடங்களைப் போதித்ததோடல்லாமல் இணைப்பாட விதானச் செயற்பாடுகள் யாவற்றிலும் தன்னை இணைத்து எமது கரங்களுக்கு வலுச் சேர்த்தார்.

பகுதித் தலைவர் என்ற பதவிக்கு இலக்கியமாக இவர் செயற்பட்டார் எனின் மிகையாகாது. இவரது அரச சேவைக்காலம் முடிவுற்றாலும் தாமாகவே முன்வந்து தொடர்ந்தும் சமூகப் பணியாகக் கல்லூரிக்கான தனது சேவையை வழங்கி வருகிறார்.

அர்ப்பணிப்பு உணர்வுடன் தொழிற்பட்டு வருகின்ற அன்னாரின் சேவையைக் கண்டு தலை வணங்குகின்றோம். நீண்ட ஆயுளும் நிறைந்த செல்வமும் பெற்றுப் பல்லாண்டு வாழ்க! என வாயார வாழ்த்துகின்றோம் .

## நீங்காத நினைவலைகள்

எமது கல்லூரியின் 1976 ஆம் ஆண்டின் சில காலப் பகுதிகட்கு அதிபராகவும், அதற்கு முற்பட்ட காலப் பகுதிகளில் உப அதிபராகவும் , ஆசிரியராகவும் பணியாற்றிய திரு நடராஜா ஆறுமுகதாசன் (சுதுமலை) அவர்கள் 21.08.2003 இல் அவுஸ்ரேலியாவின்

மெல்பேண் நகரில் அமரத்துவம் எய்தினார் என்ற செய்தியை அறிந்து மன வேதனையுறுகிறோம் .

1950 களில் அதிபர் அமரர் எஸ். குமாரசாமி அவர்களுடைய காலப்பகுதியில் ஆசிரியராகக் கல்லூரியில் இணைந்து கொண்ட இவர், பூமி சாத்திரம் , தமிழ் போன்ற பாடங்களைப் போதித்துப் பெருமை பெற்றார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையச் சோமாஸ்கந்தப் பெருமானின் பாதக் கமலங்களைச் சேவிக்கிறோம் .

## தர்மகர்த்தா சபை

நிறுவுநர் அவர்கள் எமது கல்லூரிக்கு உரித்தாக்கிய அசையும் , அசையாச் சொத்துக்களை பாதுகாத்துப் பரிபாலனம் செய்யும் பொறுப்பு தர்மகர்த்தா சபையைச் சார்ந்ததாகும்.

எமது வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் பதவிவழியாக இச் சபையின் தலைவராகச் செயற்பட்டு , தொழிற்பாடுகளை ஒருங்கிணைத்து சொத்துக்களில் இருந்து உச்சப் பயன்பாட்டை அடையக் கூடிய வகையில் சபையை வழிநடத்துவது போற்றுதற்குரியதாகும்.

வள்ளலாரின் அறக்கட்டளை நிதியிலிருந்து சோமாஸ்கந்தருக்குத் தினமும் இரு வேளைப் பூசைகள் , அறுபத்துமூவரது குரு பூசைகள் , அத்திவார தினம் , வித்தியாரம்ப தினம் , மெல்லக் கற்போரின் கல்வி மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் , பல்வேறு மட்ட மாணவர்களுக்கென திருக்குறளை அடிப்படையாகக் கொண்ட போட்டி நிகழ்வுகள், பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில்கள் மற்றும் கல்லூரியின் பௌதீகவள அபிவிருத்திப்பணிகள் போன்ற பல நற் காரியங்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வளளலாரால் நிறுவப்பட்டதும் அவரது நினைவுச் சின்னமாக விளங்குகின்றதுமான இப் பிரதான மண்டபத்தை மீளப் புனரமைக்கும் பணி தறபோது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இப் பணியினை முன்னெடுத்துச் செல்வதற்கு தர்மகர்த்தா சபை கணிசமான நிதி உதவியினை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கட்டட வாடகைஒப்பந்தங்கள் , சட்ட ஆலோசனைகள் போன்றவற்றில் சபைக்கு உதவி வருகின்ற சட்டத்தரணிகள் திரு சி.சிவநேசன் , திரு சி.வீரகத்திப்பிள்ளை ஆகியோருக்கு எமது நன்றிகள். எம்முடன் சேர்ந்து செயற்குழுவில் அங்கம் வகிப்பதோடு தொழிற்பாடுகள் யாவற்றிலும் முழு மனதோடு செயற்படுகின்ற பிரதி அதிபர்கள் திரு க.சுப்பிரமணியம் , திருமதி சி.சிதம்பரநாதன் ஆகியோருக்கும் மற்றும் திரு த.விசுவலிங்கம் அவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றி.

## பழைய மாணவர் சங்கம்

கல்லூரியின் வளர்ச்சியில் தமது மூச்சையும் , பேச்சையும் அர்ப்பணித்த உயிர்த்துடிப்புள்ள பழைய மாணவர்களின் சங்கமமாகப் பழைய மாணவர் சங்கம் அமைந்திருப்பது காலத்தின் கொடையாகும். இந்த வகையில் தாய்ச் சங்கத்துடன் இணைந்து கனடாக்கிளை , லண்டன் கிளை , கொழும்புக்கிளை ஆகிய அமைப்புக்களும உற்சாகமாகச் செயற்பட்டு வருகின்றன.

பொற்குடத்துக்குப் பொட்டிட்டது போன்று , எங்கள் கல்லூரிக்கெனப் பழைய மாணவர் சங்கத்தால் அமைக்கப்பெற்ற, முகப்பு வாயிலின் திறப்பு விழா 20. 04 .2003 இல் சிறப்பாக நடைபெற்றது. இவ் அபிவிருத்தி வேலையைச் சிறப்பாக மேற்கொண்ட பழைய மாணவர் சங்கத்திற்கும் , குறிப்பாக அதன் விசேட செயற்குழுவிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கனடாக்கிளையினர் மிகவும் உற்சாகமாகச் செயற்படுவது எமக்குப் பெரும் உந்துசக்தியை அளிக்கின்றது. அவர்தம் அரிய முயற்சியால் 15 கணனிகள் கனடாவில் இருந்து எமது கல்லுரியின் தகவல் தொழிநுட்ப மையத்திற்கு ( Information Technology Centre ) வழங்கப்பட்டதோடல்லாமல் அவை வலைப்பின்னல் (Net work) தொடர்பிலும் இணைக்கப்பட்டுள்ளன. இப் பெருமை மிகு கைங்கரியத்தை ஆற்றிய பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளையினருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஜேர்மன் நாடடில் தெழிலதிபராக விளங்கும், எங்கள் கல்லூரியின் பழைய மாணவரான திரு .அ . பதியமரன் அவர்கள் கடந்த வருடம் ஒலிபெருக்கி உபகரணங்கள் கொண்ட தொகுதி ஒன்றை அன்பளிப்புச் செய்திருந்தார். இவ் அன்பளிப்பு முழுமையடையாமையை அறிந்து, இவ்வாண்டில் நேரடியாகக் கல்லூரியுடன் தொடர்பு கொண்டு மேலும் ஒரு தொகுதி ஒலிபெருக்கி உபகரணங்களை வழங்கியுள்ளார். அத்துடன் எமது கல்லூரியில் சோமாஸ்கந்தரின் ஆலயத்தை புது மெருகுடன் அமைக்கும் பொறுப்பை மனமுவந்து ஏற்றுள்ளார். கல்லூரியின்பால் மிகுந்த அக்கறை கொண்டு செயற்படுகின்ற திரு அ. பதியமரன் அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

மேலும் கல்லூரியின் பழைய மாணவர்சங்கக் கிளைகள் ஜேர்மன் , பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுத் தொழிற்படவேண்டுமென எதிர்பார்க்கிறோம் .

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

அண்மையில் கூடிய பாடசாலை அபிருத்திச் சங்கத்தின் பொதுச்சபையானது புதிதாக ஒரு செயற்குழுவை அமைத்துள்ளது. RRAN நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் சங்கம் மேற்கொண்ட, கல்லூரிப் பிரதான மண்டபத்தின் புனரமைப்புப் பணிகளின் முதற்கட்டம் நிறைவேறியுள்ளது.

GTZ நிறுவனத்தின் புனரமைப்புத் திட்டத்தில் இரண்டு மலசலகூடத் தொகுதிகளும் அதற்கு மேலாகப் பிரதம பகுதிக்கான மலசலகூடத்தொகுதி யொன்றும் அமைக்கப்பெற்றுள்ளது. கட்டிடப் புனர் நிர்மாணத்தின் GTZ இன் ஆறு இலட்சத்து எண்பதாயிரம் ரூபா மதிப்பிடடில் 20' x 60' கொண்ட திட்டத்துக்குப் பதிலாக 3 வகுப்பறைகள் கொண்ட தொகுதியொன்றும் , அத்துடன் அச்செயற்திட்டம் விஸ்தரிக்கப்பட்டு மொத்தம் 13 இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரம் ரூபா மதீப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகளும், பகுதித் தலைவர் அறை , விளையாட்டு அறை (Sports Room) என்பவற்றையும் அமைக்கும் பணிகளை சங்கத்தினர் பொறுப்பேற்று நடத்தி வருவது பாராட்டிற்குரியதாகும். இதே வேளை இப்பணிகளுடன் திறந்த வெளி அரங்கத்தைப் புனரமைக்கும் பணிகளும் சங்கத்தால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இச்செயற்பாடுகள் பூரணத்துவம் பெறுவதற்கு தர்மகத்தா சபையினர் பூரண ஒத்துழைப்பினை நல்கி வருகின்றனர் .

கல்லூரியின் நலன் விரும்பியாக சங்கத்தில அங்கத்துவம் பெற்றுச் செயற்குழு உறுப்பனராகவும் தொழிற்பட்டு வருகின்ற சமூக சேவகராகிய திரு எஸ். பாலசுப்பிரமணியம் அவர்களின் அர்ப்பணிப்பான பணிகள் போற்றுதற்குரியனவாகும்.

## நூல்நிலையம்

" Books are to be read , chewed , swallowed Digested "

-Thomas Carlyle

எமது நூல்நிலையமானது 1995 இல் இடம் பெற்ற யுத்த அனர்த்தங்களில் முற்றாக அழிந்த பின்பு, தற்போது சுமார் 1800 ற்கு மேற்பட்ட நூல்களைத் தன்னகத்தே கொண்ட சிறந்த நூலகமாக மிளிர்ந்து நிற்கிறது . நூலக வளர்ச்சி கருதி நூலகப் பொறுப்பாசிரியர், நூலக உதவியாளர் ஆற்றும் பணிகளையும் மனமாரப் பாராட்டுகிறேன் .

வழமை போன்று இவ்வாண்டும் நூலக வாரம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதன் அங்குரார்ப்பண நிகழ்வின் போது யாழ். ஸ்ரீ லங்கா புத்தகசாலையினரால் நூற்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது . அங்குரார்ப்பண நிகழ்வின் போது கல்லூரியின் பெருமை மிகு பழைய மாணவரும் , பழைய மாணவர் சங்க லண்டன் கிளையின் அமைப்பாளரும், தலைவரும் , ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டப நிறுவுநருமாகிய திரு வே.சிவசுந்தரம் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார் . கல்லூரியின் மேம்பாட்டுப் பணிகளுக்கென ரூபா நூறாயிரத்தினை வழங்கி உதவியுள்ளார். இவரது வருகைக்காகவும் அறப்பணிகளுக்காகவும் பெருமை கொள்வதோடு , கல்லூரியின் சார்பில் எமது நன்றிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம் .

மேலும் நூலக விருத்திப் பணிகளில் தமது அர்ப்பணிப்பான சேவைகளை வழங்கி வருகின்ற கல்வியியற் கல்லூரியின் முகிழ்நிலை ஆசிரியர்களையும் பாராட்டுகிறோம்.

## பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள்

கடந்த ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசிற் பரீட்சையில் ஐந்து மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள் . க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் 131 மாணவர்கள்

தோற்றி 33 மாணவர்கள் 6 பாடங்களிற்கு மேல் சித்தியடைந்து க.பொ.த உயர்தர வகுப்பிற்கு அனுமதி பெற்றுள்ளனர் . இவ்வாறான திருப்தியற்ற பெறுபேறுகளைக் கொண்டிருந்த போதிலும் 2002 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையின் அடிப்படையில் 13 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளனர் . இவர்களில் செல்வன் எஸ்.முரளிதாஸ் அவர்கள் வர்த்தகப் பிரிவில் 3A இனைப் பெற்று வர்த்தகத் துறைக்கு பெருமை தேடித்தந்துள்ளார் . அதே போன்று செல்வி ம. ஜனார்த்தனி அவர்கள் 3A இனைப் பெற்று கலைப்பிரிவிற்கு பெருமை தேடித் தந்துள்ளார் . மேலும் அண்மையில் வெளிவந்த 2003ஆம் ஆண்டிற்கான உயர்தரப் பரீட்சையில் 79 மாணவர்கள் 3 பாடங்களிலும் சித்தி அடைந்துள்ளனர் . இம் மாணவர்கள் அனைவருக்கும் , பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## இணைப் பாடவிதானச் செயற்பாடுகள்

ஒரு கல்லூரியின் வளர்ச்சியில் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளின் பங்கு மிக முக்கியமானதாகும் . அந்த வகையில் கல்லூரி ஆரம்பமாவதற்கு முன்னர், காலையில் உடலாயத்தச் செயற்பாடானது (Keep Fit)மாணவர்களினால் தினமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மாணவர்களது ஆளுமை விருத்திக்கு விளையாட்டின் மூலம் பெறும் பயனகள் இன்றியமையாதனவாகும் . இதனடிப்படையில் எமது பாடசாலையில் கரப்பந்தாட்டம், உதைப்பந்தாட்டம் , கிரிக்கெற் , வலைப்பந்தாட்டம் , உடற்பயிற்சி , மெய்வல்லுநர் போட்டி , கிளித்தட்டு போன்ற பல்வேறு விளையாட்டுக்களில் பயிற்சிபெற்ற மாணவர்கள் பாடசாலை மட்டங்களிலும் , கோட்ட மட்டங்களிலும் , வலய மட்டங்களிலும் நடைபெற்ற போட்டிகளில் பங்கு பற்றி பல்வேறு பரிசில்களைப் பெற்றுள்ளனர் . இவர்களுள் கரப்பந்தாட்ட (19 வயது ஆண்கள்) அணியினர் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டியில் பங்கு பற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும் . மேலும் உடற்பயிற்சிப் போட்டியில் ஆண் , பெண் ஆகிய இரு பிரிவினரும் கோட்ட மட்டப் போட்டியில் வெற்றி பெற்று வலய மட்டப் போட்டியில் பங்கு பற்றி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

ஏனைய போட்டிகளான தமிழ்த்தினப் போட்டி , ஆங்கிலதினப் போட்டி , கணித , விஞ்ஞான குறு வினாப் போட்டி , சமூகக்கல்வி வரலாற்றுப் போட்டி , சங்கீதம் , நடனம் போன்ற போட்டிகளிலும் மாணவர்கள் ஊக்கமுடன் பங்கு கொண்டு பல இடங்களினைப் பெற்றுள்ளனர் . இவர்கள் அனைவரையும் வழிப்படுத்தி வருகின்ற ஆசிரியர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

எமது கல்லூரியின் புறச் செயற்பாடுகளான சாரணர் ஆண்கள் , பெண்கள் பிரிவினர் , நலன்புரிச் சேவையினர் குறிப்பிடத்தக்க அளவிற்கு மிகச் சிறப்பான செயற்பாடுகளை ஆற்றி வருகின்றனர். இவர்கள் சமூக சேவையினையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளனர் . இவர்கள் அனைவரும் பாடசாலையில் நடைபெறுகின்ற நிகழ்வுகள் யாவற்றிலும் , ஏனைய பொதுப்பணிகளிலும் சிறப்பாகச் சேவையாற்றி வருகின்றனர் . நலன் புரிச் சேவையினர் பாடசாலை ஆரம்பமாகும் வேளையிலும் , பாடசாலை முடிவடையும் நேரத்திலும் போக்குவரத்திற்கு இடையூறு எதுவுமின்றி மாணவர்கள் செல்வதற்கு உதவியாக, தமது பணியினைச் செய்து வருகின்றனர் . இவர்களுக்கும் , இவர்களை வழிநடத்தி வருகின்ற ஆசிரியர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

## சட்டைப் பைச் சின்னம் அறிமுகம்

கல்லூரியின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் இவ் ஆண்டு தொடக்கம் மாணவர்களுக்குச் சட்டைப் பை இலச்சினை (Shirt Pocket Badge) அறிமுகம் செய்யப் பட்டுள்ளது. இது கல்லூரியின் தனித்துவத்தைப் பேணுவதோடு, கல்லூரி மீதான பற்றை அதிகரிக்கச் செய்யும் செயற்பாடாக அமையும் எனக் கருதுகிறேன்.

## ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்

ஆங்கில மொழியின் முக்கியத்துவம் மீள உணரப்பட்டு வரும் நிலையில் தரம் 6 மாணவர்களுக்காக பாடசாலை நேரம் தவிர்ந்த நேரங்களில் ஆங்கில மொழி மூலமாகப் பாடங்களைப் போதிக்கும் பரீட்சார்த்த முயற்சியினை மேற்கொண்டுள்ளோம். இம் முயற்சி மாணவர்களதும் , பெற்றோர்களதும் பெரு வரவேற்பைப் பெற்றுள்ளது. இம் முயற்சி தொடர்ந்தும் வெற்றியளிக்கும் பட்சத்தில் ஆங்கில மொழி மூலமான போதனைகள் பாடசாலை நேரத்தில் கலைத்திட்டக் கற்கையாக அமுல் செய்யப்பட நடவடிக்கைகள் எடுக்கவுள்ளேன்.

இக் கற்கை நெறிக்காகத் தற்போது உழைக்கின்ற இணைப்பாளர் , ஆசிரியர்கள், மாணவர்கள் யாவரையும் பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

## கருத்தாடற் களம்

எங்கள் கல்லூரியின் மேம்பாடு கருதி , ஆசிரியாகள் , மாணவர்கள் , பெற்றோர்கள் என்ற முத்தரப்பாருக்குமுரிய இடைவினையுறவுகளை வலுப்படுத்தும் முகமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் கருத்தாடற் கள நிகழ்வுகளை ஒழுங்கு செய்து வருகிறோம்.

இச் செயன்முறையானது (Process) எதிர் காலத்தில் பாடசாலை விருத்திச் செயற்பாடுகளில் கூடிய வெளியீடுகளை (Out put) ஏற்படுத்துமென எதிர்பார்க்கிறோம். இம் முயற்சியில் பெற்றோருடைய முழுமையான பங்களிப்பு அவசியமானது என்பதை இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

## நிறைவுரை

இவ்வறிக்கையினை நிறைவு செய்வதற்கு முன்னர் எமது பாடசாலையின் செயற்பாடுகளுக்கு ஆலோசனை வழங்கியும் , ஆற்றுப்படுத்தியும் வருகின்ற கல்விப் பணிப்பாளர் , உதவிக் கல்விப்பணிப்பாளாகள் , கணக்காளர் , திட்டமிடற்பகுதி உத்தியோகத்தர்கள் மற்றும் திணைக்களம் சார்ந்த அலுவலர்கள் யாவருக்கும் எமது நன்றிகள்.

முதன்மை ஆசிரியர்கள் பல்வேறு வகைகளில் பரந்துபட்ட அளவில் தமது ஒத்துழைப்பை நல்கி வருகின்றனர். அவர்கள் யாவர்க்கும் எமது நன்றிகள்.

நிறுவுநர் நினைவாகத் தர்மகர்த்தா சபையால் நடத்தப்படும் மாவட்ட மட்ட திருக்குறள் போட்டி நிகழ்வின் போது நடுவர்களாகச் செயற்பட்ட கலாநிதி திரு க.சொக்கலிங்கம் (சொக்கன்), திரு தி . செல்வமனோகரன் , திரு அ . காந்தரூபன் ஆகியோருக்கும் எமது நன்றிகள்.

எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு என்றும் கை கொடுத்து உதவிவருகின்ற பிரதி அதிபர்கள் , பகுதித் தலைவர்கள் , பாட இணைப்பாளர்கள் , ஆசிரியர்கள் , நூலக உதவியாளர்கள் , ஆய்வுகூட உதவியாளர்கள் , அலுவலக உத்தியோகத்தர்கள் , சிற்றூழியர்கள் யாவர்க்கும் எனது மனமார்ந்த நன்றி

இன்றைய உதயன் நாழிதழில் நிறுவுநரின் பெருமைகளைத் தாங்கிய மலரைப் பிரசுரிக்க உதவிய விளம்பரதாரர்களுக்கும் , கருத்தாழம் மிக்க செய்திகளை வழங்கிச் சிறப்பித்த பெரியோர்களுக்கும் எமது நன்றிகள்.

மேலும் இன்றைய இவ் விழாவானது இனிதே இடம் பெற ஒத்துழைப்பு நல்கிய யாவரையும் நன்றியுணர்வுடன் கரம்பற்றிக் கொள்கிறோம். உலகின் மாறி வரும் நியதிகளுக்கு ஈடு கொடுக்க வல்ல சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை நம் அனைவரையும் சார்ந்ததாகும். எல்லாம் வல்ல சோமாஸ்கந்தப் பெருமானுடைய திருவருளும் உங்கள் எல்லோருடைய முழுமையான ஒத்துழைப்பும் எம்மை வெற்றியின் பாதையில் இட்டுச் செல்லும் என்ற நம்பிக்கையுடன் இவ்வறிக்கையினை நிறைவு செய்கிறேன் .

**நன்றி**
**வணக்கம்**

10 . 09 . 2003

வ . ஆறுமுகம்
அதிபர்

# நயத்தலும் விமர்சித்தலும் (இரசித்தலும்)

**இலக்கிய ஆசிரியர்களையும் உயர்வகுப்பு இலக்கிய மாணவர்களையும் நோக்கிய ஒரு குறிப்புரை**

**கார்த்திகேசு சிவத்தம்பி**
*தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்*
*(யாழ் பல்கலைக்கழகம்)*

இலக்கியம் கற்பிக்கும் பொழுதும் , கற்கும் பொழுதும் நாம் எதிர் நோக்கும் இருபதங்கள்

நயத்தல்
விமர்சித்தல் என்பனவாகும்.

விமர்சித்தல் என்பது மேலைநாட்டு மரபு வழி வந்த ஒரு நோக்கு முறைமை. நயத்தல் என்பது ஏற்கனவே நமது மரபிலிருந்த ஒரு நடைமுறையே. இது ஆங்கிலத்தில் கூறப்படும் Appreciation (அப்பிரிசியேஷன்) என்பதோடு இணைந்து நிற்பது. ஆனால் ஒரேயொரு வித்தியாசம் உண்டு. மேலை நாட்டு மரபில் "அப்பிரிசியேஷன்" என்பது உரைப்பகுதிகளையும் (சிறுகதை , நாவல் , கட்டுரை) உள்ளடக்கும். தமிழில் நயத்தல் என்பது கவிதைக்குமாத்திரம் உரிய ஒரு செயற்பாடாகவே கொள்ளப்படும் ஒரு வழக்கு நம்மிடையே உண்டு.

உண்மையில் நயத்தல் என்னும் செயற்பாட்டை மாணவரிடத்து ஏற்படுத்த முனையும் பொழுது நாம் சொல்வது ஒரு குறிப்பிட்ட இலக்கிய பாடத்திலுள்ள (Text) இரசிக்கப்படவேண்டிய விடயங்களை அவர்களுக்கு முன்னிறுத்திக் காட்டுவதேயாகும். அதாவது இந்தப் பகுதியிலுள்ள "இந்த இந்த" விடயங்களைப் பாருங்கள் இவை அப்பாடப்பகுதி ஏற்படுத்தும் மகிழ்வுக்கும் ஆழ்நோக்குக்கும் முக்கியமானவை என்று அவ்வப்பகுதிகளை முன்னிலைப் படுத்துவதேயாகும்.

இந்த முயற்சி மிகுந்த கவனத்துடன் மேற்கொள்ளப்படல் வேண்டும். சங்கீத ஆசிரியர் ஒருவர் ராகத்தின் ஆரோகண அவரோகணத்தையும் அதன் ஜீவஸ்ருதியையும் காட்டுவது போல இலக்கிய ஆசிரியரும் குறித்த பாடத்தின் அமைப்பொழுங்கையும் இந்த அமைப்பொழுங்கின் உணர் நிலையையும் எடுத்துக் காட்டல் வேண்டும்.

இதற்கு இரண்டு விடயம் முக்கியம்.

- ஒன்று - தேர்ந்தெடுக்கப்படும் பகுதி
  உண்மையிலேயே நல்ல இலக்கியரசனையுடையதாக இருத்தல் வேண்டும். (அப்படி இல்லாததைத் தேர்ந்தெடுக்கக் கூடாது)

- மற்றது - ஆசிரியர் அப்பகுதியை மிகமிக ஆழமாகப் படித்து அதிலுள்ள அம்சங்களை நன்கு தெரிந்திருக்க வேண்டும். (வகுப்பில் சமாளிக்கலாம் என்ற உணர்வோடு போகக் கூடாது)

இவ்வாறாக இலக்கியம் பகுதியில் நயக்கப்பட வேண்டிய அம்சங்களை எடுத்துக்காட்டுவதும் அவற்றை மாணவர் இனங்காண்பதும் தான் நயத்தல் முறையாகும்.

நயத்தல் பற்றிய செயற்பாட்டில் இறங்கும் பொழுது அந்த இலக்கியப் பகுதி மாணவரின் அனுபவத்துக்கு உட்பட்டதாக இருக்கின்றதா என்று பார்த்தல் வேண்டும். உயர்வகுப்பு மாணவர்களுக்கு "பிற(ர்) நிலையுணரும்" உணர்கைத்திறன் (Sensibility) (மற்றொருவரின் ஆளுமைக்கு புகுந்து கற்பனையாக அவர் மனநிலையைஉணர்தல்) உண்டு.எனவே இடைநிலை மாணவருக்கான இலக்கியப்பாடத் தேர்வு மிக நுணுக்கமாக செய்யப்படல் வேண்டும். இது சம்பந்தமாக நமது இலக்கியப் பண்பாட்டிலுள்ள இரண்டு அம்சங்கள் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. நமது மரபில் ஆரம்ப வகுப்புக்களில் நீதிப் பாடல்களைப் படிப்பித்தல் - இந்த நீதிகள் முக்கியமானவை ஆனால் (எல்லாம் அல்ல) அவை சொல்லப்படும் முறையும் , சொல்லும் , சொல்லொழுங்கும் இன்றைய மாணவரின் சூழலுக்கு அப்பாலானவை.

இரசனைமிக்க கவிதைகளுக்கான முதல் அறிமுகமாக இந்தப் பாடல்களைக் கொள்ள முடியாது.

மற்றது நமது மரபிலுள்ள கதாகாலாட்சேப மரபு. இதில் ஒரு இலக்கிய சிலாகிப்பு முறைமை உள்ளே நிற்கிறது. படியாதவர்களுக்கு உயர் இலக்கிய மரபில் உள்ளன பற்றி அறிமுகஞ் செய்தலும் , அவையாவும் (ஒன்று கூட மிச்சமில்லாமல்) மிகுந்த இரசனைக்குரியன என்று கூறுதலும்.

இது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இயைபான ஒரு வாய்ப்பாக அமைந்து விடுகிறது. இன்று உள்ள மாணவர் எழுத்தை , பாட்டை , இலக்கியத்தை வகுப்பில் மாத்திரம் காண்பதில்லை அல்லது எதிர்கொள்வதில்லை. பத்திரிகை . தொலைக்காட்சி, வானொலி , சஞ்சிகை என பல்வேறு சாதனப் பரிச்சயம் அவர்களுக்கு உண்டு. இந்த சூழல் ஏற்படுத்தும் தகாத தாக்கங்களில் இருந்து விடுவிப்பதையும் நோக்கமாகக் கொள்ளல் வேண்டும்.

இத்தகைய சூழலில் நன்னெறி , நல்வழி , கவர்ச்சிகரமானவையாக அமையா.

நயத்தலுக்கான பயிற்சியிலுள்ள முக்கியம் என்னவென்றால் "இந்த அம்சங்கள் இல்லை என்றால் அது நல்ல இலக்கியப் பகுதி ஆகாது" என்பதை மறைமுகமாக உணர்த்துவது ஆகும்.

எனவே நயத்தலுக்கான பயிற்சியினூடாக மதிப்பீட்டுக்கான ஒரு பயிற்சியும் வழங்கப்படுகின்றது. விமர்சனம் என்பது பிரதானமாக (பரிசோதித்தல்) மதிப்பீடு தான்.

நயத்தல் , விமர்சித்தலுக்கு இட்டுச் செல்ல வேண்டும்.

விமர்சித்தல் என்பது மேலோட்டமான அபிப்பிராயம் சொல்வதல்ல. அது நுண்ணிதான மதிப்பீடு ஆகும். அபிப்பிராயமாக அமையாது ஒரு தீர்ப்பாக அமைய வேண்டும். (Judgement) தீர்ப்பு என்பது எல்லா அம்சங்களையும் சீர்தூக்கிப் பார்த்துச்

செய்யப்படும் ஒரு நடைமுறையாகும்.

குணம் நாடி
குற்றமும் நாடி
அவற்றுள் மிகை (அதிகமாக இருப்பது) நாடி
மிக்க (எது கூடுதலாக உள்ளதோ அதை)
கொளல்.

இங்கு இரண்டு விடயங்கள் மிகமுக்கியம்.

1. குணம் , குற்றம் இரண்டையும் நாடுதல்
2. அவற்றுள் மிக்கதை மாத்திரம் கொள்ளல்

இலக்கிய மதிப்பீடு எவ்வாறு செய்யப்படுகின்றது என்பதைக் குறிப்பு வடிவில் பின்வருமாறு எடுத்துக் கூறலாம். முதலில் - அந்த இலக்கியப் பாடத்தை நன்கு வாசித்தல் வேண்டும்.

வாசித்து அந்தப் பாடத்தை அதற்குரிய பின்புலத்தில் (Background Context) வைத்துப் பார்க்க வேண்டும்.

பின்புலம் சரியாக அறியப்படாவிட்டால் பாடத்தின் அர்த்தம் (பொருள்) வேறுபடலாம்.

இதனைச் செய்தலிலே தமிழிலக்கியத்தில் ஒரு சிக்கலுண்டு. நமது இலக்கியப் பாடத்தில் , அல்லது வகுப்பில் பெரும்பாலும் நவீன காலத்துக்கு முற்பட்ட (அதாவது சொல் , சொல்லொழுங்கு , சாதாரணமாக விளங்காத முறையில் அமைக்கப்படல்) பாடப்பகுதிகள் வரும். முதலில் நாம் அந்தப் பாடலின் மொழியோடு உறவாடி அதன் நெளிவு சுழிவுகளை அறிய வேண்டும்.

- அடுத்து - வாசித்தல் எப்படி நிகழ வேண்டும் என்பதாகும். இதில் சொல் , சொல்லொழுங்கு இரண்டுமே முக்கியம். ஒரு சொல்லின் பொருள் அது வரும் தொடரில் வைத்துத் தான் உய்த்து உணரப்பட வேண்டும்.

இப்படி வாசிக்கும் பொழுது அந்தப் பின்புலம் பற்றிய தெளிவு மேலும் ஏற்படும்.

- அதன்பிறகு - தரப்பட்டுள்ள இலக்கியப் பாடத்தின் அமைப்பை விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது அதன்

அ) ஒழுங்கமைப்பையும் ,
ஆ) அதன் ஒழுங்கமைப்பின் ஊடாக அந்தப் பாடத்தின் அர்த்தம் மேற்கிளம்பும் தன்மையையும் (முறையையும்) நன்கு தெரிந்து கொள்ளல்.

இது மிக நிதானமாச் செய்யப்பட வேண்டும். அப்படி செய்யும் பொழுது தான் அந்த அமைப்பு ஒழுங்கின் பலம் , பலவீனம் புலப்படும்.

இந்த நிலையைக் கற்று நிதானத்துடன் செய்தால் இந்தப் பாடத்தின் பொருள் எவ்வாறு உண்டாக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வரும்.

உண்டாக்கப்படுகின்ற முறைமையினை நோக்குகின்ற பொழுது தான் பாடத்தில் எவை சொல்லப்படவில்லை என்பதும் தெரியும். சொற்களின் ஒழுங்கின் மூலமும் சொல் தேர்வினை விளங்குவதன் மூலமும் அதனைப் புரியலாம்.

இவ்வாறு செய்யும் பொழுது ,அப்பாடம் பற்றிய ஒரு பொதுவான கருத்து நம் மனதில் ஏற்படும். அந்தக் கருத்து அந்த மொழியில் உள்ள சில் காரணங்களினாலேயே ஏற்படுத்தப்படுகின்றது. எனவே கருத்து மாத்திரமல்லாமல் கருத்துக்கான காரணமும் தெளிவாக இருத்தல் வேண்டும். அவற்றை (இரண்டையும்) குறித்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

இறுதியாக ,இந்த மதிப்பீட்டைச் சுருக்கமாகவும் செறிவுடனும் தெளிவுடனும் எழுதப்பழக வேண்டும். இவ்வாறு எழுதும் பொழுது ஒவ்வொரு மட்டத்திலும் இருந்து செய்யப்பட்ட முடிவுகளைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இதுவரை கூறியவை ஒரு புதிய இலக்கணம் , வாய்ப்பாடு அல்ல. புதிய விடயங்களை நீங்களே கண்டறிந்து கொள்வதற்கான ஒரு பருவரைவான வழிகாட்டியே.

முக்கியமாக 4 விடயங்களை அழுத்திக் கூற விரும்புகின்றேன்.

1. நல்லவற்றை இரசிப்பது என்பது அடுத்து உடனே வந்து விடுவது அல்ல. அதற்கு நல்ல பழக்கம் வேண்டும்.
2. இரசிப்புக்குத் தரப்படுவன எல்லாம் நல்ல ரசனையுடையவை அல்ல. இதைக் கண்டறிவது எமது கடமை.
3. தரப்படும் பாடப் பகுதி
    1) மகிழ்வளிக்கின்றதா ?
    2) அறிவுத் தெளிவினை ஏற்படுத்துகின்றதா ?

   என்று அறிதல் வேண்டும். ஆக்க இலக்கியத்தில் இரண்டும் இணைந்தே வரும்.
4. நாங்கள் அந்த நல்ல பாடத்தை இரசிக்க முனையும்பொழுது அந்தப் பாடமும் எங்களை மதிப்பிட முனையும் (இவரால் என்னைச் சரியாக மதிப்பிட முடிகிறதா ? பார்ப்போம் என்று)

இறுதியாக ஒரு குறிப்பு : இந்தக் கட்டுரையில் நான் "ஆசிரியர் எதனைக் கூறுகிறார் எதனை எவ்வாறு கூறுகின்றார் அவற்றுள் சிறப்பு யாது ? " என்ற வாய்ப்பாட்டைக் கைவிட்டு உள்ளேன்.

அந்த வாய்ப்பாட்டில் சில சிக்கல்களுள்ளன

1) ஆசிரியர் கூறுவன எல்லாம் , கூறவிரும்புவன எல்லாம் தெளிவாகப் பதிவு செய்யப்படாது போகலாம்.

2) ஆசிரியர் நினைக்காதவை / உணராத விடயங்களும் உள்ளே வந்து விடலாம்.
3) எழுதிய ஆசிரியர் அளவு வாசிக்கும் நீங்களும் முக்கியமே. ஏனெனில் நீங்கள் தான் அதனைப் படிக்க எடுத்துள்ளீர்கள் / உங்களில் தான் அந்த இலக்கியம் நிறைவுறுகின்றது.

தனியே ஆசிரியரும் தனியே வாசகரும் தொழிற்படுவதில்லை. இருவரினதும் ஊடாட்டமே இலக்கிய ரசனையை ஏற்படுத்துகின்றது.

## மண்ணின் மாண்பு

ஏ மாந்தரே
உங்களுக்கு என்ன வேண்டும்
நிலமா ?
இதோ இருக்கிறேன்
நான் நிலம்
(உங்கள்) எங்கள் அனைவருக்கும்
நான் ஒரே மாதிரி
நீங்கள் யாவரும் எனக்குச் சமமானவர்கள்
உங்களுடைய பிணக்குகள்
எனக்கு வேண்டாம்
எனக்கு வேண்டியது
உங்களின் நட்பு
உங்கள் உழைப்பு
உழவு காலில் ஒரு தானியத்தைப் போடுங்கள்
நான் உங்களுக்கு
நூறு தானிய மணிகளைத் தருகிறேன்
ஒரு கொப்பை நடுங்கள்
ஒரு பெரிய மரத்தை தளைத்து வளரச் செய்கிறேன்
தோட்டம் போடுங்கள் நான் பழங்களாகச் சொரிகிறேன்
கால்நடை வளருங்கள்
நான் புல்லாகிறேன்
வீடு கட்டுங்கள்
நான் சுவராகிறேன்
பல்கிப் பெருகுங்கள்
நான் உங்கள் அனைவருக்கும் இருப்பிடமாக விளங்குகின்றேன்
நான் முடிவற்றவன்
எல்லையற்றவன்
ஆழ்ந்தவன்
உயர்ந்தவன்.

- ரஷ்ய இலக்கியமான ‘அன்னை வயல்’ நாவலிலிருந்து
( ஆசிரியர் : சிங்திஸ் ஐத்மாத்தல் )

# ஒதுக்கங்களும் ஏற்பாடுகளும். Reserves and provisions

## ஒதுக்கங்கள் (Reserves)

குறித்த ஒரு சட்டத்துக்கமைவாக அல்லது யாதாயினும் ஒரு தேவைக்கமைய இலாபமாகப் பகிரப்படாத வியாபாரத்தினுள் நிறுத்தி வைக்கப் பட்ட ஈட்டிய லாபம் அல்லது வேறுவகையில் எழுந்த மிகை பொதுவாக ஒதுக்கம் எனப்படும்.

கம்பனிச் சட்டத்தின் ஐந்தாம் பகுதியின் 27(1) ஆம் பிரிவுக்கமைய ஒதுக்கங்களை பின்வருமாறு இருவகைப்படுத்தலாம்.

மூலதன ஒதுக்கம். (capital reserve)
வருமான ஒதுக்கம் (revenue reserve)

## மூலதன ஒதுக்கங்கள் (capital reserve)

கம்பனி ஒன்றின் இலாப நட்டக் கணக்கில் இருந்து எச்சந்தர்ப்பங்களிலும் பங்கிலாபமாக வழங்கமுடியாத ஒதுக்கங்கள் மூலதன ஒதுக்கம் எனப்படும். ஒதுக்கத்தைப் பின்வருமாறு இருவகைப்படுத்தலாம்.

1 சட்டரீதியான ஒதுக்கம் 2. சட்டரீதியற்ற ஒதுக்கம்

### சட்டரீதியான ஒதுக்கம்.

ஏதேனும் ஒரு சட்டத் தேவைக்கமைவாக ஏற்படுத்தப்படும் ஒதுக்கம் சட்டரீதியான ஒதுக்கம் எனப்படும். உதாரணமாக பங்குவட்டம், மூலதன மீட்பு ஒதுக்கநிதி.

### பங்குவட்டம். (share premium)

கம்பனியானது தனது பங்குகளை வழங்கும் போது அவற்றின் முகப் பெறுமதியிலும் பார்க்க கூடுதலான பெறுமதிக்கு வழங்குமாயின் அம் மிகைப் பெறுமதி பங்கு வட்டம் எனப்படும். இப் பங்கு வட்டத்துக்கென பங்குவட்டக் கணக்கு எனத் தனியான ஒரு கணக்கு பேணப்படும். இப் பங்குவட்டமானது பல்வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படலாம். பங்குவட்டம் எத்தகைய நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படும் என்பது "பங்கு வழங்கல்" என்ற பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்து "மூலதன மீட்பு ஒதுக்க நிதி" (capital redumption reserve fund) என்பது சட்டரீதியான ஒரு ஒதுக்கமாகவே காணப்படுகின்றது. இது பற்றிய விளக்கம் "முன்னுரிமைப்பங்கு மீட்பு" என்ற பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சட்டரீதியற்ற ஒதுக்கம்.

ஏதேனும் சட்டத்துக்கமைவாக அன்றி ஏற்படுத்தப்படும் ஒதுக்கம் சட்டரீதியற்ற ஒதுக்கம் எனப்படும்.
உதாரணம் : உருவாக்கமுன் இலாபம் , நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு மிகை

உருவாக்கமுன் இலாபம்.

பொறுப்பு வரையறுக்கப்படாத தனியார் பங்குடமை நிறுவனங்கள் பொறுப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனங்களாக மாற்றி அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட திகதிக்கும் வரையறுத்த கம்பனியாக உருவாக்கப்பட்டுள்ளது என்று கம்பனி பதிவாளரால் முறையாக அறிவிக்கப்பட்ட திகதிக்கும் இடையே நிறுவனம் உழைத்த இலாபம் உருவாக்கலுக்கு முன் உழைத்த இலாபம் எனப்படும். இது கம்பனியின் செயற்பாட்டு இலாபமாகக் கருதப்படுவதில்லை. இதனை பங்கு வட்டம் பயன்படுத்தப்டும் தேவைகளுக்கும், மற்றும் நன்மதிப்பைப் பதிவழிப்பதற்கும் பயன்படுத்தலாம்.

நிலையான சொத்து மீள் மதிப்பீட்டு மிகை.

நிலையான சொத்துக்களை மறுமதிப்பீடு செய்யும் போது அம் மறுமதிப்பீடடுப் பெறுமதி அவற்றின் புத்தகப் பெறுமதியிலும் பார்க்கக் கூடுதலாக இருப்பின் அம்மிகை நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு மிகை அல்லது ஒதுக்கம் என அழைக்கப்படும். நிலையான சொத்துக்களை அவற்றின் நடைமுறைச் சந்தைவிலையில் கணக்கேடுகளில் காட்டும் நோக்குடன் அவை மறு மதிப்பீடு செய்யப்படுகின்றன. இதனை உருவாக்கலுக்கு முன்னரான இலாபம் எத் தேவைகளுக்குப் பயன்படுத்தப் படுகின்றனவோ அத் தேவைககளுக்குப் பயன் படுத்தலாம். அத்துடன் கணக்கியல் தத்துவங்களுக்கு அமைய பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் இடத்து பங்கு இலாபமாகவும் வழங்கலாம்.

1. நிலையான சொத்துக்கள் மீள் தமதிப்பீடு செய்யப்பட்ட பின் அம்மீள் மதிப்பீட்டு மிகை தொடர்ந்து கணக்கேடுகளில் காணப்படுதல்.

2. நிலையான சொத்து மீள் மதிப்பீட்டு மிகை மூலம் பங்குலாபம் வெளிப்படுத்துவதற்க்கு கம்பனியின் அகவிதிதடையாக அமையாது விடல்.

3. நிலையான சொத்து மீள் மதிப்பீட்டு மிகை பணப்பெறுமானம் கொண்டு காணப்படல்

வருமான ஒதுக்கம். **(revenue reserve)**

கம்பனியின் இலாபநட்டக் கணக்கு மூலம் பங்குலாபமாக வெளிப்படுத்தக் கூடிய ஒதுக்கம் வருமான ஒதுக்கம் எனப்படும். உதாரணம் பொது ஒதுக்கம், இலாபநட்டக் கணக்கு, பங்குலாபம் சமப்படுத்தும் நிதி.

ஏற்பாடுகள் **(provisions)**

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நட்டம், அல்லது பொறுப்பு ஒன்றுக்காக நிச்சயம் அற்ற வகையில் தீர்மானிக்கப்பட்ட தொகை ஒன்றை தேறிய இலாபத்தில் இருந்து நீக்கி விடுதல் ஏற்பாடு எனப்படும்.

உதாரணம்

1. பெறுமானத்தேய்வு ஏற்பாடு
2. அறவிடமுடியா ஐயக்கடன் ஏற்பாடு எனப்படும்.

ஏற்பாடுகளுக்கும் ஒதுக்கங்களுக்கும் (வருமானஒதுக்கம்) இடையிலான வேறுபாடுகள்.

1. ஏற்பாடு இலாபநட்டக் கணக்கிலிருந்து உருவாக்கப்படும் ஆனால் ஒதுக்கம் இலாபநட்டப் பகிர்வில் இருந்து உருவாக்கப்படும்.

2. ஒதுக்கங்கள் ஐந்தொகையில் ஒதுக்கங்களின் கீழ் காட்டப்படும். ஆனால் ஏற்பாடு ஐந்தொகையில் குறித்த சொத்தில் இருந்து கழித்துக் காட்டப்படும்.

3. ஒதுக்கம் இயக்குநர்களின் தீர்மாணத்துக்கமைய நிர்ணயிக்கப்படும். ஆனால் ஏற்பாட்டுக் கணக்கியல் கொள்கைகள் , நியமங்களுக்கமைய தீர்மானிக்கப்படுகின்றது.

4. ஒதுக்கம் பங்குலாபமாக வழங்குவதைத் தடுக்கின்றது. ஆனால் ஏற்பாடு இலாபத்தை கூட்டிக்காட்டுவதைத் தடுக்கின்றது.

## இன்பத் தமிழ்

*தமிழுக்கும் அமுதென்று பேர்! - அந்தத்*
*தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!*
*தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்*
*தமிழ் எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர்!*
*தமிழுக்கு மணமென்று பேர்! - இன்பத்*
*தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!*
*தமிழுக்கு மதுவென்று பேர்! - இன்பத்*
*தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்!*

*தமிழ் எங்கள் இளமைக்குப் பால் - இன்பத்*
*தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்*
*தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! - இன்பத்*
*தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!*
*தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! - இன்பத்*
*தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!*
*தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்! - இன்பத்*
*தமிழ் எங்கள் வலமிக்க உளமுற்ற தீ!*

பாவேந்தர் பாரதிதாசன்

## பாடசாலை மட்டத்திலான கலைத்திட்ட முகாமைத்துவத்தில் நவீன செல் நெறி

து.ஸ்ரீகனகசபேசன்
ஆசிரியர்,
ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி

கலைத்திட்டத்தை வடிவமைப்பதில் பாடசாலை முகாமைத்துவத்தின் வெற்றிக்கு கலைத்திட்டமிடலில் பின்வரும் அம்சங்களில் முகாமை கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்று வற்புறுத்தப் படுகிறது.

1. பாடசலையின் அமைவிடம்
2. சமூக நலன் கருதிய செலவு
3. எதிர் கால அபிவிருத்திக்கு வழி செய்ய முடியுமா
4. துணைக் கருத்திட்டம் , கருத்திட்டம் , பிரதேச ரீதியாக தேசிய ரீதியாக வடிவமைக்கப்படல் வேண்டும் .
5. முன்னோடி செயற்றிட்டம் , செய்து காட்டல் , ஆற்றுப்படுத்தல் , நீடித்திருக்கும் தன்மையை உறுதிப்படுத்தல் போன்ற அம்சங்கள் பாடசலையின் அயற் சமூகம் சேர்ந்து பங்கேற்க வைத்தல்.
6. பாடசாலைப் பின்னணியும் அதன் பிரச்சினைகளும் .
7. கருத்திட்ட நோக்கம்
8. பாடசாலை வளங்கள் உரியவாறு கிடைக்க வழிசெய்தல்
9. மொத்தச் செலவில் நிலையான செலவு , மாறும் செலவு ஆகியவற்றின் வித்தியாசத்தின் அடிப்படையில் ஏற்பதா , விடுவதா என்ற நடவடிக்கை
10. ஒப்பீட்டு ரீதியில் கிடைக்கக் கூடிய நன்மைகள்
11. பின் தொடர் பகுப் பாய்வின் மூலம் கிடைக்கப் பெறும் முடிவு


மேற்குறிப்பிட்ட முக்கிய அம்சங்களை அடுத்துத் தரப்படும் சுற்று வட்டத்தின் மூலம் பாடசாலையின் வேலை அமைப்பை முகாமை செய்ய முடியும் எனலாம் .அத்துடன் பாடசாலை மட்ட குறுக்கு வெட்டு முகத் தோற்றத்திலான அமைப்பும் இணைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மட்ட கலைத்திட்ட முகாமைத்துவத்தில் அதிபர் , பிரதி அதிபர் , பகுதித் தலைவர் , தர இணைப்பாளர் , பாட இணைப்பாளர் , ஆசிரியர் ஆகியோரது மேற்பார்வை

***அதிபர்***

பாடசாலைச் செயற்பாடுகளின் ஊடாக பாடசலையினது குறிக்கோள்களும் அதனூடாக நாட்டினது கல்வி நோக்கங்களும் , தேசிய இலக்குகளை அடைய வேண்டுமென எதிர்பார்கப்படுகிறது . அச் செயற்பாடானது சிறப்பாக இருப்பது அதிபரின் முகாமைத்துவத்தின் தொழிற்பாடுகளிலேயே பெரும் பாலும் தங்கியுள்ளது . அதிபரானவர் பாடசலையில் திட்டமிடல் , ஒழுங்கமைத்தல், வழி நடத்தல் , கட்டுப்படுத்தல் ஆகிய கலைத்திட்ட முகாமைத்துவ தொழிற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய

பாடசாலைகளின் வேலை அமைப்பு




நிலையிலுள்ள அதிபர் தனது முகாமைத்துவ தொழிற்பாடுகளினூடாகவே பாடசாலையினை வினைத்திறன் கொண்டதாக இயங்கச் செய்தல் வேண்டும் . அத்துடன் பாடசாலையினது செயற்பாடுகள் அபிவிருத்திப் பண்புகள் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும் .

சரியான தரவுகளே சரியான முடிவுகளாகும் . என ஓர் கூற்று உண்டு . சரியான தரவுகளின் பகுப்பாய்வின் ஊடாக எடுக்கப்படும் முடிவுகளில் பயன் உண்டு என்பதே இதன் கருத்தாகும். எந்த ஒரு பாடசாலையும் அன்றாட தீர்மானங்களை மேற் கொள்ளும் தரவுகளையும் , தகவல்களையும் சேகரித்து பொருத்தமானவாறு களஞ்சியப்படுத்தவும் , அவற்றை புதுப்பிக்கவும் சகல முயற்சிகளையும் மேற் கொள்ள வேண்டும் ( குண சேகர , Gunasekara 1996 )

அதிபர் தனது பாடசலையை முகாமைத்துவம் செய்வதற்கு தேவையான வளங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் . தேவைப்படும் வளங்கள் தொடர்பாக

## பாடசாலை மட்ட குறுக்குவெட்டு முகத்தோற்றத்திலான கலைத்திட்ட பரவலாக்கல்




பாடசாலையின் கற்றல் / கற்பித்தல் நெறிப்படுத்தும் தொகுதிகள்

கோரிக்கைகளை விடுக்கும் போது அவர் அதனை நியாயப்படுத்தக் கூடியவாறு இருத்தல் வேண்டும் . சரியான தரவுகள் , தகவல்களின் மூலமே அவர் தனது கோரிக்கைகளை நியாயப்படத்த முடியும் . அவை எல்லாவற்றிற்கும் பாடசாலையின் கல்வி முகாமைத்துவத் தகவல்முறையொன்று இருக்க வேண்டியது அவசியமாகும் . இதனைப் பாடசாலை அதிபர்களுக்கென கையேடு (986 ) பின்வருமாறு எடுத்துக் கூறுகின்றது .


ஏனைய முகாமைத்துவ முறைகள் போல பாடசாலை முறையினது வெற்றியும் அதனது தொடர்பாடலினதும் தகவல் முறையினதும் வினைத்திறனில் தங்கியுள்ள தகவல்களையும் பின்னூட்டல்களையும் பரப்புவதற்கான தகவல் ஊடகங்கள் தெளிவாக வரையறுக்கப் பட்டிருக்க வேண்டும் .சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் தயாரிப்பதோடு அறிந்து கொள்ளவும் வேண்டும் .

***பாடசாலை அதிபரின் கடமைகள் பின்வருமாறு***

1. பாடசாலை மேற்பார்வை
   பாடசாலையின் சிறந்த செயற்பாட்டை உறுதிப்படுத்தல்
   பாடசாலையின் ஒழுக்கத்தைப் பேணல்
   கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஊடான தொடர்புகளைப் பேணுதல்
2. பாடசாலை நிர்வாக விடயங்களைக் கவனித்தல்
3. நிதி மற்றும் பாடசாலை ஆசிரியர்களின் , ஊழியர்களின் சம்பளம் வழங்குவது சார்பான விடயங்களைச் செயற்படுத்தல்
4. கல்வி மற்றும் புறக்கிருத்திய விடயங்களான செயற்பாட்டிற்கான பொறுப்புக்களை மற்றையோருக்கும் பகிர்ந்தளித்தல்
5. மாணவர் , ஆசிரியர்களின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்தல்
6. பாடசாலைக்கு மாணவர்களை அனுமதித்தல் வகுப்பேற்றம் போன்ற விடயங்களைத் தீர்மானித்தல்
7. பாடசாலை நேரசூசி தயாரித்தல்
8. பாட விதானம் தயாரித்தல்
9. புறக்கிருத்திய விடயங்களை ஒழுங்கு செய்தல் , விளையாட்டுப் போட்டி , பரிசளிப்பு விழா , பொருட்காட்சி , பாடசாலை இல்லப் போட்டி , மன்றம் ,சமூக சேவைகள் முதலியன
10. கற்பித்தல் முறையினைத் திட்டமிடல் , வேலைத்திட்டம் மற்றும் முக்கிய விடயங்கள்

மின் பேர்க் ( Mimtzbarg 1974 ) முகாமையாளர்களின் நடிபங்குகளை மூன்று பிரதான வகைகளாகப் பிரித்துள்ளார் . இவை அதிபர்களுக்கு மிகவும் பொருத்த மானவையாகும்

**அதிபர்களின் நடி பங்கு**



இவ் நடிபங்குகள் தொடர்பாக லூக்காஸ் (1982) விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளார். அவரது விளக்கம் வருமாறு:-

1. ஆளிடை நடிபங்கு
   - பெயரளவில் தலைவர்

     இது முகாமையாளர் சமூக மற்றும் அடையாளமான கடமைகளில் ஈடுபடுவதைக் குறிக்கின்றது.
   - தலைவர்

     முகாமையாளர் வேலையாட்கள் ஊக்குவித்தலையும் நிறுவனம் ஆளணிப்படுத்தப்பட்டுள்ளதையும், ஆளணியினர் நன்கு பயிற்சி பெற்றுக் கொள்வதையும் உறுதிப்படுத்துவதையும் குறிக்கின்றது.
   - மத்தியஸ்தர்

     இது நிறுவனத்திற்குள்ளும் வெளியிலும் தகவல்கள், பிரச்சனைகள், எண்ணங்கள் என்பவற்றைப் பரிமாறிக் கொள்வதற்காகத் தொடர்புகளை மேற்கொள்வதைக் குறிக்கின்றது.
2. தகவல்கள் நடிபங்கு
   - கண்காணிப்பாளர்

     இது கண்காணிப்பாளராகச் செயற்படுவதையும் பல்வேறுபட்ட தகவல்களை அவதானிப்பதையும் நிரற்படுத்துவதையும் குறிக்கின்றது.
   - பரப்புவர்

     இங்கு முகாமையாளர் தகவல்களைப் பரப்புபவராகச் செயற்படுகிறார்.
   - பேச்சாளர்

     நிறுவனத்தின் வெளியிலுள்ள தனியாட்களுக்கு நிறுவனக் கொள்கையும் செயற்பாடுகளையும் விளக்குவதற்கான கருத்துக்களைக் கூறுவதைக் குறிக்கின்றது.
3. தீர்மானஞ்செய் நடிபங்கு
   - முயற்சியாளர்

     நிறுவனத்தின் உரிய மாற்றங்களைக் கொண்டுவருவதற்குச் செயற் திட்டங்களைத் தேடுவதையும் முன்வைப்பதையும் அபிவிருத்தி செய்வதையும் குறிக்கின்றது.
   - இடையூறுகளைக் கைளாளுபவர்

     இது எதிர்பாராத விளைவுகளை நிறுவனம் எதிர்கொள்ளும் போது நடவடிக்கைகளை எடுத்தலைக் குறிக்கின்றது.
   - வள ஒதுக்கீட்டாளர்

     இதன் முகாமையாளரின் பொறுப்பின் கீழ் உள்ள இடங்களுக்கு வளங்களை ஒதுக்குவது தொடர்பான தீர்மானங்களுடன் சம்பந்தப்பட்டதாகும்.
   - இணக்கப்பேச்சாளர்

     இது நிறுவனத்தின் தொழிற்பாட்டு நீதியை நிலை நிறுத்த முயல்வதைக் குறிக்கின்றது.

பாடசாலையின் அதிபரானவர் சமூகத்தின் ஒரு தலைவராகச் செயற்படுகிறார். பாடசாலைச் சமூகத்திலுள்ள நிறுவனங்கள், சங்கங்களில் அவர் பெயரளவில் தலைவராகச் செயற்படுகிறார். பாடசாலையில் ஆளணியினரை முகாமைத்துவம் செய்யும்போது அவர் தலைவராகச் செயற்படுகிறார். பாடசாலையினுள்ளும், வெளியிலும் தகவல்களைப் பரப்புபவராகவும் செயற்படுகின்றார். அத்துடன் பாடசாலைக்கு வெளியே பிரச்சனைகள், எண்ணங்கள் பரிமாறுவதன் மூலம் மத்தியஸ்தராகவும் செயற்படுகிறார். அதிபரது இத் தொழிற்பாடுகள் ஆளிடை நடிபங்கின்கீழ் அடங்குகின்றன.

அதிபர் பாடசாலையில் தரவுகள், தகவல்களைப் பெற்று நிரற்படுத்துவதோடு பாடசாலையின் செயற்பாடுகளைக் கண்காணிப்பவராகவும் செயற்படுகின்றார். பாடசாலையினுள்ளும் வெளியிலும் தகவல்களைப் பரப்புபவராகவும் செயற்படுகின்றார். அத்துடன் பாடசாலைக்கு வெளியே தனது / அதனது கொள்கைகள், செயற்பாடுகளை விளக்கிக் கூறுவதிலும் அவர் ஈடுபடுகின்றார். அதிபரது இத் தொழிற்பாடுகள் தகவல் நடிபங்கின் கீழ் அடங்குகின்றன.

அதிபர் பாடசாலையில் மாற்றங்கள் கொண்டு வருவதற்காகச் செயற் திட்டங்களை வகுத்துச் செயற்படுவதன் மூலம் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான முயற்சியாளராகச் செயற்படுகின்றார். பாடசாலையில் எதிர்பாராத பிரச்சனைகள், இடையூறுகள் ஏற்படும் போது அவற்றினைக் களைவதற்கு நடவடிக்கையினை மேற்கொள்கின்றார். பாடசாலைக்கெனப் பெறப்பட்ட வளங்களைப் பகிர்ந்தளித்து வீண்விரயமின்றி உச்சப் பயனைப்பெற உரியவாறு அவற்றை அதிபர் பயன்படுத்துகின்றார். அத்துடன் பாடசாலையின் ஆளணியினரிடையேயும் அவர்களது செயற்பாடுகளிலும் நீதியை நிலைநிறுத்துவதிலும் அவர் ஈடுபடுகின்றார்.

### *பிரதி அதிபர்*

ஒரு பாடசாலையின் பயனுறுதிக்கு உதவும் நாளாந்தம் பாரிய அளவிலான ஒரு பொறுப்பு பிரதி அதிபர்மீது சுமத்தப்பட்டுள்ளது அவர்மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்களே மிகப் பிரதானமானவை. சிறந்த பிரதி அதிபர் உள்ள பாடசாலையில் அதிபரது முகாமைத்துவம் எளிதாகும். ஆசிரியர்களையும் மாணவர்களையும் வழிப்படுத்தும் சுமையைப் பெரும்பாலும் பிரதி அதிபரே தாங்குவார்.

உப அதிபர், பகுதித்தலைவர், மற்றையோரை நியமிக்கும் முறைகள் ஆசிரியர் பதவியணி சுற்றுநிருபம் 3/டீ.டீ/ஜீ.3: 1-1983 இல் கொடுக்கப்பட்டுள்ளன. பிரதி அதிபர், அதிபருக்கு அடுத்தபடியான ஸ்தானத்தைப் பெறுபவர் ஆகையினால் அவர் பாடசாலையில் சக ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்றவராக இருத்தல் வேண்டும். ஒரு பாடசாலையில் பிரதி அதிபருடன் ஓர் உதவி அதிபரும் அப்பாடசாலையின் தேவைக்கேற்ப நியமிக்கப்படலாம். பிரதி அதிபர் சகல விடயங்களிலும் அதிபருக்கு உறுதுணையாக இருப்பதுடன் அதிபர் இல்லாத சமயத்தில் அவரின் கடமைகளை ஆற்றுவார். இது மட்டுமல்லாது அதிபர் சில குறிப்பிட்ட கடமைகளையும் பிரதி அதிபருக்கு ஒதுக்குவார்.

## *பகுதித் தலைவர்*

ஒரு பாடசாலையின் சிறந்த முகாமைத்துவத்திற்கும் பகுதித் தலைவர்களும் நியமிக்கப்படலாம். இப் பகுதித் தலைவர்கள் தங்களின் கீழுள்ள பகுதிகளுக்கான மேற்பார்வையாளராக இயங்குவர். ஒரு பாடசாலையில் ஆரம்பப் பிரிவு இடைநிலைப் பிரிவு , சிரேஸ்ட இடைநிலைப் பிரிவிற்கெனப் பகுதித் தலைவர்கள் நியமிக்கப்படலாம்.

பாடசாலை மட்டத்தில் எழுகின்ற பிரச்சனைகளுக்கும் சிறந்த வழிகாட்டலை வழங்குவதன் மூலம் பாடசாலை மட்டத்தில் கலைத்திட்ட முகாமைத்துவத்திற்குத் தனது சிறந்த பணியை வழங்க முடியுமெனலாம்.

பாட இணைப்பாளர்கள்

பாட இணைப்பாளர் என்பவர் பாடத் தலைவரேயாவார். அப் பாடசாலை முழுவதற்கும் குறிபிட்ட பாடவிதானத் திட்டத்திற்கான பொறுப்பும் அவரைச் சார்ந்ததாகும். அவர் சக பாட ஆசிரியருடன் பாடநெறிமுறைகளைக் கலந்துரையாடி அவர் பொறுப்பாகவுள்ள பாட வேலைகளை ஒழுங்காக நடைமுறைப்படுத்துவதற்காகச் செயலாற்றுவார். இம்முறையானது ஆசிரியர்களிடையேயான ஒரு குழு முயற்சிக்கு உற்சாகமளிப்பதாக அமைவதுடன் வெளிக்கள ஆய்வு மட்டுப்படுத்தப்பட்ட பரிசோதனைமுறை கல்விச் சுற்றுலா அரும்பொருள் தேடுவதற்கான தொல்லியல் ஆய்வு , ஆய்வுப்பட்டறை போன்ற நிகழ்வுகளில் முன்மாதிரியான நடவடிக்கைகளுக்கு முகங் கொடுப்பதற்கு இவரது செயற்பாடு அமைவாக இருக்க வேண்டும்.

பாட இணைப்பாளர் கலைத்திட்ட அபிவிருத்தியில் பின்வரும் அம்சங்களில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

1. மாணவ அபிவிருத்தி
2. ஆசிரியர் அபிவிருத்தி
3. பாடவிதான அபிவிருத்தி
4. பாடசாலை வளங்களும் வசதிகளும் அபிவிருத்தி
5. இணைப்பாடவிதான அபிவிருத்தி
6. வழிகாட்டலும் ஆலோசனைகளும் அபிவிருத்தி
7. பாடசாலை சமூகத் தொடர்பு அபிவிருத்தி
8. தேவையான எவையையும் சேர்த்துக் கொள்ளலாம்.

பாட இணைப்பாளர் ஆசிரியர் நலனிலும் மாணவர் நலனிலும் அக்கறையுடையவராக பாடசாலை மேம்பாட்டிற்கான எந்தச் செயற்பாட்டிலும் அனைவருக்கும் சம சந்தர்ப்பம் வழங்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். பாடரீதியான அபிவிருத்தி கருதிய செயலமர்வுகள் வெளிக்கள ஆய்வுகள் பயிற்சி வகுப்புக்கள் முகாமைத்துவ வழிகாட்டல் போன்ற நடவடிக்கைகளில் ஆசிரிய மாணவர்கள் உச்சப்பயனைப் பெறக் கூடியவாறு இவரது நெறிப்படுத்தலைப் பாடசாலைக்கு உள்ளிலும் வெளியிலும் செயற்படுத்தல் வேண்டும்.

## *தர இணைப்பாளர்*

தர இணைப்பாளர் என்பவர் ஒரு வகுப்பிலுள்ள சமாந்தர வகுப்புக்களின் வேலைகளை இணைப்பதாய் இருப்பார். ஊதாரணமாக ஏழாம் வகுப்பில் பல சமாந்தர வகுப்புக்கள் இருப்பின் அவ்வகுப்புக்களின் வகுப்பாசிரியர் ஒருவரை இணைப்பாசிரியராக அதிபர் நியமிக்கலாம். அல்லது அச்சமாந்தர வகுப்புக்களின் சகல வகுப்பாசிரியரும் சேர்ந்து தமக்குள் ஒருவரை நியமிக்கலாம்.

இவ்வாறு தெரிவாகும் இணைப்பாசிரியர் அச் சமாந்தர வகுப்புக்களிலான பல்வேறு விடயங்களையும் ஒருங்கிணைத்து அவற்றினை ஒழுங்குமுறைப்படுத்துவார். வகுப்பு ஒருங்கிணைப்புப் பணிகளில் ஏற்படும் பிரச்சனை பாட ஒருங்கிணைப்பாளருக்கோ பகுதித் தலைவருக்கோ உதவி அதிபருக்கோ அல்லது அதிபர் கவனத்திற்கோ கொண்டு வருதல் வேண்டும்.

தர இணைப்பாளர் என்பவர் தரங்களுக்கிடையேயுள்ள சமாந்தர வகுப்புக்களில் மாணவர் மத்தியில் அவர்களது ஆக்கச் செயற்பாட்டிற்கும் தங்களது இயலூக்கத்தைப் பயன்படுத்திச் சோதனைக்கன்றிச் சாதனைக்காக முன்னெடுக்கின்ற எந்த நிகழ்வுகளிலும் மாணவர்களது செயலூக்கத்திற்கு உறுதுணையாக இருப்பவராகச் செயற்படவேண்டுமொழிய அவர்களது ஆக்கச் செயற்பாட்டிற்கும் வழிவகுப்பவராக எச்சந்தர்ப்பத்திலும் அவரது செயற்பாடு இடம் பெறக் கூடாது. சுற்றுலா, கள ஆய்வுகள் பொருட்காட்சிகள் தொல்லியல் ஆய்வுகள் கண்காட்சிகள் போன்றவற்றிற்குச் சமாந்தர வகுப்புக்களிலுள்ள அனைத்து மாணவர்களையும் அதனோடு ஈடுபடுகின்ற ஆசிரியர்களையும் தியாக சிந்தனையுடன் நெறிப்படுத்தக் கூடிய பொது வழிகாட்டல் இடம்பெற வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகளில் மாணவர் நலனிலும் ஆசிரிய நலனிலும் இவரோர் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்தல் வேண்டும். தரங்களிடையே புரிந்துணர்வுடன் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை ஆசிரியர் மத்தியிலும் மாணவர் மத்தியிலும் வளர்க்கக் கூடிய முறையில் கலைத்திட்ட முகாமைத்துவத்தில் இவரது செயற்பாடு அமைதல் வேண்டும். மாணவர்கள் தங்கள் தரங்களுக்கிடையே குழுக்களாகச் செயற்படும்போது முரண்பாடுகளை வளர்க்கச் சந்தர்ப்பம் உருவாகுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் முரண்பாடுகள் தவிர்க்கக்கூடிய வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் மாணவர் மத்தியில் உருவாக்க வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்கள் இவரை நாடும் பட்சத்திலும் சரி, நாடாத பட்சத்திலும் சரி தனது ஆலோசனைகள் வழிகாட்டல்களையும் உரிய காலத்தில் வழங்குவதன் மூலமே பாடசாலை மட்டத்தில் பாடமேம்பாட்டையும் முன்னெடுக்க முடியும் எனலாம்.

## ஆசிரியர் மேற்பார்வை

வகுப்பு ஒழுங்குகளை வகுப்பாசிரியர் கவனித்துக் கொள்ள வேண்டும். வகுப்பு இடாப்பும் தவணை இறுதி ஆண்டுப் பரீட்சைப் பொறுப்புக்களும் அவருடையதே. ஆசிரியர் செயல்திறன் மதிப்பீடானது அவரது பாடசாலை வரவு, நேரத்திற்குக் கடமைக்குச்

செல்லல், ஆடைகளின் துப்பரவு ஏனைய ஆசிரியருடனான ஒத்துழைப்பு பாடசாலையின் பொதுவான நிகழ்ச்சிகளில் பங்களித்து கொள்ளல் மாணவருடனும் பெற்றோருடனும் ஏற்படுத்தும் தொடர்புகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டும் வகுப்பறையில் பூரண ஒத்துழைப்பு ஆசிரியருக்குக் கொடுக்கப்படவேண்டும்.

புதிய பாடவிதானச் சீரமைப்பு வேலைகள் ஆசிரியர்களுக்குரியதாக அமைய வேண்டும். மேலிருந்து கீழ் வரை வழிந்தோடும் கட்டளைகள் மூலமாக பாடவிதானச் சீர் திருத்தம் நிகழ்வதால் கூடுதலான பலனைப் பெற்றுக் கொள்ள முடியாது. உத்தேசச் சீரமைப்பு முக்கியத்துவங்கள் பற்றி ஆசிரியர்கள் அறிய வேண்டும் தனிப்பட்ட முறையிலும் உண்மையான வற்புறுத்தல்களைக் கொண்டு வருவதற்கும் வாதிப்பதற்கும் ஆசிரியர்களுக்கு அவகாசம் இருக்க வேண்டும். அதே போன்று இடம்பெறவுள்ள மாற்றங்கள் பற்றி ஒரு வித அச்சமும் சந்தேகமுமின்றிக் கலந்துரையாடுவதற்கும் சந்தர்ப்பம் ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டும்.

ஆசிரியர்கள் சுய ஈடுபாடு உடையவராகவும் முகாமையாளர்களாகவும் செயற்படும் படைப்பாளர்கள் திறமையாளர்களாக விளங்குவதுடன் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாகவும் கணிக்கப்பட வேண்டும். அதேபோன்று மாற்றங்கள் ஏற்படுத்தப்படும்போது வெளியிடப்படும் வெளிச்சிரமம் வேறும் பல்வகையான அசௌகரியங்கள் என்பவற்றின் பெயரில் ஏற்படும் பாரிய நஷ்ட ஈடுகளால் ஆசிரியர் களுக்குத் தனிப்பட்ட ரீதியாகவும் தொழில் ரீதியாகவும் கூடுதலான நன்மைகள் உண்டென்பது தெளிவாக வேண்டும். இம் மாற்றங்களால் தமது மாணவர்களிடத்தும் உண்மையான பயன்தரு மாற்றங்கள் இடம்பெற உறுதி ஆசிரியரிகளிடம் ஏற்பட வேண்டும்.

கொள்கை வகுப்போர்களுக்காகவும் செயற்படுத்துபவர்க்காகவும் உள்ள ஆசிரியர்களிடையே சிறந்த சிநேக உறவு அமையப்பெறெ வேண்டும். அந்த அமைப்புப் பெறும் கட்டளையினால் மாத்திரமமைந்த "சங்கிலி"யாக இருக்கக் கூடாது.

சமூகத்திலுள்ள இளம் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதுடன் சமூக நிறுவனங்களான பாடசாலைகள் பிள்ளைகளைப் பொறுப்புள்ள வளர்ந்தவர்களாக மாற்றுவதற்கு பாடசாலைகளுக்குப் பெரும் பங்கு உண்டு இது மிகத் தெளிவானது தன்னை அபிவிருத்தி செய்தல் சமூக ரீதியாக, தனிரீதியாக இந்தக் கோட்பாட்டில் மையம் வைத்துப் பாடசாலைகள் கவனிக்க வேண்டும். உண்மையாக அப்படியான அபிவிருத்திகள் செய்யப்பட ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையில் செல்வாக்குத் தேவை. செல்வாக்கு வெறுமனே உருவாவதில்லை செல்வாக்கு மொழியில் பிரிவு 1 இல் உள்ளதிற்கும் 3 அல்லது 4 இற்கும் எவ்வளவு மாற்றங்கள் இதே போல் இயற்கையும் அதன் வழிமுறையும் மொழிப்பாடத்தில் வெளியில் நடக்கும் விளையாட்டிற்கும் எவ்வளவு வித்தியாசங்கள் ஒருவருக்கு எழுத்து ஆற்றல் படிவம் நிரப்பும் ஆற்றல் உண்டு. இன்னொருவர் தனது கற்பனையை அல்லது கண்டுபிடிப்பைச் செய்து காட்டுவதில் வல்லவன் இதே போல் கணித விஞ்ஞான உண்மைகள் சமூக வழிகள் சுகாதாரம் இன்னும் இதன் தொடர்புடைய துறைகளில் ஒருவரை சமூகத்தில் அவரை முன்னேற்றமடைய வழிவகுக்கும் ஒரு ஆசிரியருக்கும் மாணவருக்குமுள்ள செல்வாக்குத் தொடர்பு பாடசாலைக்குள் படிப்பிக்கும்

பாடங்களால் ஆவன. பல வித்தியாசமான கோணங்களில் இருந்து பிரபஞ்சம் இருக்குமென்று மனதில் உள்ளதைக் கட்டுப்பாடாக பொருளைத்தந்து உருபமாக வரையப்படுதல் தத்துவம் மூலம் மனதைப்பற்றி அதன் செயற்பாடுகள் பற்றிப் படித்தல் மூலம் இன்னும் தொடர்புடைய அத்தனை வழிகள் மூலமும் கல்விமான்களாகிய ஆசிரியர்கள் பாடசாலையிற் படிப்பிக்கும் பாடங்கள் பற்றித் தங்கள் பின்னணி மூலம் விளக்கம் கூறுபவர்கள் பாடசாலையிற் படிப்பிக்கும் பாடங்கள் பற்றிக் கல்விமான்களுக்கிடையே ஒற்றுமையான கருத்துக் கிடையாது . சிலருக்குப் பாடசாலையிற் படிப்பிக்கும் பாடங்கள் தாங்கள் பெற்ற சக்தி வாய்ந்த அனுபவங்கள் சிலருக்கு வெறும் சோதனையில் சித்தி பெற்ற வெறும் பத்திரங்களே.

தற்போது நடைமுறையிலுள்ள பாடசாலைப் புத்தகங்கள் பாடங்கள் மனிதப் பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை ஞாபகப்படுத்திக் கொள்ளல் அடையாளம் காணல் அங்கீகரித்தல் பாரபட்சம் பகுப்பாய்வு பல மூலகங்களைக் கட்டியெழுப்புவதன் பெறுபேறுகள் கூட்டுறவு ஒழுங்கு இன்னும் பல சமீபத்திய முயற்சி நினைக்கும் வழிமுறைகளிற் பல அளவுகள் உள்ளதாகத் தெரியப்படுத்தும் பழக்க வழக்க அடிப்படையில் அமைந்த பாடங்கள் ஆசிரியர்களுக்கு ஒரு வசதியான கருவியாகி விட்டது. குறிப்பிட்ட ஒருவரின் மன உணர்வை வேறுவேறு மூலகங்களாக்குவது குறைப்பது சரியல்ல என்கிறார்.(wygotsky)

பாடங்கள் பற்றிய வழிமுறைகள் நடைமுறைகள் பற்றிய அறிவு பாடத்திட்டத்தைப் பற்றியதில் மையமாக விளங்குகிறது பாடத்திட்டத்தில் நடைமுறைகள் பற்றிய விளக்கங்களை நடாத்தியதில் எந்த மட்டில் இது விசேட கவனஞ்செலத்த வேண்டும். ஆசிரியர், பாடவிடயம் இவை என்ன என்ன பங்கு வகிக்க வேண்டுமென வெளிக்காட்டும் இன்னொன்று நேரம் மேற்காட்டிய மூன்றாவது தொடர்பு பற்றியும் நேரத்தொடர்பு ஏற்படுத்தும். போது ஏற்றவாறு ஆசிரியர் பங்கீடு செய்தல் வேண்டும்.

பிள்ளையை மையமாகக் கொண்ட பாடத்திட்ட வழிமுறைகள் கையாளும்போது அது பல வித்தியாசமான நேர அளவுகளின்படி பல துறைகளிலிருந்து பெறப்பட்ட விபரம் பிள்ளையின் அபிவிருத்தி பற்றிய எண்ணங்கள் ஆசிரியர் கல்வி சமூக விஞ்ஞானம் பிள்ளையின் உரிமையை அங்கீகரித்தல் இவைகள்தான் இன்று பிள்ளையை மையமாகக் கொண்டு நடாத்தப்படும் பாடத்திட்ட முறைகளாகும். மையவிடயம் பிள்ளையின் முன்னேற்றம் படிப்பது ஆசிரியருக்கும் மாணவருக்கும் பாடத்திட்ட வழிமுறைகள் மூலம் ஏற்படுகின்ற செல்வாக்கு தரத்திற்குத் தரம் பாடத்திட்டம் வித்தியாசமாக உள்ளது போல் பாடங்களுக்குப் பாடம் வித்தியாசப்படும். எடுத்துக்காட்டாக பிள்ளைகள் தனிய வாசிக்கவும் சேர்ந்து வாசிக்கவும் ஒரு கதையை உருவாக்கலாம். ஒரு கட்டுரையை வரையலாம். ஒரு பிள்ளை ஆசிரியர் பல வாரங்களாகச் சொல்லிக் தொடுத்த பின்னர்தான் "come, "look", "and" என்ற சொற்களை எழுதப் பழகுகின்றது. வீட்டில் தகப்பன் தாய் நடைமுறையில் பாவிக்கப்படும் சொற்கள் நல்லதோ அல்லது கெட்டதோ அதை இலகுவில் கற்றுக் கொள்கிறது. பிள்ளை தனது வகுப்பில் செய்யும் ஒன்றை மறுநாளே வீட்டில் தனியே செய்யும் அது அதன் அநுபவம் படிக்கும் மாணவரின் நிலையில் ஆசிரியர் மட்டத்தில் ஏற்படுத்தக் கூடிய மாற்றங்களை சரிவர மதிப்பீடு செய்து எந்தத்திசையில் என்ன மாற்றங்கள் அவற்றின் தன்மை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு மாற்றங்களைப் புகுத்த வேண்டும் இது பழைய நிலையிலிருந்து நவீனத்திற்கு மாற வழிவகுக்கும்.

மேல்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாக பிரதான துறைகளுடன் கொண்டுள்ள தொடர்பை பின்வரும் படம் காட்டுகிறது

பாடசாலை மட்ட கலைத்திட்ட முகாமைத்துவத்தின் செல்நெறி




மாணவர்களது தனியான வேறுபாட்டைக் கருத்திற் கொண்டு மக்டுகல் இயல்பூக்கக்கொள்கையிலிருந்து (theory of instinck –Mc dugall) உயிரினங்களிடையே இயல்பாகத் தோன்றும் உளைச்சல் இயல்புகள் பிறப்புடன் கூடியது என்றும் அறியும் நிலை மனவெழுச்சிநிலை ஆகிய மூன்று பிரதான நிலைகளைக் கருத்திற் கொண்டு ஆசிரியரானவர் கலைத்திட்ட முகாமைத்துவத்தை முன்னெடுத்தல் வேண்டும்.

## COLLEGE OBSERVES ALL - WORLD HINDU RELIGIOUS CELEBRATION -2003



**Divisional Secretary, Kopay ,**
**Mr. S. Srinivasan delivers the key- note address to the staff and students**

## "A" LEVEL STUDENTS' ANNUAL UNION LUNCH -2003



**Chief Guest Mr . T .Kalamani ,**
**Senior Lecturer, Education,**
**Jaffna University, addresses.**

# ANNUAL INTER
# HOUSE ATHLETIC MEET - 2003



**School Band at play**
**Welcomes the chief - guest**
**Minister Hon T. Maheswaran**



**Chief Guest Hon. T. Maheswaran**
**addresses the gathering.**

# CEREMONIAL OPENING OF COLLEGE FRONTAGE - 20.04 .2003



**by the college Principal who is also a distinguished old - student.**

# முத்ததமிழ் விழா - 2002



கல்லூரித் தமிழ்ச் சங்கத்தால் வெளியிடப்பட்ட
"புதுவை" சஞ்சிகையை கவிஞர் வே. இளையகுட்டி
வெளியிட்டு வைக்க, முதற் பிரதியை முதன்மை ஆசிரியை
திருமதி கெளரி முகுந்தன் பெற்றுக்கொள்கிறார்.

# GOOD WILL TOUR UNDER NATION'S SCHOOLS' TWINING PROGRAMME



Ragama , Battuwatte, Sinhala M. V in our midst.

## We in the midst of Ragama, Battuwatte, sinhala M.V



## ENGLISH DAY - 2002



The Principal and English union president R.Kandeepan receiving the chief guest Mr. S.Thiakarajah , Asst. D.E. (English) , Jaffna Zone.

## OUR COLLEGE LIBRARY WEEK - 2003



Mr. V. Sivasundaram , President, our O.S.A. Londan Branch , honoured guest , viewing the book exhibition

## NAVARATHIRI CELEBRATIONS - 2002




-Pushpanjali- A Dance Recital by our pupils.

# OUR O.S.A - CANADA BRANCH DONATED 15 COMPUTERS.



Principal recieves the Donation from
Mr. K. Senthilvelan, Computer engineer, Canada

# PRESENTATION OF PUBLIC ADDRESS SYSTEM



Mrs. T. Amarasingam - Mother of old boy Mr.A. Pathiyamaran - (Germany)
makes the presentation to the Principal.

## மனம் திறந்து ஒரு மடல்

**'முதுபெரும் புலவர்' 'கலாபூஷணம்' வை.க.சிற்றம்பலம்**

(குறிப்பு : எமது கல்லூரியின் செயற்பாடுகளுக்கு ஊக்கம் தரும் வகையில் பண்டிதமணி சி.க வின் மாணவனும் சைவப் பெரியாருமாகிய புலவர் வை.க.சிற்றம்பலம் ஐயா அவர்கள் வரைந்து அனுப்பிய மடல் இங்கு பிரசுரிக்கப் படுகிறது.)

அம்பலவாணர் வீதி ,
உடுவில் ,
சுன்னாகம்.
7.11.2002

அமரர் உயர்திரு மழவராயர் கந்தையா அடிகளை வணங்குகிறேன்.

கனம் அதிபர் , ஆசிரியர்கள் அனைவர்க்கும்
ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி , புத்தூர் .

ஐயன்மீர்,

தங்கள் கல்லூரியில் சைவம் தழைத்தோங்கச் செய்யும் உணர்வு பூர்வமான சேவைகளை நோக்கி , உங்களையும் இந்து மன்றத்தையும் பாராட்டுகின்றேன். நாவலர் பெருமானைப் பின்பற்றி அக்காலப் பாடசாலைகள் எல்லாம் அத் தொண்டை சரியாக மேற்கொண்டன. பின் தனியார் கல்லூரிகளிலும் சிறப்பாக சைவ வித்தியா விருத்திச் சங்கப் பாடசாலைகளிலும் , உயர் கல்லூரிகளிலும் மேற்கொள்ளப்பட்டன.

கல்லூரி வாயிலில் விபூதி , சந்தனம் , பூக்கள் எல்லாம் வைக்கப்பட்டிருக்கும். மாணவர் வரும் போது அவற்றைப் அணிந்தே வகுப்புக்கு வருவார்கள். ஆசிரியர்கள் அதைக் கவனிப்பர்.

கல்லூரிகளில் மாணவர் சங்கம் அமைத்து ,பேச்சு , பாட்டு , தேவாரம் என்பன நடாத்துவார்கள். எனது வாழ்வில் சில் பாடசாலைகளில் அந்நிலை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. நால்வர் குரு பூசையுடன் சந்தானாசாரியர் குரு பூசையும் நடந்தன. காலப் போக்கில் அவை மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன.

இந்த நிலையில் தங்கள் சோமாஸ்கந்தவில் அறுபத்து மூவர் குரு பூசையும் நடந்து வருவதாகப் பத்திரிகைகளிலிருந்து அறிந்து கொண்டேன். சமீபத்தில் பூசலார் பற்றிய செய்தியும் உதயனில் கண்டேன். பலமுறை உங்களை வாழ்த்தி எழுத நினைத்தேன். அது இப்போது தான் கைகூடியது.

சைவ முறைப்படி மெய்யன்போடு தமது கடமையைச் செய்து வாழும் ஆசிரியர்களின் குடும்பம் சீராகவும் சிறப்பாகவும் வாழ்ந்ததையும் , வாழ்வதையும் அறிவீர்கள்.

நீங்களும் அவ்வாறு வாழ இறைவனை வேண்டுகிறேன். வணக்கம்.

எப்பாடு பட்டும் உங்கள் கல்லூரிக்கு வர எண்ணியுள்ளேன். திருவருளின் எண்ணம் எப்படியோ? அறியேன். வணக்கம்.

இங்ஙனம்,
தங்களின் உண்மையான,
(ஒப்பம்) வை.க.சிற்றம்பலம்.

# சேவை நயப்பு

திருமதி . யோகமலர் புண்ணியமூர்த்தி



சேவைக்காலம்

| | | | |
|---|---|---|---|
| தி/ அல் - நஹ்ஹார் பாலிகா ம.வி , | 01.11.1976 | - | 24.02.1985 |
| யா/ ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர் | 25.02.1985 | - | 14.08.2003 |

ஒரு பாடசாலையின் பகுதித் தலைவர்,எப்படிச் செயற்படவேண்டுமென்ற வினாவிற்கு விடையிறுப்பதனால் திருமதி. யோகமலர் புண்ணியமூர்த்தியின் செயற் பாடுகளையே விடையாக்கிவிடலாம். இவருக்கு அறுபது வயதாகி விட்டது என்றால் யாருமே நம்பமாட்டார்கள். எண்ணியதை எண்ணியாங்கு எய்தத்துடிக்கும் நெஞ்சுரத்தோடு, உற்சாகமாகச் செயற்பட்டுக் கொண்டிருப்பவரை பார்த்து யார் நம்புவார்கள்?

கல்லூரியின் எத்துறை சார்ந்த செயற்பாடுகளிலும் அவரது பங்களிப்பில்லாமல் இருக்காது. காலை 8 மணிக்கெல்லாம் கல்லூரியில் ஆஜராகிவிடுவார். மாலை 4 மணிக்குப் பின்புதான் கல்லூரியை விட்டுப் புறப்படுவார். அவ்வளவு நேரமும் வேலை, வேலை, வேலை. பிறரது கருமங்களையும் தானே சுகமாகச் சுமக்கின்ற மனப்பக்குவத்தையும் இறைவன் அவருக்கு வழங்கியிருக்கிறான் போலும்.

சனி ஞாயிற்றுக்கிழமைகளில் மாணவர்களை பாடசாலை சார்ந்த நிகழ்வுகளுக்கு அழைத்துச்செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டாலும் தாமாகவே முன்வந்து தோள் கொடுக்கின்ற ஒரு நல்ல இதயம் . கம்பீரமான குரல் வளம், அவரது ஆளுமைக்கு அணிசேர்த்தது. இக் குரற் தொனியைக் காட்டியே ஆசிரியர்களைத் தன் வழிக்குக் கொண்டு வந்து விடும் திறம் அவரிடம் காணப்பட்டது.

திணைக்களம் சார்ந்த அலுவலர்கள் கல்லூரிச் செயற்பாடுகளைப் பரிசீலிப் பதற்கென வருகை தரும் போதெல்லாம் திருமதி. யோ புண்ணியமூர்த்தியின் கால்கள் நடக்கும் வேகம் இருக்கின்றனவே அப்பப்பா. சேவையிலிருந்து ஓய்வு பெறும் வயதெல் லையைக் இன்னும் கொஞ்ச ஆண்டுகளால் கூட்டி விடக் கூடாதா? என எண்ணத்தோன்றும்.

14 .08.2003 அன்று அவரது அறுபதாவது பிறந்த தினம். அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றமையைக் குறித்துக் கல்லூரிச் சமுகம் ஒரு சேவை நயப்பு விழாவையும் எடுத்திருந்தது. தொடர்ந்து சமூகப்பணியாக தனது சேவையைத் தொடரத், தாமாகவே முன்வந்துள்ள அவரின் மனப்பாங்கு விருத்தியை எண்ணிப் பார்க்கிறேன்.

கல்லூரிக்கான சேவையை வழங்கி , மன நிறைவு காண்பதற்கும் அவர்தம் குடும்பத்தினருடன் இணைந்து இன்ப வாழ்வை நுகர்வதற்கும் சோமாஸ்கந்தப் பெருமான் அருள் புரிவாராக.

த. பரமேஸ்வரன் , ஆசிரியர்

# நினைவில் நீங்காதவர்.....



## அமரர் நடராஜா ஆறுமுகதாசன்

எங்கள் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்,உபஅதிபர் அதிபர் எனப் பல்வேறு பதவிகளை வகித்த திரு.ந.ஆறுமுகதாசன் இறையடி எய்திவிட்டார் என்ற செய்தியை, உதயன் பத்திரிகை மூலம் அறிந்து கொண்டோம்.

1950 களில் எமது கல்லூரியில் ஓர் ஆசிரியராக இணைந்து கொண்ட இவர் பூமிசாத்திரம், தமிழ் போன்ற பாடங்களைப் போதித்தார். உபஅதிபராகப் பணியாற்றி கல்லூரி வளர்ச்சிக்காகத் தனது பங்களிப்பை நல்கினார். 1976 ஆம் ஆண்டிற் சில காலப்பகுதிகள் அதிபராகப் பதவி வகித்து அரும்பணியாற்றினார்.

சுதுமலையைச் சேர்ந்த அமரர் ந.ஆறுமுகதாசன் அவர்கள் தமது ஓய்வுக்காலத்தை அவுஸ்திரேலியாவில் பிள்ளைகளுடன் களித்து வருகிறார் என்ற செய்தியை அறிந்திருந்தோம். ஆனால் 25.08.2003 இல் வெளியான பத்திரிகை, இவரது மரணச் செய்தியுடன் வெளியாகும் என எள்ளளவும் எதிர்பார்க்க வில்லை.

பிறந்தவர் யாவரும் இறப்பது உலகநியதி என்ற வகையில்,

"ஒரு பொல்லாப்பு மில்லை
எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்"

என்ற மகான் செல்லப்பா சுவாமிகளின் ஆப்தவாக்கியங்களை எமக்கு ஆறுதலளிக்கும் வாக்கியங்களாகக் கொள்வோமாக.

ஓம் சாந்தி! சாந்தி ! சாந்தி !

வ.ஆறுமுகம்
அதிபர்

## மாதா பிதா குரு

அன்னை என்னும் தெய்வத்தை
அன்பாய் நாமும் வணங்கிடுவோம்
அவர்தம் அறிவுரை கேட்டே நாம்
அகிலம்போற்ற வாழ்ந்திடுவோம்

தந்தை என்னும் தலை மகனை
தாள் பணிந்தே வணங்கிடுவோம்
தந்தை சொல்லே மந்திரம் என்று
தரணியில் என்றும் தலை நிமிர்வோம்

குருவாய் எமக்கு அறிவளித்த
குலத்தை நாமும் பாடிடுவோம்
குருவின் வார்த்தை குறள் என்று
குவலயம் போற்ற வாழ்ந்திடுவோம்

கி.திவாகரன்
தரம் 3B

## பொம்மை

சின்னச் சின்னப் பொம்மை
சிங்காரப் பொம்மை
தத்தித் தத்தி நடக்கும்
தங்க நிறப் பொம்மை

கண்ணைச் சிமிட்டிக் காட்டும்
கதைகள் பலவும் பேசும்
நடனமாடிக் காட்டும்
நம்ம வீட்டுப் பொம்மை

நாளும் பொழுதும் பாடும்
நான் சொன்னபடி கேட்கும்
என்னைப் போல பொம்மை
எந்தன் அன்புப் பொம்மை

கு.மயூரதி
தரம் 3B

## சுத்தம் காப்போம்

சுத்தம் காப்போம் சுத்தம் காப்போம்
சுகமாய்வாழச் சுத்தம் காப்போம்
உடலும் உடையும் சுத்தம் பேணி
நலமாய் நாமும் இருந்திடுவோம்

சுற்றுச் சூழல் சுத்தம் பேணி
நல்ல காற்றைச் சுவாசித்திடுவோம்
நித்தம் நித்தம் சுத்தம் பேணி
நிலையாய் நாமும் வாழ்ந்திடுவோம்

மா.கஜானி
தரம் 3B

## கல்வி

கணப்பொழுது கற்றாலும்
தினப்பொழுது பெற்றாலும்
எப்போதும் அழியாதென்பதே
கல்வி!

ஆற்றினிலே அருவியானாலும்
பாட்டினிலே சுருதியானாலும்
மேட்டினிலே உன்தகுதியை உரைப்பதுவே
கல்வி !

புல்லிலே புனைந்தாலும்
சொல்லிலே தவழ்ந்தாலும்
கல்லிலே செதுக்கினாலும்
காலத்திற்குள் அழியாதென்பதே
கல்வி!

த.பதுஜா
தரம் 3B

## உலகம் பற்றிய சில தகவல்கள்

1. உலகில் மிகப்பெரிய எரிமலை எது ?
   கிலோனியா
2. உலகில் ஆகக்கூடிய தீவுகளைக் கொண்ட நாடு எது ?
   இந்தோனேசியா
3. உலகில் மிகப்பெரிய குடாநாடு எது ?
   அரேபியக் குடாநாடாகும்
4. உலகில் பெரிய நூதனசாலை எது ?
   பிஸ் தோனி என்ற நூதனசாலை

பா.எழிலரசன்.
தரம் 4A

## எமது கல்லூரி பற்றிய சில தகவல்கள்...........

1. எமது கல்லூரியின் நிறுவுநரின் பெயர் யாது ?
   அமரர்.மழவராயர் கந்தையா வள்ளல்.
2. கல்லூரியின் ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் ஒவ்வோர் ஆண்டிலும் எந்த மாதத்தில் , எத்திகதியில் கொண்டாடப்படுகிறது ?
   செப்ரெம்பர் 10
3. எமது கல்லூரிக் கீதம் பாடுகின்ற இராகம் யாது ?
   சங்கரா பரணம்
4. கல்லூரியின் அத்திவாரதினம் எந்த நட்சத்திரத்தில் அனுட்டிக்கப்படுகின்றது?
   தைமாத அத்த நட்சத்திரம்

கு.சஜிந்.
தரம் 4A.

## இலங்கை பற்றிய தகவல்கள்

1. உயரமான மலை - பீதுருதாலகாலமலை.
2. நீளமான நதி - மகாவலிகங்கை.
3. இயற்கைத்துறைமுகங்கள் - திருகோணமலை ,காலி.
4. உயரமான நீர் வீழ்ச்சி - பம்பரகிந்த
5. கண்ணைக் கவரும் நீர் விழ்ச்சிகள் - துன்கிந்த,தியலுமை.
6. தேசிய மலர் - நீலோற்பலம்
7. தேசிய மரம் - நாகமரம்.
8. அதிக மழை வீழ்ச்சி உள்ள இடம் - வட்டவளை.
9. குறைவான மழை உள்ள இடம் - மறிச்சுக்கட்டி.
10. தேசிய விளையாட்டு – கரப்பந்தாட்டம்.
11. மிகப் பெரிய தாவரவியற்பூங்கா - பேராதனைப் பூங்கா.

த. லேனுஜா.
தரம் 5A

## பூக்கள்

சின்னச் சின்னப் பூக்கள்
சிறந்த நல்ல பூக்கள்
சிவப்பு வெள்ளைப் பூக்கள்
சிங்காரப் பூக்கள்

வண்ண வண்ணப் பூக்கள்
வடிவான பூக்கள்
வட்டமான பூக்கள்
வாசம் வீசும் பூக்கள்

பார்க்கும் போதும் சிரிக்கும்
பறிக்கும் போதும் சிரிக்கும்
காட்டும் போதும் சிரிக்கும்
கண்ணுக்கழகு தந்திடும

தி.கங்காசுதன்
தரம் 5A

## விடுகதைகள்

1. பழுக்காத பழம் அது என்ன பழம் ?
2. வறுக்காதவறை அது என்ன வறை ?
3. வெட்டாத பாத்தி என்ன பாத்தி ?
4. அடிக்க அடிக்கக்கத்தும் குழைபோட்டால் தின்னாது ?
5. மாடு படுத்திருக்க கயிறு மேயுது அது என்ன ?

1. ஜஸ்பழம் 2. ஏவறை 3. முஸ்பாத்தி
4. மேளம் 5. பூசணிக்காய்

க. சிவோதயன்.
தரம் 5A

## விடுகதைகள்

1. வெயிலில் மலரும் காற்றில் உலரும் அது என்ன ?
2. வயலில் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை அவன் யார் ?
3. கல்வீட்டுத்தாத்தா மெதுவாகத்தான் நடப்பார் அவர் யார் ?
4. மழைகாலம் வந்து விட்டால் மகராசி பாட்டெடுப்பாள் அவள் யார் ?
5. புத்தாண்டில் புகுந்த விருந்தாளி தங்குவதோ ஓராண்டு அவன் யார் ?
6. தீக்குளித்தாலும் திடமாக இருப்பவர் அவர் யார் ?
7. தலையைச் சீவினால் தாளில் நடப்பான் அவன் யார் ?
8. உயிரில்லாத நிதீபதி உரியதீர்ப்பு வழங்குவார் அவர் யார் ?
9. வரும்போது வெண்சிவப்பு! வளரவளர தகதகப்பு போகும் போது கடும்சிவப்பு! அது என்ன ?
10. ஊசி போட்ட வைத்தியர் பாடிக்கொண்டு போகிறார் அவர் யார்?

அ.தராகுலன்.
தரம் 5A

1. வியர்வை 2. மண்புழு
3. ஆமை 4. தவளை
5. கலண்டர் 6. செங்கல
7. பென்சில் 8. தராசு
9. சூரியன் 10. நுளம்பு

# கார்திகை விளக்கீடு

இலங்கையில் பல இன ,மத மக்கள் பல்லாண்டு காலமாக வாழ்ந்து வருகின்றனர். இந்து மக்களாகிய நாம் ஆண்டுதோறும் பல சமயம் சார்ந்த பண்டிகைகளைக் கொண்டாடுகின்றோம். அவற்றில் சில தைப் பொங்கல், தீபாவளி, புதவருடப்பிறப்பு, ஆடிப்பிறப்பு , கார்த்திகை விளக்கீடு என்பனவாகும்.

இவற்றுள் கார்த்திகை விளக்கீடு பற்றிச் சற்று நோக்குவோம். இத்திருநாள் வருடத்தின் கார்த்திகை நட்சத்திர நாளில் கொண்டாடப்படுகின்றது. இத்திருநாளைத் தீபத்திருநாள் என்றும், கார்த்திகை விளக்கீடு என்றும் அழைப்பர். இத்திருநாளில் சைவ மக்களாகிய நாம் ஆலயங்களிலும் வீடுகளிலும் தீபங்களை ஏற்றி வழிபடுகின்றோம். இறைவனைச் சோதி வடிவில் வழிபடுவதை இத்திருநாள் குறிக்கின்றது. இத்தினத்தில் ஆலயங்களிலும் வீடுகளிலும் கொழுக்கட்டை, மோதகம் என்பவற்றை இறைவனுக்கு விசேடமாகப் படைத்து மகிழ்கின்றோம். இத்திருநாள் முருகன் ஆலயங்களில் விசேடமாகக் கொண்டாடப்படுகின்றது. முருகன் ஆலயங்களில் திருக் கார்த்திகை அன்று தினை மாவுடன் தேன் சர்க்கரை பிசைந்து மாவிளக்குச் செய்வர். அதனுள் நெய் இட்டுத் தீபம் ஏற்றி இறைவனை வணங்குவர். இவ் வழிபாட்டைக் குமாராலய தீப வழிபாடு என்பர். வீடுகளிலும் ஏனைய ஆலயங்களிலும் ஏற்றப்படும் தீபம் சர்வாலய தீபம் எனப்படும். விஷ்ணு ஆலயங்களில் ஏற்றப்படும் தீபம் விஷ்ணு ஆலயதீபம் எனப்படும்.

திரு என்னும் அடைமொழிச் சொல்லை வைத்து திருக்கார்த்திகை என்னும் பெயர் வந்தது. இந்தியாவின் திருவண்ணாமலை திருத்தலத்தில் நடைபெறும் தீப விழா சிறப்பு வாய்ந்தது. அங்குள்ள மலை உச்சியில் மாபெரும் தீபம் ஏற்றப்படுகின்றது. இதில் இலட்சக் கணக்கான மக்கள் கார்த்திகை நட்சத்திரத்தின் முதல் நாளான பரணி நட்சத்திரத்தில் மலையடிவாரத்திற்குச் சென்று தீபம் ஏற்றுவது வழமை. இத் தீபம் பரணித் தீபம் எனப்படும். இது பிரமா, விஷ்ணு அடி முடி தேடிய போது இறைவன் சோதி வடிவில் நின்றதைக் குறிக்கின்றது.

இத் தினத்தில் ஆலயங்களில் சொக்கப்பானை கொளுத்தும் நிகழ்வு நடைபெறும். பூஜை முடிந்ததும் அதை அக்கினி மூட்டி எரிய விடுவர். தீப ஒளியானது. இருளை அகற்றுகின்றது. அவ்வாறே எமது மனங்களிலும் அன்பு, கருணை ஆகிய தீபங்களை ஏற்றுவோம். அக இருளை அடியோடு அகற்றுவோம்.

த.மிருணா
தரம் : 6A

*நெஞ்சு இலக்கணம் தெரியாதவனுக்குப்*
*பஞ்ச இலக்கணம் தெரிந்து பலனென்ன ?*
*- தமிழ்ப் பழமொழி*

# கல்வி

"அரிது அரிது மானிடராதல் அரிது" இது ஔவையாரது கூற்று. அரிதான இந்த மானிடப் பிறவிக்கு கல்வி மிகவும் முக்கியமானது. மனிதனை மற்றைய விலங்குகளிலிருந்து மாறுபடுத்துவது ஆறாவது அறிவான பகுத்தறிவு. மனிதப் பிறவிக்கு இயல்பாகவே வாய்த்திருக்கிறது. இந்தப் பகுத்தறிவை வளம் படுத்துவதற்குக் கல்வி வேண்டும்.

கல்வியை "இளமையில் கல்" என்கிறார் ஔவையார். "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையில் அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே". என்கிறது சினிமாப் பாடல் ஒன்று.

ஆம் , ஆறாம் அறிவோடு பிறந்த குழந்தை புத்தம் புதிய பிராணி. அது பலவிதமான சூழல் உள்ள பூமியிலே வளரும் போது பலவிதமான அறிவைப் பெற்று விடுகின்றது. அவை நல்லனவாயும் இருக்கும். தீயனவாயும் இருக்கும். குழந்தை நல்லவனாக வரவேண்டும் என்பதுதானே பெற்றோரின் விருப்பம். அதனால் புதிய பிள்ளையாக இருக்கும்போதே அதாவது இளமைப் பருவத்தில் இருக்கும் போதே நல்ல கல்வியைக் கற்க வேண்டும். என்பது ஔவையாரின் விருப்பம் ஆகும். மற்றைய இடையூறுகள் இல்லாமல் இருக்கும் போது கற்கும் கல்வி பசுமரத்தாணி போல மனதில் நன்கு பதியும். இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்கிறார் ஔவையார்.

கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

என்பது வள்ளுவர் வாக்கு இதில் கல்வியை எப்படிக் கற்க வேண்டும? எந்தக் கல்வியைக் கற்க வேண்டும்? கற்ற பின் என்ன செய்ய வேண்டும்? என்பதற்கெல்லாம் அறிவுரை கூறியுள்ளார் வள்ளுவர்.

கற்பவை என்று வள்ளுவர் காட்டுவது நாம் கற்க வேண்டிய, நமக்கு விருப்பமான கல்வியையே ஆகும். அதைத் தெரிந்து எடுப்பது பெற்றார் ஆசிரியர் கடமையாகும். இளமைப் பருவத்தினருக்கு வழிகாட்டிகள் பெற்றோரும் ஆசிரியரும் ஆவர்.

இனிக் கற்க்க வேண்டிய நூல்களை, கல்வியைக் கசடறக் கற்க வேண்டும். அதாவது ஐயப்பாடு, மாறுபாடு , இல்லாமல் விளங்கிக் கற்க வேண்டும்.

இப்போழுது கல்வி உலகம், ஒரு பிள்ளை 14 வயது வரை கல்வி கற்க வேண்டும் எனக் கூறுகிறது. ஓரளவுக்குத் தனது சீவியத்துக்கு ஒரு தொழிலைச் செய்வதற்கேற்ப அறிவைக் பெறுவதற்கு இந்த 14 வயது கால எல்லையை வைத்திக்கிறார்கள். மக்கள் கல்வியறிவு உடையவர்களாக இருந்தாலேயே நாடு முன்னேறும் என்ற எண்ணத்தில் அரசாங்கம் இந்த நடைமுறையை வகுத்துள்ளது.

ஆனால் எல்லையில்லாத கல்வி கற்பதற்கு வயது எல்லை கிடையாது. மேலும் கல்வி கரையில கற்பவர் நாள் சில என்பது பழமொழி. எமது சீவியம் முழுவதும்

தொடர்ந்து கற்றாலும் கல்வி அறிவை முழுமையாகப் பெற்று விட முடியாது. எனவே தொடர்ந்து கல்வியைக் கறறுக் கொண்டே வாழ்நாளைக் கழிக்கலாம்.

இவ்விதம் கல்வி கற்றால் கற்றபடி நடக்க வேண்டும் என்பது வள்ளுவர் விதி. நிற்க அதற்க்குத் தக என்கிறார். அதாவது கற்றபடி ஒழுக வேண்டும் என்கிறார்.

கல்வியின் நோக்கம் கற்றபடி ஒழுகுவதிலேதான் பூர்த்தியாகின்றது. இல்லாவிட்டால் அது வெறும் ஏட்டுச் சுரக்காய் தான். கற்றவனுக்கும் பயன் இல்லை. கற்றவனால் நாட்டுக்கும் நன்மையில்லை என்று ஆகிவிடும். இவ்விதமாக கல்வியறிவு உடையவர்களைத்தான் உலகம் மதிக்கும். கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற ஔவையின் கூற்றை

கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லா தவர்.

என்று திருவள்ளுவர் உறுதிப் படுத்துகின்றார். நமது உறுப்புக்களுக்குட் சிறந்தது கண் ஆகவே கல்வியும் கண்களைப் போலவே சிறந்தது. என்று கூறி கற்றவர்களுக்குத் தான் அவை உண்மையான கண்கள் என்றும் கல்லாதவர்களுக்கு அவை புண்கள் என்றும் விளக்கம் கூறி கல்வியின் சிறப்பை பெற வைக்கின்றார். நமது வாழ்க்கைக்குத் தேவையான செல்வங்கள் பல உண்டு அவைகள் கள்வரால் கவரப்படக் கூடியவை எடுக்க எடுக்க குறைந்து போவன. ஆயினும் கல்வியை யாரும் கவர்ந்து செல்ல முடியாது. கொடுக்கக் கொடுக்கக் கூடுமே அன்றிக் குறைவுபடாது.

எனவேகல்வியின் பெருமையை உணர்ந்து செயற்படுவோம். “கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன்” என்ற வாக்கை மனதிருத்திக் கல்வியிற் கவனம் செலுத்துவோம்.

நி.லக்சிபன்
தரம் 6A

# பௌர்ணமி நாள்

இரவில் விளக்கொன்று எழுந்து வந்ததுவோ! என்று எண்ணுமளவிற்கு எங்கும் தண்ணொளி பரம்பி இருந்தது. நீல வானில் கோடானுகோடி நட்சத்திரங்கள் மின்னி மின்னி வெள்ளி விளக்குகள் போல் அலங்கரித்து இருக்க வட்ட நிலவின் வரவை , மரங்கள் கொடிகள் செடிகள் யாவும் மெல்ல கை அசைந்து வரவேற்றன. அல்லி மலர்கள் கண்விழித்துப் பார்க்க வாசமுள்ள மல்லிகையும் மொட்டவிழ்ந்து விண்ணில் எழுந்த விந்தையை வியப்புடன் நோக்கின.

பௌர்ணமியே வருக !
இரவில் பகல்போலெமை மகிழ்விக்க
நேசமுடன் வருக !
சின்னப்பிள்ளைக்கு அம்புலி மாமா என
கூறி உணவருந்த வருக !
பௌர்ணமியே வருக ! வருக !

நீல வானைத் தன்னுள் நிழற்படம் பிடித்து வைத்திருக்கும் நீண்ட கடல் மட்டும் சும்மா இருக்குமாஎன்ன? பொங்கும் கடலலைகள் ஆரவாரித்து ஒளி உமிழும் அந்த வண்ணத்தட்டினை எட்டிப்பிடித்து வர முட்டி மோதிக் கொண்டு ஒன்றன் பின் ஒன்றாக அலைகள் போட்டியிட்டு மேலெழுந்து பார்த்தன. இருப்பினும் அது எட்டாது போக மீண்டும் கடலைச் சேர்ந்தன. இத்தனை மகிழ்வா? பௌர்ணமி நிலவை , பால்பொழியும் அந்த நிலவை வரவேற்க இத்தனை ஆரவாரமா?

மனிதர்கள் மட்டும் என்ன சும்மாவா இருந்தார்கள்? பகல் முழுவதும் பாடுபட்டு உழைத்து பால்நிலவில் உணவருந்தினர். உண்ண மறுத்து அடம் பிடிக்கும் சின்னக் குழந்தைகட்கு அன்னை அந்த நிலவைக் காட்டி அமுதூட்டலும் சிறுவர்கள் வட்ட நிலவை தம்முடன் விளையாட வரும்படி வருந்தியழைத்தலும் தொடர்ந்தன. கவிஞர்கள் மனதில் பௌர்ணமி நிலவு கற்பனை ஊற்றை பொங்கி வழியச் செய்வது வழமை. இந்நிலவைப் பாடாத கவிஞர்களே இல்லை எனலாம்.

மெல்லிய தென்றல் சாமரம் வீச , கோடானுகோடி நட்சத்திரத் தோழியர் புடைசூழ, கடலும், அலையும் ,பூக்களும், மரங்களும் ,செடி கொடிகளும், மனிதரும், கவிஞரும் ஆவலுடன் வாழ்த்திசைத்து வரவேற்க எல்லோரையும் மகிழ்விக்க என மெல்ல மெல்ல மேலெழுந்து வந்த நிலவு மகள் எல்லோர் மனதிலும் இன்பம்பெற தண்ணொளிவீசி வானவீதியில் பிரகாசித்துக் கொண்டிருந்தாள்.

கு. தேனுஜா
தரம் 6A

## தொலைக்காட்சியும் மாணவர்களும்

தொலைக்காட்சி..........இன்று பட்டி தொட்டியெங்கும் பேசப்படுகின்ற ஒரு பொருள். இது 1926 இல் பிரிட்டனைச் சேர்ந்த ஜான் லக்கி பெய்ட் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இதை அறியாதவர்களே கிடையாது. பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை இந்த மோகம் வியாபித்துள்ளது.

தொலைக்காட்சியினால் கிடைக்கும் நன்மைகளோ பலப்பல. உலகின் எந்த மூலையில் நடக்கும் நிகழ்வையும் உடனுக்குடன் கட்புலனாகக் காட்டும் திறமை தொலைக்காட்சிக்கு உண்டு. கணனியுகமான இன்றைய காலகட்டத்திலே தொழில் செய்து களைத்துவிட்ட மனிதனுக்கு ஆறுதல் அளிப்பதற்குத் தொலைக்காட்சிகள் பல

நிகழ்சிகளை வழங்கிவருகின்றன. மனதுக்கு இதமான அறிவுபூர்வமான நாடகங்கள் பலவற்றை தொலைக்காட்சியில் ஒளிபரப்படுகின்றன. இந்த நாடகங்கள் உழைத்துக் களைத்த மனிதனுக்கு மனவமைதியையும் உற்சாகத்தையும் வழங்குகின்றன. மனம் விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப்போகும் என்பது ஆன்றோர்வாக்கு. அதற்கு அமைவாகப் பலநகைச்சுவை நாடகங்கள், நகைச்சுவைத் திரைப்படங்கள் என்பன தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகின்றன

மற்றும் சின்னஞ்சிறு மொட்டுக்களைக் கவரும் நிகழ்சிகளையும் தொலைக் காட்சிகளில் காணலாம் . சிறார்கள் நாளாந்தம் வாசித்துமகிழும் சிறுவர் கதைகளை கணனித் தொழில்நுட்பம் மூலம் "காட்டூர்ன்"(Cartoon) சித்திரங்களாக்கித் தொலைக காட்சியில் காண்பித்துச் சிறார்களை மகிழ்விப்பர். மற்றும் விளையாட்டுக்களை (T.V games) கூடத் தொலைக்காட்சிகளில் விளையாடி மகிழலாம். இலங்கையில் ரூபவாகினி , channel eye ,சிரச, சுவர்ணவாகினி, சக்தி போன்ற பல உள்நாட்டு அலைவரிசைகள் உள்ளன. இவற்றின் மூலம் மாணவர்கள் பல அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் .Dish antena மூலம் உலகெங் கிலுமுள்ள பல வெளிநாட்டு அலைவரிசைகளையும் நாம் தொலைக்காட்சியில் கண்டு களிக்கலாம். பயனுள்ள வெளிநாட்டு அலைவரிசைகளுக்கு உதாரணங்களாக Discovery channel , National Geographic Channel, Star sports, BBC world, DD sports ஆகியவற்றைக் கூறலாம். Discovery, National geographic channel போன்றன நாம்வாழும் பூமி அங்கு வாழும்பல்வேறு வகைப்பட்ட உயிரினங்கள் என்பன பற்றியஆய்வுகளை ஒளிபரப்பும் அலைவரிசைகளாகும். sfar sports, DD sports ஆகியன உலகில் நடைபெறும் விளையாட் டுக்களை நேரடியாகவோ அல்லது பதிவு செய்தோ ஒளிபரப்பிவருகின்றன. BBC world என்பது உலகத்திலேயே பிரசித்திபெற்ற தரம் வாய்ந்த ஒரு செய்தி அலை வரிசையாகும். bloomberg எனும் அலைவரிசை பங்குச்சந்தை நிலைவரங்கள், பல்வேறுபட்ட தொலைக் காட்சியலை வரிசைகளின் நிகழ்ச்சிநிரல் ஆகியவற்றை ஒளிபரப்பிவருகின்றது. இவ்வகையான வசதிகளைத்தொலைக்காட்சியே வழங்கி வருகின்றது எனக் கூறினால் அது மிகையாகாது. இறுவட்டுக்கள் (CDs). வீடியோ நாடாக்கள் போன்றவற்றின் மூலம்காட்சிகளைக் கண்டுகளிப்பதற்குத் தொலைக்காட்சியே உதவுகின்றது. மேற்போந்த தகவல்கள்தொலைக்காட்சி மூலம்கிடைக்கும் நன்மைகளாகும்

இனித்தொலைக்காட்சியினால் விளையும் தீமைகளைச் சற்று எடுத்து நோக்குவோம் தொலைக்காட்சியினால்எவ்வளவு நன்மைகள் விளைகின்றனவோ அவ்வளவு தீமைகளும் விளைகின்றன என்பதை மறுக்க முடியாது. தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் cartoons எனப்படும் கேலிச்சித்திரங்களின் கண்களிலிருந்து, ஒரு வித ஒளி வெளிவருவ தாகவும் அது பார்ப்போரின் கண்களை நாளடைவில் பாதிக்கும் எனவும் விஞ்ஞானிகள் திடுக்கிடும் ஆராய்ச்சி முடிவுகளை வெளியிட்டுள்ளார்கள். மற்றும் star movies, channel (v) போன்ற, ஆபாசப்படங்களை ஒளிபரப்பும் அலைவரிசைகளைப் பார்க்கும் வயதடையா தவர்கள், இளைஞர்கள் ஆகியோர் சீரழிகிறார்கள், தவறாக வழிநடத்தப்படுகிறார்கள் இப்படியான நிகழ்ச்சிகள் இன்றைய சமூகத்தில் வன்முறைகள் தூண்டப்படுவதற்குக் காலாகின்றன. மற்றும் கல்வி கற்கும் மாணவர்கள் தமக்குக் கல்வி கற்பதற்காக ஒதுக்கப்பட்ட நேரங்களைக் கூடத் தொலைக்காட்சிகளைப் பார்ப்பதால் மண்ணாக்கு கிறார்கள். மற்றும் அநேகமான பெண்கள் தொலைக்காட்சிகளுக்கு அடிமையாகி

விடுகிறார்கள். இதனால் அவர்கள் தமது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றத் தவறுகின் றார்கள். மற்றும் அதிகநேரம் தொலைக்காட்சியைப் பார்ப்பவர்களின் கண்கள், தொலைக்காட்சியிலிருந்து வெளிவரும் ஒவ்வாத ஒளிக்கதிர்களால் நாளடைவில் பாதிப்படை கின்றன. இவை தொலைக்காட்சிகளினால் விளையும் தீமைகளாகும்.

பாலும்நீரும் கலந்திருக்கும்போது நீரைவிலக்கிப் பாலை அருந்தும் அன்னப்பறவை போல நாமும் தொலைக்காட்சியில் கிடைக்கும் நன்மைகளை மட்டும் பயன்படுத்தவேண்டும். தீமைகளை விலக்கவே வேண்டும். படிக்கும் மாணவர்கள் தொலைக்காட்சியை பார்ப்பதற்கு ஒருகுறித்த காலப்பகுதியை மட்டும் எடுத்துக்கொண்டால் மேற்கூறிய பிரச்சினைகள் ஏற்படாது.

ஆகவே தொலைக்காட்சியை நன்மைதரும் வழிகளில் மட்டும் பயன்படுத்துவோம். உதாரணமாகக் கத்தியைக் காய்கறிள் நறுக்கவும் பயன்படுத்தலாம். ஒருவரைக் கொல்லவும் பயன்படுத்தலாம். தொலைக்காட்சியும் இதுபோன்றதே ஆகவே தொலைக்காட்சியில் நன்மை தருவனவற்றை மட்டும் பார்த்து வாழ்க்கையில் முன்னேற்றமடைவோம்.

யோ. சங்கீதா
தரம்: 10 A

# அன்பு

இறைவன் படைத்த
பிரமாண்டமான இத்தரணியில்
பிறரிடமிருந்து பறிக்க முடியாததும்
பிரிக்க முடியாததும் ஒன்று உண்டு

மூன்றெழுத்தில் உருவானதும்
பல கோடி மக்களை இணைப்பதும்
மூர்க்கரைக் கட்டிப் போட உதவுவதும்
ஆகிய மூலிகை வார்த்தை அது

கேட்டு வாங்க இயலாதது
கேட்டுக் கொடுக்க முடியாதது
உயர்வுக்கு நிகர் கூற முடியாததுமான
உலகின் அரும் பெரும் செல்வம் அது

காலத்தால் அழியாததும்
காற்றினால் கொண்டு
செல்லமுடியாததும்
வார்த்தைகளால் கூற முடியாததும்
மேலான தெய்வத்தின் வடிவானதும்அது

காந்தியின் பேச்சிலும்
அன்னை தெரேசாவின் சேவையிலும்
குழந்தையின் முல்லைச் சிரிப்பிலும்
குடி கொண்டிருப்பது அது

இனவெறி பிடித்த இன்றைய உலகில்
இதயங்களை ஒன்றுபடச் செய்து
இனிவரும் இளைய தலை
முறையினரிடம்
உச்சரிப்போம் அன்பு என்ற
வார்த்தையை.

ஜெ.நிசோபனா
தரம் - 8 A

பயணக் கட்டுரை

# வடக்கிலிருந்து தெற்கு நோக்கி .............

*(வடக்குத் தெற்குப் பாடசாலை மாணவர்களை ஒன்றிணைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கு கொண்ட மாணவியின் பயண அனுபவங்கள்)*

எனக்கு அந்த நாட்களை நினைவுகூர்ந்து பார்க்கும்போது இன்றும் இனிப்பாகவே இருக்கின்றது. பெப்ரவரி 7 ஆந்திகதி தென்னிலங்கை நோக்கிய எங்கள் பயணம் இடம்பெறப்போகின்றது என அறிந்த நாள் முதலே என்னை அறியாமலேயே எனக்குள் ஒரு மகிழ்வு உணர்வு மேலோங்கி யெழுந்தது. சிங்களதேசம் எப்படியிருக்கும்? அவர்களுடைய உணர்வுகள் எப்படி இருக்கும்? எங்கள் துயரங்களை, உணர்வுகளை எப்படிஎப்படியெல்லாம் என்வயதை ஒத்தவர்களிடம் கூறிக்கொள்ள வேண்டும்? மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்க்கின்றேன்.

நான் எதிர்பார்த்திருந்த நாளும் மலர்ந்தது. இரவு முழுவதும் மகிழ்ச்சிப் பிரவாகத்தில் எனக்கு நித்திரையே வரவில்லை. அதிகாலை நிலம் வெளுக்க முன்னரே அப்பாவுடன் எங்கள் கல்லூரியை வந்தடைந்து விட்டேன். காலை 5.30 மணிக்கு எல்லோரும் வந்து விட வேண்டும் என்ற அதிபரின் வேண்டுதலுக் கமைவாக என்போன்ற மாணவர்கள் 25 பேரும் ஆசிரியர்கள் பெற்றோர்கள் என 7 பேரும் கல்லூரியில் ஒன்று கூடியிருந்தோம். எங்களை வழியனுப்பி வைப்பதற்காக அதிபருட்படப் பலர் சமுகந் தந்திருந்தனர் நேரம் காலை 6.10 ஆகிவிட்டது. எங்களுக்குரிய வான் வந்தபாடாக இல்லை. ஏக்கம் மேலெழுகிறது. ஆனால், அதற்கு ஒரு தீர்வு வந்தமையுமாற்போல் எங்களுக்குரிய மினிபஸ்ஸும் வந்து சேர்ந்தது. எல்லோரும் ஏறிக்கொண்டோம். அதிபர், ஆசிரியர்கள், வழியனுப்ப வந்த பெற்றோர்கள் என எல்லோரும் கையசைக்க சோமாஸ்கந்தனை நினைந்து எங்கள் கரங்கள் வழுத்த வண்டி மெல்ல மெல்லப் புறப்பட்டது. அதைவிட வேகமாக எங்கள் மனங்கள் பறந்தோடத் தொடங்கின.

G.T.Z நிறுவனத்தின் ஏற்பாட்டில் புனர்வாழ்வளிப்பு, அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வடக்குத் தெற்குப் பாடசாலை மாணவர்களை ஒன்றிணைக்கும் நிகழ்ச்சித்திட்டம் இரண்டு கட்டங்களாக இடம் பெற்றது. இதன் முதற் கட்டத்தில் 2002 நவம்பர் 29 ஆந் திகதி முதல் டிசம்பர் 2 ஆந் திகதிவரை தென்னிலங்கையிலுள்ள ராகம, பட்டுவத்த சிங்கள மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோரும் எங்கள் கல்லூரிக்கு விஜயம் செய்தனர். தங்கள் உணர்வுகளைப் , பாரம்பரிய நிகழ்ச்சிகளை, விளையாட்டுக்களை எங்களுடன் பகிர்ந்து கொண்டனர். இதன் இரண்டாவது கட்ட நிகழ்விலேயே நாங்கள் கலந்து கொண்டுள்ளோம். நாங்கள் பட்டுவத்தை நோக்கிப் பயணிக்கிறோம்.

யாழ் மத்திய கல்லூரியில் சிறு ஓய்வு கிடைத்தது. இந்நிகழ்ச்சித் திட்டத்திற் பங்கேற்கும் யாழ்ப்பாணத்தின் 21 பாடசாலைகளின் வரவும் உறுதிப்படுத்தப்பட்டது. பாடசாலைகளின் சார்பில் அதன் அதிபர் அல்லது ஆசிரியர் வாழ்த்துரை வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது. எங்கள் கல்லூரியின் சார்பில் ஆசிரியர் ச.லலீசன் கருத்துரை வழங்கினார். இலங்கையிலேயே இலவசக் கல்வியைப் பாடசாலை மட்டத்தில்

முதன்முதலில் அறிமுகம் செய்தவர் எங்கள் கல்லூரி நிறுவுநர் கொடைவள்ளல் அமரர் மழவராயர் கந்தையா அவர்களே என அவர் குறிப்பிட்டபோது எனக்குள் ஒரு மின்சாரம் பாய்ந்தது. எங்கள் பெருமைகள் பலப்பல. அவற்றைப் பிறர் அறியும்படி செய்வதும் எங்கள் பணி. என்பதை உணர்ந்து கொண்டேன்.

காலை 9 மணியளவில் மத்திய கல்லூரி மைதானத்திலிருந்து எமது பயணம் ஆரம்பித்தது. முன்னும் பின்னும் G.T.Z தொண்டர்களின் வாகனங்கள் காவலுக்கு வர நடுவே 21 மினி பஸ்களும் சென்றன. “ரெயின் (train) போற மாதிரிக் கிடக்குது” என ராகினி ரீச்சர் சொல்ல அது எப்படி இருக்கும் என எங்களில்ப் பலர் அறியாமலே “ஓம் ரீச்சர்” என ஆமோதித்தார்கள்.

G.T.Z இன் ஏற்பாட்டுப் பயணம் என்பதால் வழியில் எவராலும் தாமதம் ஏற்படவில்லை. செல்லும் வழியில் ஆனையிறவு உப்பளம் எதிர்ப்பட்டது. வீரசுதந்திரக்காற்று எம்மைத் தழுவுவது போன்ற உணர்வு என்னுள் ஏற்பட்டது. இதுதான் முந்தின காம்ப் (camp) என சரித்திரச் சான்றுகளை எங்கள் ஆசிரியர்கள் கூறிச் சென்றனர். உப்பள உப்பு உற்பத்தி பற்றிக் கதை திசைமாறியது. உப்பு உற்பத்தி எப்படி இருக்கும் என்று கமலா ரீச்சரும் வாகீசன் சேரும் (sir) மாறி மாறி விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தனர். என்மனம் அங்கு வித்தானவர்களின் நினைவுகளுக்குள் சங்கமித்துவிட்டது.

நேரம் 3 மணி ஆனபோது வவுனியா வாடிவீட்டில் உணவு உண்டோம் இரவு 8 மணியளவில் அநுராதபுர மேயரின் வரவேற்பிற்கு உள்ளானோம். இப்படி வழிவழியே சிங்கள சகோதரர்கள் கையசைத்து வரவேற்பளித்தனர். சமாதான காலம் மக்கள் மனங்களில் எவ்வளவு மாற்றத்தைத் தந்து விட்டது. பெப்ரவரி 8 ஆந் திகதி அதிகாலை 3.30 மணிக்கு ராகம பொலிஸ் நிலைய வாயிலில் எங்கள் வாகனங்கள் தரித்தன. எங்களை அழைத்துச் செல்வதற்காக பட்டுவத்த சிங்கள மகா வித்தியாலய ஆசிரியரான திரு.சுனில் செனவிரட்ன காத்திருந்தார். அரைக் காற்சட்டையுடன் ஆஜானுபாகுவான தோற்றம் கொஞ்சம் வயதாகிவிட்டது போலத் தெரிந்தார். நரை மயிர்களை பஸ் வெளிச்சத்திற் கண்டுகொண்டேன் Good morning every body என்று தொடங்கியவர் எங்கள் பயணம் எப்படி என ஆவலோடு வினாவினார். பட்டுவத்தை செல்வதற்கு எங்கள் மினிபஸ் சாரதி ஈசனுக்கு வழிகாட்டினார். பட்டுவத்தை சிங்கள மகா வித்தியாலயத்தில் பெருந் திரளான மக்கள் கூடியிருந்தனர். அக்கல்லூரியின் மாணவர்களும் சீருடையில் நின்றிருந்தனர். எங்களை மிக ஆவலோடு வரவேற்றனர். “வனக்கம்” இது கொச்சைத் தமிழில் அவர்கள். “ஆயுபோவன்” இது எனது பதில் வணக்கம். எங்கள் பயணப் பைகளையும் தாங்களே சுமந்தனர். நன்றாகத் தான் வரவேற்கிறார்கள் என எனது உள் மனம் பேசியது.

காலை எங்கள் ஊர் உலா ஆரம்பமானது. நேரே தலை நகர் கொழும்பு சென்றோம். சுகததாச சர்வதேச விளையாட்டரங்கு, பிறேமதாச சர்வதேச கிரிக்கட் மைதானம். என்பவற்றைக் கண்டு பிரமித்துப் போய்விட்டோம். எங்கள் மன ஆசை Zoo பார்க்கவேண்டுமென மேலெழுந்தது. அந்த ஆவலும் நிறைவேறியது. தொடர்ந்து காலிமுகத் திடலில் எங்கள் மாலைப் பொழுது கழிந்தது. இரவு ‘சத்துட்டு உயன’ என்ற சிறுவர்

விளையாட்டு நிகழ்வு. எங்களுடன் எங்கள் ஆசிரியர்களிற் சிலரும் சிறுவர்களானார்கள். இராட்டினம், சுழல் விமானம், மின்பொறிக் கார் ஓட்டம், எனப் பல விளையாட்டுக்கள். எனக்கு அவ் இடத்தை விட்டு நீங்க மனம் வரவில்லை ஆனால் ரீச்சர்மார் விடுவார்களா? எங்களை அழைத்து வானில் மீண்டும் ஏற்றி பட்டுவத்தை கூட்டிச் சென்றனர். இரவுப் பொழுதைக் கழித்தபின் புதன் கிழமை காலை வலைப் பந்தாட்டம் கரப்பந்தாட்டம் என விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்டோம்.

எங்கள் வரவை அறிந்து கொண்ட பத்திரிகை நிருபர்களும் எங்களை நோக்கிப் படையெடுத்து வரத் தொடங்கினர். இந்த நாட்டில் நாங்களும் நீங்களும் (சிங்களவர்) சம உரிமையுடன் வாழவேண்டும். எங்கள் நிலத்தின் தனித்துவம் அங்கீகரிக்கப்பட வேண்டும். இராணுவம் எங்களுக்குத் தேவை இல்லை. இப்படிப் பலபல கருத்துக்களை உணர்வு பூர்வமாய் அங்கே நாம் வழங்கும் செய்திகளாகப் பரப்பி விட்டோம்.

மாலை வேளை களனி ரஜ மகா விகாரைக்கு எங்களை அழைத்துச் சென்றனர். பட்டுவத்தை சிங்கள மகா வித்தியாலயத்தின் அதிபர், உபஅதிபர் என இருவரும் பிக்குமார்களாக இருந்தமையால் அந்தக் கோவிலின் சரித்திரத்தை எங்களோடு பக்தியுடன் பகிர்ந்து கொண்டனர். இலங்கையின் தேசிய மலரான நீலோற்பல மலர், தேசிய மரமான நாக மரம் என்பவற்றை நேரில் தொட்டுப் பார்த்தது ஒரு புதிய அனுபவமாக இருந்தது.

புதன்கிழமை இரவுப் பொழுதில் பண்பாட்டுப் பரிமாற்றத்தை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. எங்கள் கல்லூரி மாணவர்களின் நிகழ்ச்சிகள் அவர்களின் கைதட்டலுக்கும் பெரு வரவேற்பிற்கும் ஆளாயின. பின் தீப்பந்த விளையாட்டு இடம் பெற்றது.

வியாழன் காலை எப்படி மலர்ந்தது எனத் தெரியவில்லை. நாட்கள் மிக வேகமாக ஓடிவிட்டனவோ. எல்லோரும் அவர்களிடம் கையசைத்து விடை பெற்றோம். காலை 8 மணிக்கு எங்கள் மினிபஸ் வடக்கு நோக்கிப் புறப்படத் தொடங்கியது. இரவு கொள்ள மறந்த நித்திரையைப் பஸ்ஸில் அணைத்தவர்களாகப் பலர் மூசிக் கொண்டிருந்தனர். பல இடங்களைத்தாண்டி இரவு 9 மணியளவில் எங்கள் கல்லூரியை வந்தடைந்த போது என் மனதில் ஒரு நிறைவு ஏற்பட்டது. எங்கள் அதிபரும் பெற்றோர்களும் எங்களது வரவிற்காகக் காத்திருந்தனர். வடக்கிலிருந்து தெற்கு நோக்கிய எங்கள் பயணத்தின் மூலம் சிங்கள மக்கள் மனதில் ஒரு மாற்றம் ஏற்பட வேண்டும். எங்கள் பிரச்சினைகளை அறிந்து எங்களுக்கு நீதியான தீர்வுகளைப் பெற்றுத்தர இந்தப் பயணம் வழிசமைக்க வேண்டும் என்ற எண்ணமும் ஏக்கமும் என் நெஞ்சுக்குள் பொதிந்திருக்க வீட்டை நோக்கி என் கால்கள் நடந்தன.

✍ லோ.ரஞ்சனராஜி
தரம் 10A

*உங்களைச் சபிப்பவர்களுக்கு நீங்கள் ஆசி கூறுங்கள்*
*- இயேசு நாதர்*

சிறுகதை

# ஒரு தனி மரத்தின் மரணம்

ராஜாவின் வீட்டில் ஒப்பாரியும் ஓசையும் இன்னும் ஓயந்த பாடில்லை. அங்கும் இங்கும் சிறு சிறு கூட்டங்களாக ஆண்களும் பெண்களும் முணுமுணுத்துக்கொண்டு நிற்பது என் காதுகளில் கேட்கிறது. என் பார்வையில் இதுவரை பார்த்திராத புது முகங் களெல்லாம் தென்படுகின்றன. உடம்பெல்லாம் வியர்வைத் துளிகள் உச்சி வெய்யில் உச்சந்தலையை உருக்கிக் கொண்டு இருக்கிறது. தலையில் வைத்த எண்ணெய் முகத்திலே வழிந்த வண்ணம் இருக்க, வெய்யிலின் அகோரத்தில் இருந்து தப்பித்துக் கொள்ள ராஜாவின் வீட்டருகில் உள்ள வேப்பமர நிழலில் தஞ்சம் புகுந்தேன். வெப்பத்தை உடல் தாங்கிக் கொண்டாலும் உள்ளத்தின் வேதனை தாங்க முடியாத பெரும் சுமையாக இருந்தது.

ராஜா கொழும்பில் கடை ஒன்றில் வேலை செய்பவன். விடுமுறையின் போது அப்பப்போ வந்து தலையைக் காட்டிவிட்டுப் போவான். அப்படி ஒரு நாள் வந்திருந்த போது தான் கொழும்பில் இருந்து வந்த பொலிஸார் அவனைக் கைது செய்து கொண்டு போனார்கள். அன்றுதான் நான் அவனைக் கடைசியாகப் பார்த்தது. ஏன் ராஜாவைக் கைது செய்தனர் என விசாரித்த போதுதான் அவனைப் பற்றிய செய்திகள் வெளியாகின. பாதாள உலக கோஸ்டியினருக்கும் , ராஜாவுக்கும் தொடர்பாம். கொலை வழக்கு ஒன்றில் அவனும் சம்மந்தப் பட்டிருந்தான் எனச் சந்தேகப்பட்டு கைது செய்துள்ளார்களாம். ராஜாவை என்னால் நம்ப முடியவில்லை. கொழும்பில் கடையில் மட்டும் தானே வேலை, என்று சொன்னவன் எப்படி இவர்களுடன் சம்மந்தப்பட்டான்? ஒரு வேளை கோபத்தில் யாராவது பழிவாங்குவதாக பொய்க்குக் காட்டிக் கொடுத்து விட்டார்களா? எனக்குள் கேள்விகள் எழுகின்றன. இளம் வயது, படித்துக் கொண்டிருக்கும் வயது , தாய் தந்தை உயிருடன் இருக்கையிலேயே யாருக்காக இவன் உழைக்க வேண்டும்? அவன் மீது குற்றம் சுமத்த முடியாது. தாய் தந்தையின் கவலையீனம் தான் அவனின் இந்த நிலைக்குக் காரணம் என என் மனம் சொல்லியது. ராஜாவை சிறு வயதிலேயே தாய் விட்டு விட்டு வெளிநாடு புறப்பட்டதால் உழைப்பை மையமாகக் கொண்ட பயணம் இன்னும் முடிந்த பாடில்லை தந்தை பொழுது போக்குத் தனம் உள்ளவர். ஒரு தாய் தந்தையர் தன் பிள்ளைக்குச் செய்ய வேண்டிய கடமையில் இருந்து தவறி விட்டார்கள்.

அவன் சிறு வயதிலே பட்ட கஷ்டங்களை நினைக்கையில் கண்களில் ஈரம் கசிகின்றது. இன்றுடன் மூன்று நாட்களாகி விட்டது. அதோ வான் ஒன்று வந்து ராஜாவின் வீட்டிற்க்கு முன் நிற்கிறது. சனம் மொய்த்து விட்டது. ராஜாவின் உடல் இறக்கப்பட்டு வீட்டுக்குள்ளே கொண்டு செல்லப்படுகிறது. அவன் முகம் காணத் துடித்த நான், சுற்றி வளைத்துக் கூடி நின்ற கூட்டத்தினுள்ளே சிரமப்பட்டு நுழைந்தேன். ராஜாவின் உடல் வெள்ளைப் பொலித்தீனால் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது. “ அய்யோ என் மகனைக் கடைசியாக் ஒரு தடவை பார்க்க விடுங்கோ அய்யா ” அந்தத் தாய் கெஞ்சினாள். தாய் உள்ளம் பரிதவித்தது. “தயவு செய்து கேளுங்கோ, அவன் முகம் பார்க்கக் கூடிய நிலையில் இல்லை. பார்த்தால் சகிக்க முடியாது. அதனால் யாருக்கும் அவிழ்த்துக் காட்ட முடியாது எங்களை மன்னிச்சுக் கொள்ளுங்கோ” . ஊர்ப் பெரியவர் சொன்னார். இன்றுடன் இவன் இறந்து மூன்று நாட்களாகிவிட்டது. அவன் உடல் சிதைந்து விட்டது. மனம் பொறுக்க முடியவில்லை.

ராஜாவின் தாய் வெளிநாட்டில் இருந்து வந்து ஒரு கிழமைதானாகிறது. வந்ததும் வராததுமாக மகன் சிறையில் இருப்பதைக் கேள்விப் பட்டு இடிந்து போனாள். மகனைப் பார்க்கச் சிறைக்குச் செல்ல இருந்த அந்த நேரம் மகனின் மரணச் செய்தி கேட்டுத் துடித்துப் போனாள். ஆசைக்கு ஒரே ஒரு மகன்தான். அவனைப் பறி கொடுத்து விட்டேனே. நான் பாவி. தன் முகத்தில் கைகளை வைத்துக் கதறி அழும் போது என் கண்களும் கலங்கி விட்டன. உழைப்பு என்று பணத்தைக் கண்ட போது தன் பாச மகனை இழந்து துடிக்கின்றாள். இனி அழுது என்ன பயன் ? ஒரு தாய் அருகில் இருந்து புத்தி சொல்லி நல்லது கெட்டதை எடுத்துக் கூறி தாயுடனே அவன் வளர்ந்திருந்தால் இப்படி ஒரு நிலைமை வந்திருக்குமா? வாழ வேண்டிய வயதில் இப்படி மரணப் படுக்கையில் இருக்க நீங்கள் தானே காரணம் எனக்கு கோபம் வருகிறது. அடக்கிக் கொள்கிறேன். இருந்தும் பெற்ற உள்ளம் தவிக்கின்ற போது பார்க்க பரிதாபமாக இருந்தது. பெற்றெடுத்தவளுக்கே மகனின் முகம் காட்ட மறுக்கப்பட்டு விட்டதென்றால் எனக்கு மட்டும் எப்படிக் காட்டுவார்கள்? அதற்கு மேல் உள்ளே நிற்கமுடியாமல் ஏமாற்றத்துடன் வெளியேறினேன்.

அந்தச் சமயம் பார்த்து வந்த ஒரு பெரியவர் ராஜாவின் தந்தையிடம் என்ன நடந்தது ? என விசாரித்தார். அதற்கு அவர் தன் மகனை வழக்குத் தவணைக்காக வவுனியாவுக்கு வெலிக்கடைச் சிறையில் இருந்து ரெயிலில் கொண்டு வந்த போது இடையில் வைத்துத் தப்பிக்க நினைத்துப் பாய்ந்ததால் அவன் மரணமானதாக ஜெயில் காவலாளிகள் சொல்வதாகவும் ஒரு வேளை மர்மமான முறையில் இவன் கொலை செய்யப்பட்டிருக்கலாம். என பொலிசார் சந்தேகப்பட்டதால் அதற்க்கு மரண பரிசோதனை செய்து வர தாமதமாகி விட்டதாகவும் சொன்னார். அப்போது அவருடையு கண்கள் குளமாகி விட்டன. அருகில் இதைக் கேட்டுக் கொண்டும் , அவதானித்துக் கொண்டும் இருந்தேன்.

தன்னைத் தேடி இதுவரை எந்த உறவினரும் வரவில்லையே , தனக்காக எத்தனை சொந்தங்கள் இருந்தும் ஒருவர் கூட வந்து பார்க்கவிலிலையே, யாருக்காக நான் வாழ வேண்டும் என நினைத்து தன் வாழ்வை அவனாக முடித்துக் கொண்டானா? ஜெயிலில் கொடுமைகள் தாங்க முடியாமல் தப்பிப் பிழைக்க நினைத்துப் பாய்ந்த போது கடவுள் அவன் உயிரைப் பறித்து விட்டாரா? அல்லது தங்களைக் காட்டிக் கொடுத்து விடுவானோ என்ற பயத்தில் அவனுடைய கோஸடியினரே அவனைக் கொன்று விட்டார்களா? இதற்காக அதிகாரிகள் அவனின் உயிருக்கு எவ்வளவு விலை பேசி இருப்பார்களோ? பல கேள்விகள் என் மனதைக் குழப்பிக் கொண்டிருந்தன.

அதோ அவன் உடல் மரண ஊர்வலத்துக்குப் புறப்பட்டு விட்டது. உறவுகள் அவனுக்காக அழுது புலம்புகின்றன. ஒப்பாரியும் ஓசையும் இப்போது கொஞ்சம் உரத்துக் கேட்கிறது. உயிருடன் இருந்த போது அவனாக சமைத்துக் கஷ்ரப்பட்டு ருசியில்லாமல் பசி போக்கிக் கொண்டிருந்த காலத்தில் ஒரு வேளைச் சாப்பாடு கொடுக்கத் தேடி வராத உறவுகள் அவனை வழியனுப்பி வைக்க வந்திருக்கின்றன. உறவினர்களின் கண்களில் கண்ணீர் மட்டும் ஓய்ந்த பாடாயில்லை. உறவுகள் என்பது போலி முகங்கள் என்பது எனக்குத் தெட்டத் தெளிவாகி விட்டது. வீட்டுக்கு விடை கொடுத்து

விட்டு அவனுடல் வீதிக்கு வந்து விட்டது . அதற்க்கு முன்னால் என் மனம் எங்கொ போய் விட்டது. என் கால்கள் மட்டும் நடை போட்டுக் கொண்டிருந்தன.

தாய் , தந்தை உறவு அவனைக் கவனிக்கத் தவறிய போது அவன் தனிமைப்பட்டான். நட்பு என்ற நல்ல உறவு இல்லாததால் வழி தவறிப் போனான். அவன் உயிருக்கு உலை வைக்கும் நண்பர்களைத் தெரிவு செய்தான். சேரக் கூடாதவர்களுடன் சேர்ந்து மர்மமான முறையில் அவன் உயிர் போய் விட்டது. ராஜாவின் அடக்கம் முடிந்து விட்டது. மண்ணுக்குள் அவன் மறைந்து விட்டான். அவன் நினைவுகளுடன் நான் வீடு திரும்பிக் கொண்டிருக்கிறேன். நண்பன் என்ற உறவு முறையில் அவன் சிறையில் இருந்த அந்த மூன்று மாத காலப் பகுதியில் ஒருதடவையேனும் நான் சிறைக்குப் போய்ப் பார்க்கவில்லையே என்ற குற்ற உணர்வு என் அடி மனதில் இன்னமும் வருத்திக் கொண்டிருக்கிறது.

(யாவும் கற்பனை)

சோபனா- இராசதுரை
தரம் 11C

# " தீதும் நன்றும் பிறர்தர வாரா "

உலகமானது , நன்மை தீமை என்ற இரண்டினதும் சேர்க்கையாகவே அமைந் துள்ளது. வாழ்வு முழுவதும் தீமைகளே ஒன்றன் பின் ஒன்றாக தோன்றி ஒருவரை வருத்துவதையோ , வாழ்நாள் முழுவதும் நன்மைகளே அடுத்தடுத்து வந்து ஒருவருக்கு இன்பம் தருவதையோ , நாம் கண்டதில்லை. ஒளியின் பின் இருள் , இருளின் பின் ஒளி என்று மாறி மாறி வருவது போல துன்பமும் இன்பமும் , மாறி மாறி வந்தவண்ணமே உள்ளன. தீமையும் நன்மையும் அத்தகையனவே. ஆனால் மனிதர்கள் இவ்வுண்மையை உணராது தீமைகள் வருகையிலே எல்லை கடந்து வருந்துதலும் அத்தீமைகளுக்கு காரணம் தாம் அல்லப் பிறரே என்று பிறரைத் தூற்றுவதும் வழக்கமாய் உள்ளன. இதற்கு மாறாக நன்மைகள் உண்டாகும் பொழுது அந்நன்மைகளுக்கு தாமே முக்கிய முதன்மை காரணம் என்று பெருமிதம் அடைந்து அளவு கடந்து மகிழ்வதும் மனித இயற்கையாய் உள்ளது. இவை இரண்டும் அறியாமையாலேயே உண்டாவன. இதனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்து விட்ட கணியன் பூங்குன்றனார் என்ற தமிழ்ப் புலவர் "யாதும் ஊரே யாவரும் கேளிர் " எனத் தொடங்கும் பாடலைத் தந்தார் அப் பாடலில் அமைந்துள்ள ஓர் அடியே

" தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்பதாகும் .

காரணமின்றிக் காரியமில்லை. எம்மைத் தீமை வந்து அடுத்தது என்றால் அறியாமையோ , கவனயீனமோ அன்றிப் பிற அல்ல . உதாரணமாக பரீட்சை ஒன்றிற்கு மாணவன் ஒருவன் தோற்றுகின்றான் என்று வைத்துக் கொள்வோம் . பரீட்சைக்கு ஆயத்தம் செய்ய வேண்டிய காலம் எல்லாம் கவவயீனமாகவும் , அலட்சியமாகவும் இருந்து விட்டு பரீட்சை அண்மிக்கும் வேளையில் தீவிரமாக அவன்

படிக்க முற்படுகின்றான் ஆனால் அவனது சின்ன மூளைக்குள் பரீட்சைக்குரிய பெரிய விடயங்களை திணிக்க முடியாது போய் விடுகின்றது . பரீட்சைக்கு செல்கின்றான் பரீட்சையிலே படு தோல்வியும் அடைகின்றான் . ஆனால் அவன் தன் குற்றத்தையோ அதனால் விளைந்த தீமையையோ சிந்திக்க முற்படாது வினாத்தாள் தயாரித்தவர் , கற்பித்த ஆசிரியர் , திருத்திய பரீட்சகர் எல்லோரையும் தன் தோல்வியாகிய தீமைக்கு காரணமாக குற்றம் சாட்ட முற்படுகின்றான் . சில சமயங்களில் மேலும் ஒரு படி சென்று கடவுளையும் கண் கெட்டவர் என்று திட்டவும் முற்படுதல் கூடும் . ஆடத் தெரியாதவன் நிலம் கூடாது என்பது போலவும் , எய்தவன் தானாய் இருந்து , அம்பினை நோவது போலவும் இவன் செயல் விளங்குகின்றதன்றோ ?

மனித இயல்பு தீமைக்கு பிறரைக் காரணராக்கி , நன்மைக்கு தம்மையே காரணராக்குவதே . வெகு சிலரே தமது நன்மைகளுக்கெல்லாம் பிறரைக் காரணராக்கிக் கழிக்கின்றனர். நன்றி மறவாமை என்ற நற் பண்பு இவர்களில் மிகுதியாகவும் விளங்குகின்றது என நாம் இவர்களைப்பாராட்டலாம். ஆனால் இவர்களின் செயலும் தன்னம்பிக்கைக் குறைவாலேயே ஏற்படுகின்றது என்பதையும் நாம் சிந்தித்து பார்த்தல் வேண்டும். “அழுது அழுதும் அவளே பிள்ளை பெறல் வேண்டும்” என்ற பழமொழிக்கு ஏற்ப நன்மையோ தீமையோ அனுபவிப்பவர் நாமாயிருக்கப் , பிறரை அளவு கடந்து பாராட்டுவதோ தூற்றுவதோ தவறாகும்.

“தீதும் நன்றும் பிறர்தர வாரா” என்பது உலகியல் வாழ்விற்கு மட்டும் உரிய அறிவுரையன்று. ஆன்மீக வாழ்விற்கும் இது பொருந்துவதாகும். ஆழமாக நோக்கினால் இவ்வுரை ஆன்மீக வாழ்விற்கே சிறப்பாக உரியது என்று சொல்வதில் தவறு இல்லை. “தாம் தாம் முன்செய்த வினை தாமே அனுபவிப்பர்” என்ற முதுமொழி இந்த முடிவினை அரண் செய்வதாகும். நாம் எவரும் எமது விருப்பின் படி வந்து இந்த உலகத்திலே பிறப்பதில்லை. பிறவிகள் தோறும் நாம் செய்யும் வினைகளே எம்மை அவ்வினைகளுக்கேற்ப பிறக்க வைக்கின்றன. எனவே முற்பிறப்பில் நாம் செய்த தீவினை வந்து தீமையாய் விளைந்து எம்மை வருத்தினால் நாம் ஏன் பிறரை அதற்காக நோதல் வேண்டும்? அதே போன்று முற்பிறப்பின் நல்வினைகள் வந்து நன்மைகளை விளைவித்தால் பிறர் அந்த நன்மைகளுக்கு துணைக்காரணமாய் இருக்கலாமேயன்றி முதற்காரணராயோ, நிமித்த காரணராயோ இருத்தல் இயலாது. இவ்வாறு உண்மையை அறிவுடன் ஆழ்ந்து நோக்கினால் இடரும் தளர்வும், இன்பமும் மகிழ்வும் எல்லாம் எம்முடைய செயல்களின் பயனேயன்றி வேறல்ல என்று நாம் உணர்ந்து கொள்ளலாம். இவ்வுணர்வே சிறந்த நல்லறிவாகும். உலகில் எவரையும் அளவு கடந்து வெறுக்கவோ, எல்லையற்று நேசிக்கவோ வேண்டியதில்லை. எவரையும் சமமாக நோக்கும் சமத்துவ மனப்பான்மை ஏற்பட, “தீதும் நன்றும் பிறர்தர வாரா” என்ற ஆழ்ந்த அறிவின் வெளிப்பாடான கூற்றினை நாம் நன்குணர்ந்து உறுதியுடன் கடைப்பிடிப்போமாக.

கமலச்செல்வி விசுவலிங்கம்
தரம் 12 கலை (2005) $A_1$

*மனிதரோடு நான் பழகப்பழக , மிருகங்களிடம் என்பிரியம் வளர்கிறது*
*– ஃபிரெடெரிக் மன்னர்*

## ஒழுக்கமே எங்கள் உயிர்

ஒழுக்கமே எங்கள் உயிராகும் - அது
ஒப்பிலா வாழ்க்கைப் பயிராகும்
வழுக்கினால் வாழ்க்கை விசமாகும்
வழிமாறினால் எல்லாம் திசைமாறும்!

விழுப்பம் தரும் ஒழுக்கமே
வள்ளுவன் வகுத்த நிமித்தமே
பழக்கம் கொள்வது பண்பாகும்
தவறின் வாழ்க்கை மண்ணாகும்!

உயிரினும் மேலாம் ஒழுக்கத்தை
உறுதியாய்க் கொள்வது பண்பாகும்
வெயில் போல் இழுக்கம் வெறுத்து
வேண்டிய ஒழுக்கம் பேணிடுவோம்!

எல்லை இல்லா உலகத்திலே
ஏற்ற ஒழுக்கம் போற்றிடுவோம்
கள்ளமற்று ஒழுக்கமதை
கண்ணாய் நாளும் பேணிடுவோம்!

அணியும் ஆடையின் மேலாக
உண்ணும் உணவின் முதலாக
அணியாய் எம்மை அலங்கரிக்கும்
அருமைப் பொருளது ஒழுக்கமன்றோ!

சிந்தை சொல் செயல்களிலே
சித்தம் சீர்மை பெறுவதற்கு
நித்தம் ஒழுக்கம் பேணிடுவோம்
நிறைவாய் என்னும் வாழ்ந்திடுவோம்!

சு.பிருந்தா
தரம் 12 கலை(2005)$A_2$

## கற்றுணர்

அருமை மித்திரனே !
அருமையிலும் அருமை கல்வி
இழந்து வந்தோம் சொந்த மண்ணை
சுமந்து வந்தோம் பல துயரை
தொடரும் வாழ்வில் தாரகை போல் மிளிர
இருபத்தோராம் நூற்றாண்டின் இன்முகப் பூரிப்பில்
இனிதாக வீறு நடைபோடும் இனிய உலகமதில்
உனது கீர்த்தியை நிலை நாட்டுவதற்கு
இனிய நண்பனே கற்க வேண்டியதைக் கற்றுணர்!

அன்பான சகோதரனே!
விஞ்ஞான உலகமதில்
விந்தைகள் பல நிகழ்கின்றன.
நிலவில் கூட தனது கால்களை
நிலையாக ஊன்றியுள்ளான் மனிதன்
நீ மட்டும் பதினைந்தாம் நூற்றாண்டில் நிற்பது
வேதனையிலும் வேதனை சகோதரனே!

சந்திரன் தேயலாம்
சந்தனம் தேயலாம் , ஆனால்,
நீ கற்ற கல்வி குறையாது என்பதனை
நீ அறிவாயா சகோதரனே!
உனது உரிமையை நிலைநிறுத்த
கற்கவேண்டியதைக் கற்றுணர் சகோதரனே!

அன்பு மாணவனே!
நல்லார் உறவதனை நாடிடு.
பொல்லார் உறவதனை மூடிடு.
முதியோர் தம்மை மதித்திடு.
முகம் மலர்ந்து உதவிடு.
கடமையிலுன்னைச் சேர்த்திடு.
கல்வியதனைக் கசடறக் கற்றுணர்.

சு.பிரியா
தரம் 12 கலை (2005)$A_2$

# தேசத்தின் செல்வங்கள் தெருவோரத்தில் ........

" இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் எதிர்கால உலகின் தலைவர்கள் , எதிர்காலச் சிற்பிகள் , தூண்கள்" எனச் சிறுவர்களைப் பல்வேறு பெயரினால் சிறப்பிப்பது நம் செயல். ஆனால் இது வெறும் வாய் வார்த்தையாகவே உள்ளது. சிறுவர்களை எதிர்கால உலகின் தலைவர்கள் என ஏற்றுக்கொள்ள எம்மனம் இடம் தருவதில்லை.

இன்றைய சிறுவர்கள் எதிர்கால உலகை கட்டியாளப் போகின்றனர். இதனால் நம் தேசத்தில் எதிர்காலச் சிறுவர் சந்ததியின் நிலை என்னவென்று தெரியவில்லை. ஏனெனில் வார்த்தையில் வடிக்க முடியாத அளவிற்குச் சிறுவர்கள் கேவலப்படுத்தப் படுகின்றார்கள். சிறுவர் இல்லங்கள் என்ற போர்வையில் சிறுவர்கள் மீது மேற்கொள்ளப்படும் பாலியல் துஸ்பிரயோகங்கள் (Sexual abuse) மேற்கொள்ளல் , சிறுவர்களை வேலைக்கு அமர்த்தி உடல் உபாதைகளுக்கு ஆளாக்குதல் , எனச் சிறுவர்கள் கேவலப்படுத்தப் படுகின்றனர். துன்புறுத்தப் படுகின்றார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாகச் சிறுவர்கள் பிச்சையெடுக்கும் நிலையும் இன்று காணப்படுகின்றது. எதிர்காலத் தலைவர்கள் இன்று பிச்சைப் பாத்திரங்களுடன் வீதி வீதியாக அலைகின்றனர். உண்ண உணவின்றி , உடுக்க உடையின்றி, படுக்க இடமின்றி, உதவ உறவின்றிப் பரிதவித்து அலையும் இந்த நிலை நமது தேசத்தைப் பீடித்துக் கொண்ட ஒரு வைரஸ் என்றே கூற வேண்டும்.

படித்துப், பல பட்டங்கள் பெற்று , பண்புடன் நடந்து, இந்தப் பாருக்கு வழ்காட்டவேண்டிய தலைவர்கள், பாழாகிப் போகும் இந்த நிலை நமது சமுதாயத்தினை சிந்திக்க வைத்துள்ளது. நாளை மரமாகிப் போக வேண்டிய இந்தச் செடிகள் இன்று இவ்வாறு அலைந்து திரியும் காரணம் தான் என்ன?

நமது தேசத்தினையே சிதைத்து விட்ட இந்தக் கொடிய யுத்தம் தான் இதற்கு முழுக்காரணம். கவலையின்றிச் சென்ற இந்தச் சிறுவர்களின் வாழ்வில் யுத்த அச்சங்கள் பெரும் மாறுதல்களைச் செய்தன. குடும்பத் தலைவர் என்ற அத்திவாரத்தினை கொடியவர்களின் ஆயுதங்கள் பலியெடுத்ததனால் இவர்களின் குடும்பங்கள் வேரிழந்த மரங்களாகி விட்டன. ஏழு எட்டு குடும்ப அங்கத்தவர்களைக் கொண்ட இந்தக் குடும்பங்கள் உழைக்க வல்லமை மிகுந்த குடும்பத் தலைவரை இழந்தன. இதனால் குடும்ப வண்டியை இழுத்துச் செல்ல வேண்டிய கடப்பாடு 15 வயதிற்குற்பட்ட பிள்ளைகளின் கைகளுக்குச் சென்றது. வாழ்க்கையினை நடாத்துவதற்காக தொழில் தேடிச் சென்ற இவர்களுக்கு எவரும் தொழில்களை வழங்கவில்லை. அதனால் இவர்கள் எடுத்துக்கொண்ட தொழில்களில் ஒன்று பிச்சையெடுத்தல் ஆகும்.

கடந்த 30 வருட கால யுத்தத்தினால் நன்கு பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணச் சிறுவர்களே இந்நிலைக்கு கூடுதலாக ஆட்பட்டு உள்ளனர். யாழ்ப்பாணம் , கிளிநொச்சி , முல்லைத்தீவு , வவுனியா , மன்னார் , மட்டக்களப்பு , திருகோணமலை போன்ற இடங்களில் இந்நிலை ஏற்பட்டுள்ளது. பெரும்பாலும் நகரப்பகுதிகளிலேயே இந்த நிலையை அவதானிக்கலாம்.

காலை தொடக்கம் மாலை வரை பிச்சையெடுத்த உணவுகளைக் கொண்டோ அல்லது பணத்தைக் கொண்டோ இவர்களின் வாழ்க்கை நகர்கின்றது. வீடு வீடாகவும் , கடைகள்தோறும் படியேறும் இவர்கள் தம் குடும்பத்தவரின் வயிற்றுப் பசியை முழுமையாக நிறைவேற்ற முடியாது அல்லற் படுகின்றனர்.

இதில் கவனிக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில் அநாதைகளாக்கப்பட்ட சிறுவர்கள் சிலர் தாம் பிச்சையெடுத்த பணத்தைக் கொண்டு பல தீய நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர் என்பதேயாகும். எல்லாச் சிறுவர்களும் இந்நிலையில் இல்லை எனினும் ஒருசிலர் இருக்கவே செய்கின்றனர்.

வயிற்றுப் பிழைப்புக்காகப் பிச்சையெடுக்கும் இவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் எண்ணற்றவை. அடி , உதை என்பவற்றுடன் அங்கீகரிக்கப்பட முடியாத வாய்ப் பிரயோகங்களுக்கும் உட்படுகின்றனர். இவ்வாறு பிச்சையெடுத்து உழலும் பிஞ்சுப் பாலகர்கள் எமது சமுதாயத்தைச் சேர்ந்தவர்களே என எண்ணும் போது தான் எங்கள் மனதில் வலி ஏற்படுகிறது.

கட்டுப்பாடு ஏதுமின்றி, கண்டபடி அலையும் இவர்கள் பல சமூக விரோதச் செயல்களையும் செய்கின்றனர். குறிப்பாகத் திருடுதல் என்ற ஒரு கேவலமான காரியத்தைச் செய்யத் தூண்டப்பட்டுள்ளனர். ஆரம்பத்தில் சிறுசிறு களவுகளைச் செய்யும் இவர்கள் நாளடைவில் பெரும் திருட்டுக்களைச் செய்ய முயல்கின்றனர்.

உலகமே தெரிந்திடாத இவர்கள் இந்நிலைக்குத் தள்ளப்படக் காரணம் யார் ? இவர்கள் செய்த குற்றம் என்ன ? இந்த நேரத்தில் பிறந்து வளரத் தலைப்படுவது தான் இவர்கள் செய்த குற்றமா ? இல்லை. இழந்த தேசத்தின்தலைவர்கள் என்று கூறிக் கொண்ட ஒரு சில சுயநலவாதிகளே காரணம். இனவாதப் போக்குக் கொண்ட இவர்களின் ஈவிரக்கமற்ற செயல்களின் அறுவடையே இது என எண்ணத் தோன்றுகிறது.

பால்மணம் மாறாத இந்தப் பிஞ்சுகளின் துயரைத் துடைப்பதற்கு உறுதி செய்வோம். தெருவோரத்தில் நிற்கும் எம் தேசத்தின் செல்வங்களுக்குக் கை கொடுப்போம்.

சி.குகாகரன்
கலை 2004 $A_1$

# ஈழத்து இசை வரலாறும் வளர்ச்சியும்

கர்நாடக இசை வரலாற்றை நாம் வேதகாலம் தொட்டு இன்று வரை காலகட்டங்களாக வகுத்துக் கொள்ளலாம். இந்த அடிப்படையில்

புராதன காலம் :- வேதகாலம் முதல் - மதங்கர் காலம் வரை .
மத்திய காலம்:- மதங்கர் காலம் முதல் - புரந்தரதாஸர் காலம் வரை.
நவீன காலம்:- புரந்தரதாஸர் காலம் முதல்- இன்று வரை.

தமிழகத்தில் இசை எவ்வாறு வளர்ச்சி பெற்றதோ அவ்வாறே அதன் தாக்கமும் செல்வாக்கும் ஈழத்து இசை வளர்ச்சியில் இருந்திருக்கலாம் என எண்ண முடிகிறது. எனினும் ஈழத்தில் சிறந்ததொரு இசைப்பாரம்பரியம் இருந்தமைக்கானசான்று 18ம் நூற்றாண்டு தொட்டே காணக்கூடியதாக இருக்கின்றது.

ஈழத்து இசையில் பல இசை வடிவங்கள் உள்ளன.

1. கர்நாடக இசை
2. பண்ணிசை
3. நாட்டார் இசை
4. மெல்லிசை
5. பொப்பிசை
6. எழுச்சிப் பாடல்கள்

இந்தியாவில் பல்லவர் ஆட்சிக் காலத்திலே திருஞான சம்பந்தரும், சுந்தரரும் இலங்கையில் உள்ள திருத்தலங்கள் மீது தேவாரப் பதிகங்களைப் பாடியுள்ளனர். மேலும் சோழர் ஆட்சியின் போது இந்தியாவில் எவ்வாறு ஆலயங்களில் தேவாரங்கள் ஒதப்பட்டனவோ அவ்வாறே இலங்கையிலும் திருமுறைகள் ஒதப்பட்டு இருத்தல் வேண்டும் எனக் கூறப்படுகிறது.

ஆங்கிலேயரின் வருகையின் முன் தென்னிந்தியாவின் செல்வாக்கினால் தமிழர் மத்தியில் செழித்து வளர்ந்த இக் கூத்துமரபு கிராமிய மக்களிடம் சென்றமையினால் தமது பண்டைய பண்பினின்றும் மாறுதலுக்கு உட்பட்டது. இக்கூட்டத்தைச் சேர்ந்த இசை மரபு கர்நாடக இசை தழுவிய இராகங்களாகவே காணப்பட்டது.

18ம் நூற்றாண்டின் இறுதியில் வியாபாரத்தின் நிமித்தம் இலங்கைக்கு வந்த செட்டி வேளாளரால் யாழ்ப்பாணத்தில் கோயில்கள் கட்டப்பட்டன. கோயில்களில் மங்கள வாத்தியங்களை இசைப்பதற்காக இசை வேளாளர்கள் இந்தியாவினின்றும் வரவழைக்கப்பட்டு மாவிட்டபுரம் , அளவெட்டி, இணுவில் , கரவெட்டி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் குடியமர்த்தப்பட்டனர். இவர்களே இலங்கையின் கர்நாடக இசை வளர்ச்சிக்கு வித்திட்டவர்களாவர். இவர்களின் வழித்தோன்றல்களினாலே ஈழத்தில் கர்நாடகஇசை வளர்ச்சியுற்றது எனக் கூறலாம். இக் காலத்தில் கோயில்களில் சதிர்க்கச்சேரி செய்வதற்கும் இந்தியாவிலிருந்தும் இசைக் கலைஞர்கள் வரவழைக்கப்பட்டனர். இவ்வாறு வந்தவர்களினாலே இசை வளர்க்கப்பட்டது.

19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலே மட்டக்களப்பைச் சேர்ந்த விபுலானந்த அடிகள் இந்தியாவில் பேராசிரியராக விளங்கிய போது அங்கு கடமையாற்றிய இசைப் பேரறிஞராகிய பொன்னையாபிள்ளை அவர்களோடு சேர்ந்து இசைத்தமிழினை ஆராய்ந்ததன் விளைவாக யாழ் நூல் எனும் ஆராட்சி நூலை வெளியிட்டார். இந்நூல் இலங்கைத் தமிழருக்கே பெருமை தேடித் தருகின்றது.

மேலும் நோக்கும் போது 1920ம் ஆண்டளவில் நாடகங்களேடு சேர்ந்த இசை மரபு வளரலாயிற்று . இந்தியாவில் இருந்து பல கலைஞர்கள் இலங்கைக்கு வந்து நாடகங்களை நடித்து தமது சொந்தக் குரலிலேயே பாடினார்கள். அவர்களுள் K.P .சுந்தராம்பாள், S.J.கிட்டப்பா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் இதே நேரத்தில் இலங்கை மக்களும் இசை நாடகங்களில் ஈடுபாடு கொண்டவர்களாக விளங்கினர். சாதாரண மக்களெல்லாம் இப் பாடல்களை மனப்பாடம் செய்தனர். இதனை எடுத்து நோக்குகின்ற போது புத்துவாட்டி சோமசுந்தரம், புத்துவாட்டி நாகலிங்கம், புத்துவாட்டி இரத்தினம், இணுவில் ஏரம்பு, கரவெட்டி சுந்தரம் , கொக்குவில் தங்கராசா போன்றோர் ஈழத்தில் நடித்த நாடகக்கலைஞர்களாகும். இவர்களைத் தொடர்ந்து இன்னும் பல கலைஞர்கள் உருவாகினர்.

குறிப்பிட்ட சமூகத்தினரிடமே காணப்பட்ட இசையானது நடுத்தர மக்களிடமும் பரவத் தொடங்கிற்று. இந்திய இசைக்கலைஞர்கள் பலர் இலங்கைக்கு வந்து பல இசை நிகழ்வுகளை நடாத்தியதன் விளைவாக மத்தியதர வகுப்பினரிடையேயும் இசை பற்றிய அறிவு வளரத்தொடங்கியது.

1931ம் ஆண்டில் திரு. M.S.பரம், திரு. குமாரசுவாமி போன்றோரின் முயற்சியினால் வடஇலங்கைச் சங்கீதசபை ஸ்தாபிக்கப்பட்டது. இச்சபையானது இலங்கையின் இசைவளர்ச்சியில் ஓர் திருப்புமுனையினை ஏற்படுத்தியது எனக் கூறலாம். இது வரை காலமும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரே இசையினைப் பயின்றனர். தற்போது இந்நிலை மாறி எல்லோரும் இசையினைப் பயிலத் தொடங்கினர். நிறுவனங்கள் ரீதியாக இசை பயிலும் முறையும் ஏற்பட்டது.

வடஇலங்கைச் சபையானது படிப்படியாக வளர்ச்சியடைந்து வாய்ப்பாட்டு, வயலின், புல்லாங்குழல், வீணை, மிருதங்கம், நடனம், பண்ணிசை எனும் துறைகளில் தரம் 1-6 வரை பரீட்சைகளைத் திறம்பட நடாத்தப்படுகின்றது. இப் பரீட்சையானது நாடளாவிய ரீதியில் பல மாவட்டங்களில் நடாதின்றது. தரம் 6ல் சித்தியடைந்தவர்களுக்கு ஆற்றுகை நிகழ்ச்சி (performance) ஒன்றினை நடாத்தி “கலாவித்தகர்” என்னும் பட்டத்தையும் வழங்குகின்றனர்.

1950ம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத் தாபனம் ஸ்தாபிக்கப்பட்டபின்னர் தமிழ்ச் சேவைப் பிரிவினரால் இசை நிகழச்சிகள் ஒலிபரப்புச் செய்யப்பட்டன. வாத்திய இசைக் குழுவினரால் தயாரிக்கப்பட்ட பல்லிய நிகழ்ச்சி பிரபல்யம் வாய்ந்ததாகும் . இசை பயின்ற வித்துவான்களுக்கு இசைத் தேர்வு ஒன்றினை நடாத்தி பின் கச்சேரி செய்யும் வாய்ப்பினையும் வழங்கினர். இதனால் தமது திறமையினை வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் யாவருக்கும் அளிக்கப்பட்டது.

20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இராமநாதன் கல்லூரியின் ஒரு பகுதியாக இராமநாதன் அக்கடமி ஆரம்பிக்கப்பட்டது. இங்கே ஆரம்பத்தில் இந்தியாவில் இருந்து வந்த விற்பன்னர்களினால் போதிக்கப்பட்டு, பரீட்சையினையும் நடாத்தினர். இப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு சங்கீத இரத்தினம் எனும் பட்டம் வழங்கப்பட்டது. இக் காலத்தில கல்யாணகிருஷ்ணபாகவதர், மஹாராஜபுரம் , சந்தானம் போன்றோர்

பணியாற்றினர். 1974ம் ஆண்டு இவ் அக்கடமி யாழ் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டது. இங்கு நான்கு வருடங்கள் கல்வி பயிலவேண்டும் இப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு இசைக் கலைமணி என்னும் பட்டம் வழங்கப்பட்டது. இலங்கையிலுள்ள பாடசாலைகளில கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுள் 80 வீதமானோர் இங்கே கற்றவர்களாவர். 1992ம் ஆண்டு பட்டதாரி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு இசைமாணி (B Music) பட்டம் வழங்கப்பட்டது. தற்காலத்திலும் இது சிறப்புடன் நடாத்தப்பட்டு பெரும் தொகையானோர் பட்டத்தையும் பெற்றுக்கொள்கின்றனர்.

1972ம் ஆண்டு பாடசாலைக் கல்வியில் கட்டாயபாடமாக அழகியற்கலை பாடவிதானத்தில் சேர்க்கப்பட்டது. இலங்கையில் பாடசாலைப் பாடவிதானத்தில் அழகியல் ஒரு கட்டாயபாடமாகச் சேர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஈழத்து இசை வளர்ச்சியில் இசை மன்றங்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. அவற்றுள் யாழ் இளங்கலைஞர் மன்றம் , அளவெட்டி இசைக்கலாமன்றம், அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம் , திருமறைக்கலாமன்றம் கொழும்பு , சைவமங்கையர் கழகம், கொழும்பு சங்கீதசபை , தென்மராட்சி இசை நடனக் கலைமன்றம், வீபுலானந்தர் இசை நடனக்கல்லூரி போன்றன இலங்கையில் இசை வளர்ச்சிக்கு பெரிதும் துணைபுரிகினறனர்.

மேலும் தேசிய இளைஞர்மன்றத்தின் கீழ் இயங்கும் பெல்வூட் இசை நடனக் கல்லூரியிலும் மாணவர்கள் இசை பயில்கின்றனர். அத்துடன் இம்மன்றம் நாடளாவிய ரீதியில் பல போட்டிகளை நடாத்துகின்றது. தற்போது கல்வியியற்கல்லூரிகளிலும் கர்நாடக இசை பிரதான பாடமாக கற்பிக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது .

இலங்கையில் பிறந்து இந்தியா சென்று இசைத்துறையில் பயிற்சியினைப் பெற்றவர்கள் பலர் உள்ளனர். அவர்களுள் இசைப்புலவர் N.சண்முகரத்தினம், புத்துவாட்டி S.N.சோமசுந்தரம் , திருகோணமலையைச் சேர்ந்த செல்வி. ராஜேஸ்வரி. பாலசுப்பிரமணியம் போன்றோர் குறிப்படத்தக்கவர்கள்.

இலங்கையில் பல இசை நூல்கள் வெளியிட்டுள்ளனர். S.N .நடராஜ ஐயர் இசை அகராதி ஒன்றினை வெளியிட்டுள்ளார். மேலும் இலங்கையில் இசைத்துறையில் பலர் முதுதத்துவமாணி (Mphil), முதுமாணி (MA) போன்ற பட்டங்களையும் பெற்றுள்ளனர்.

இணுவிலைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ விரமணிஐயர் எண்ணற்ற பாடல்களை இயற்றியும் இசையமைத்தும் வருகின்றார். இவரது பாடல்கள் இந்திய இசைகலைஞர்களாலும் இசைக்கச்சேரியின் போதுபாடப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்

இலங்கையில் உள்ள நாட்டார் இசையில் பல வித நாட்டார் பாடல்களும் வடமோடி, தென்மோடி, காமன் கூத்து போன்ற கூத்துப்பாடல்களும் இடம் பெறுகின்றன. பேராசிரியர். சு. வித்தியானந்தனின் முயற்சியினால் பல நாட்டார் பாடல்கள் நூலுருவாக்கப்பட்டுள்ளன.

20ம் நூற்றாண்டில் இலங்கைக்கே சிறப்பான மெல்லிசை வளர்சியுற்றது. இதற்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமே பெரும் பங்காற்றியுள்ளது. மக்களின்

மனதைக்கவரக்கூடிய இப்பாடல்களில் ஆரம்பகால வளர்சிக்கு முத்துச்சாமி. குணசிலநாதன். முத்தழகு , கலாவதி போன்றோர் பங்காற்றினர். சிங்களவரது பைலா இசையினைத் தழுவிய பொப்பிசை 20ம் நூற்றாண்டில் பாடப்பட்டது. இலங்கை பொப்பிசை இந்தியாவில் பிரபல்யம் பெற்றது எனக்கூறினால் மிகையாகா.

1980 இல் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் காரணமாக மக்களிடையே விழிப்புணர்வை எற்படுத்து.வதன் நோக்கமாக எழுச்சிப் பாடல்கள் வெளியிடப்பட்டன .

இலங்கையின் பல பாகங்களிலும் கர்நாடக இசைக்கச்சேரிகள் இடம் பெற்று வருவதுடன் இந்தியாவில் இருந்தும் இசைக் கலைஞர்கள் இங்கு வந்து இசை அரங்குகளை நிகழ்த்துகின்றனர். இன்று சிங்கள மக்களிடையேயும் கர்நாடக இசை பிரபல்யம் பெற்று களனி பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட நுண்கலைக்கல்லூரி, கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட ஹொரண ஸ்ரீ பாலி கல்லூரிகளில் ஆற்றுகைக் கலை பற்றி பயிலும் மாணவர்களும் கர்நாடக இசையினை கற்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு கர்நாடக இசை சிறப்புற்று வளர்ந்தது வளர்ந்தும் வரும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பு.சுகன்யா
தரம் 13 (2003) $A_1$

## தமிழின் இனிமை

*கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்*
*கழையிடை ஏறிய சாறும்*
*பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்*
*பாகிடை ஏறிய சுவையும்*
*நனிபசு பொழியும் பாலும் - தென்னை*
*நல்கிய குளிரிள நீரும்*
*இனியன என்பேன் எனினும் - தமிழை*
*என்னுயிர் என்பேன் கண்டீர்*

– பாரதிதாசன்

## MY SELF

I'm a boy
My name is Manujan
I'm in grade 3B
My sister's name is Janaka
My school's name is J/Sri Somaskanda College
My friend's name is Mohan
I'm eight years old
I want tobe a doctor one day

**N.MANUJAN**
Grade: 3B

## MY PET

My pet is a parrot
My pet's name is Rani
It's colour is green
It is a beautiful bird
My pet speaks very well

**S.NIVETHA**
Grade : 3B

## MY BEST FRIEND

I have a friend. Her name is Geevana. She is nine years old. She is studying at Sri Somaskanda college .She is in grade four. She lives in Jaffna. She has a brother and a sister. Geevana can swim.

She likes to eat sweets and chocolates. She has a pet. It is a dog. She can sing well. She likes to drink passion cordial and milk coffee. Her hobbies are reading story books and collecting picture post cards and listening the radio.

In class we sit next to each other. Her favourite subject is mathematics. We never quarrel. We like each other. Geevana is a very helpful girl. She is an honest girl. She is a good story teller. I like Geevana. She is a good girl.

*" Friendship never fails"*

**V.Sarani.**
Grade 4A

## MY VILLAGE

The name of my village is Puttur. It is 15 km away from Jaffna town. There are many paddy fields and gardens around my village. There are about five hundred families live in my village. Almost all the people in my village are Tamils. Most of them are farmers. We have a big temple in our village. Most of the villagers are Hindus. Farmers grow vegetables and sell them in the village market. My village is famous for plantains. In our village we live very happily with our neighbours. We have co-operative shop, a big school, a hospital, a public library and a post office. We read story books, news papers, and magazines in the village library.

**N.Nitharshan.**
Grade-6A

## MY PETTY

Petty is a pretty cat
No doubt, she's my pet
Whenever she runs behind a rat
She, catches it, really I bet

She's black and white
Her eyes are bright
Always active at night
Any insects don't miss her sight

She jumps up a wall
Then climbs a tree, tall
But never and never has a fall

When runs with a ball
Or plays with a doll
She never minds me at all.

**A.Veenujah**
Grade – 7A

## ADVANTAGES OF TRAVELLING

There are many advantages gained by traveling. Now a days a various rapid means of travelling for available for us to travel from place to place .People travel for various reasons and they choose different modes of transport according to their convenience.

Mostly people get pleasure by travelling to various places. They attain mental peace when they see now surrounding . The tensions which people get from their occupations are eased when they travel and see the sceneries of different places.

It is said travelling wides a person's knowledgo in many respects. He or she can pesonally see the different places and feel the climate of the places. The life styles and the culture of the people who live in those places can all be studied in detail when we travel. Some people travel periodically with the intention of maintaining , good health . They like to be away from the polluted cities at least for short periods. Certain amount of exercise is given to our bodies when we travel by bicycle or foot .

Development of travelling industry can assist the enconomy of a country greatly. Now employment opportunities are created and large amount of foreign money is earned. Further the knowledge and new technology from out side are gained.

Lastly greater understanding between people of different countries will be achieved . Misunder standing between races will be reduced.

**M.Lilani.**
Grade 8A

# "SRI PADA" RELIGIOUS BUT ADVENTUROUS

Sri Pada mountain range holds nature's secrets with its many varieties of flora and fauna. Spreading around a vast expanse of area around the sacred foot print of the Buddha.

Though this is one of the main religious places for Buddhists. It is indeed a major destination for tourists as well.

There is wonder and mystery surrounded in this rain forest which still remains a sanctuary for many endemic plants, creepers, and insects. The Sri Pada season has begun and many thousands of visitors will climb the mountain during this four month period.

During the season when pilgrims make their way along the rugged path to the summit of Sri Pada, they brave the chilly and hostile weather to watch the rising sun.

There is a mystery around the mountain peak .The noise of the wind. Sweeping across the vast forest cover speaks of the mysterious nature of the entire surrounding area.

Groups of pilgrims comprising men, women and children raise cries of "sadha" in a spirit of religious favor. There is mutual trust and feeling around. The belief in worshipping the sacred foot print of the Buddha and the guardian deity Susana who looks after those who make their annual pilgrimage. The safety of the pilgrims is assured with their silent watch.

After reaching the summit one can see the panoramic view of the rising sun when it appears on the eastern horizon. The sky slowly gets lit up. There is a thin line of light one can observe patches of white and black displaying cloudy nature in the sky.

Finally, the sun throws its radiance in a flash and makes the sky lit with its light. The noise of the bells , the smoke coming from the burning incense and oil lamps drift in the air. White cloud pilgrims move towards the foot print.

They make their offerings before they depart. The homage they pay in silence for protection and well – being for their golden future.

**N.Jamuna**
Grade 9 A

# DIAMONDS

Selling, a salesman will tell you, takes skill. But does that make buying any less challenging? Any buyer needs knowledge, if not skill, to ensure a successful transaction.

Diamond buying more than the most other commodities, requires at least a basic knowledge of the "value factors" to enable the buyer to make an educated purchase. Some of these factors like beauty-which is in the eye of the beholder –are obviously subjective. An objective assessment will therefore, always be useful.

The best known and most widely used objective guide is what the trade calls "the 4 cs"; colour, clarity, cut and carat weight. Diamond professions use these four factors to describe and classify diamonds. Taken together, they help to evaluate the finished diamonds you buy. Since these are the factors a jeweler uses to assign prices to the diamonds he sells, it is wise to spend a little time learning about them.

***Colour***

Many people think of diamonds as colour less but not all diamonds are colour less. Most diamonds used in jewellery are nearly colour less with some having faint yellow or brown tints. Interestingly, a diamond that is said to have "fine colour" has little or no visible colour ation. The less colour, the higher the value of the stone.

The Gemological Institute of America (GIA), one of the world's foremost authorities on diamonds, grades diamonds according to their colours on a scale from D-Z. In this colour range, a "D" colour diamond will always be more valuable than other diamonds, when all other factors- clarity, carat weight, and cut -are equal.

It is also important to understand why the clour scale starts at "D". Before "GIA" introduced the D-Z colour grading scale , a variety of other symbols were loosely applied throughout the industry. Not only were "A", "B", and "C" used without clear definition, but some dealers, taking a cue from the poultry business perhaps , started grading their diamonds double A (AA). Other systems used numbers – both Arabic (0, 1, 2) and Roman (I, II, III). Most dubious of all were systems that relied on descriptive terms like "gem blue" or "blue white". There still may be some dealers who use these grading systems, but no other system has the clarity and universal acceptance of the "GIA" scale.

***Clarity***

Clarity is another key factor in determining a diamond's value. Few things in nature are absolutely perfect. This is also true of diamonds. Diamonds have internal features, called inclusions, and surface irregularities, called blemishes. Together, they're

called clarity characteristics. A clarity grade is determined by the relative absence of clarity characteristics.

Some clarity characteristics may have a negative influence on a diamond's value, but they can also have positive effects. Inclusions help gemmologists separate diamonds from laboratory created simulants. Inclusions can also help identify an individual stone because no two diamonds have exactly the same inclusions.

The "GIA" clarity scale comprises of eleven grades FL( Flawless), IF ( Internally flawless) VVS1 and VVS2 (Very very small inclusions) , SI1 and SI2 (Small inclusions) and I1 , I2 , I3 (Inclusions or Pique)

Clarity's influence on the value of a diamond is directly related to the concept of rarity. Flawless diamonds are very rare, so rare in fact, that it's possible to spent a long period of time in the jewellery industry without ever seeing one. A flawless diamond will therefore, command a top price.

***CUT***

The cut is what gives a polished diamond it's shape and style. As a value factor however, the "CUT" represents the proportions, symmetry and polish of a diamond, often called "Make" in the diamond trade. A diamond with a "Good make" will be bright, fiery, symmetrical, and sparkle with light.

***CARAT WEIGHT***

The last (But certainly not least) "C" has to do with the basic measuring unit of diamonds. Carat weight is how much a diamond weighs. Diamonds are weighed to a thousandth (0.001) of a carat and then rounded to the nearest hundredth, or point. Diamonds over a carat are usually expressed in carats and decimals. A 1.03 ct. stone, for example, would be described as "One point zero three carats", while a diamond that weighs 0.83 ct. is said to weigh "Eighty three points".

The aspect of carat weight that surprises people is the relationship between rarity, weight, and value, but it is a simple concept. Large diamonds are rarer than small diamonds. So a larger stone doesn't simply cost more. It also costs more per carat, which explains why a diamond of double the weight cost much more than double.

Consumer research by DeBeers, the world's best known diamond company, clearly demonstrates that buyers aware of the 4 cs buy better quality, more expensive diamonds. But the subjective factors, especially beauty must also not be ignored. Obviously, an average buyer in a country like Srilanka would need more to justify the price of a diamond than a series of letters and numbers. Rarity is key to the attraction of a diamond, but beauty the visual impact of a stone – will always carry a lot of weight.

The choice of metal used for diamond jewellery should also be carefully considered. The most popular metals are white gold and platinum. In Srilanka, the use of gold is quite common. Platinum is an extremely hard metal, and is rarer than gold. It is also hypoallergenic and will not irritate the skin.

**R.Kogulnath**
Grade 11 A

## Sri Lanka Matha Our National Anthem

The National Anthem of a Country is as important as the National Flag. It symbolizes a country's hopes and aspirations. It rouses patriotic feelings amoung the people whenever it is heard. We must respect a country's national anthem that is why we stand to attention whenever we hear our national flag is hoistwd.

'Sri Lanka Maths' is our national anthem. It was earlier sung as 'namo namo matha' as originally written and composed by the renowned musician Ananda Samarakoon (1911-1962)

When the British were ruling Sri Lanka (then known as ceylon ) our National anthem was 'God save the king' the British National Anthem. It is generally accepted as the oldest national anthem in the world. It was first sung as a patriotic song in London as early as 1745. No one seems to know who exactly wrote it. From the first day it was played, the song became very popular and by 1847 it had become customary to greet the king with it as he entered a place of public amusement.

Whent we gained independence from the British on 04 February 1948. We did not have a national anthem. A song composed by one bllangasinghe and set to the music by well known musician lionel edirisinghe was used on that occasion the song had the opening words 'Sri Lanka matha – pala yasa mahimajaya jaya'. By the time we celebrated the second independence day in February 1949, Samarakoon's 'namo namo matha' had been selected as the national song.

However it was on 22 November 1951 that the government officially decided that 'namo namo matha' should be our national anthem

Only one change was done ( in1962) after the song was adopted as the national anthem. The opening words were changed to 'Sri Lanka matha'. This followed a controversy about the words in the original song. It is said that Samarakoon was greatly disturbed by this change . His death on 05 April 1962 attributed to the 'depressed state he was in following the change.

Samarakoon first composed 'namo namo matha' when he was the music master at Mahinda college , Galle. That was on 20 October 1940. 'When I was in India for the first time. I was fascinated by the natural beauty and the old ruins in my own country. I virtually became a mad man thinking of the feats of our ancient kings. As I returned , I realized the lack of a patriotic song. One night I could not sleep . I started pacing up and down in my room . I knocked off the light around 10 in the night and was thinking to my self. I fell asleep. I suddenly woke up as if I was in a dream and the thoughts for the song just come up. Early morning I got up and worte the words. That's how Smarakoon has deseribrd the birth of the national anthem.

**G. Ugendra**
2005 (com)

# EXTINCTION OF SPECIES

The extinction of animal and plant species is of considerable concern at the present time because of the high rate of at which species are being exterminated by the direct and indirect of human activities. Extinction is also a natural process and that it is the ultimate fate of all species to become extinct or evolve into new species.

One of the most dramatic features of the history of life on earth was the periodic occurrence of major episodes of extinction. The most significant mass extinction event occurred 65 million years ago, at the end of the cretaceous, when the dinosaurs and other kinds of animals became extinct. It is generally believed that an asteroid 10 km in diameter crashed into the earth, and that the impact would have triggered volcanic eruption leading to the release of copious amounts of dust that might have blocked out the sun for a few years. This would have led to massive starvation, particularly among larger animals. Evidence in favour of this theory comes from the unusually high abundance of iridium in rocks that date from this period. It is known that asteroids contain considerably more iridium than the earth's crust.

The earth today is dominated by humanity and no ecosystem on earth's surface is free of human influence. It is indisputable therefore that man is the overwhelming cause of this high rate of extinction. As many as a quarter of the earth's bird species have been driven to extinction by man over the past two millennia. The growth of the human population and growth in the resource base used by humanity is maintained by a number of human enterprises such as agriculture, industry, etc. These enterprises transform the land surface through cropping, forestry and urbanization and also alter ecosystem functions resulting in loss of biodiversity. The major causes for the loss of biodiversity due to man's influence are habited loss and fragmentation, over-exploitation of plant and

animal species, alien invasive species (Non-native species which become established in natural ecosystems or habitat is an agent of change and threatens native biological diversity), pollution, global climate changes, genetic erosion resulting from agriculture, socio economic factors.

Sri Lanka possesses a rich biological heritage concentrated in relatively small land mass of 65,000 $km^2$. Due to its exceptional variety of life, Sri Lanka is ranked among highest in Asia in terms of biodiversity per unit area. In Sri Lanka too, the situation with regard to threatened species is a matter for grave concern. Sri Lanka has a high degree of species richness and endemism. These species particularly endemics (species restricted in distribution to Sri Lanka), are threatened with the risk of extinction, largely due to the rapid depletion of forest cover, high population density, habitat degradation and unplanned development activities. It is important to note that much of the species richness and most of the endemic species are concentrated in the wet zone of the country- a region in which only about 10% of its land area is now under natural forest. Due to the loss of forest cover a high percentage of the country's indigenous flora and fauna are now considered to be under threat.

According to the list of threatened fauna and flora of Sri Lanka (1999), about 50% of freshwater fish, 61% of amphibians, 55% of reptiles, 27% of birds and 39% of mammals indigenous to Sri Lanka that were evaluated are threatened with extinction in the near or foreseeable future. Therefore conservation of biological diversity should be concerned as an important matter. As a result we can have a home sweet home in near future.

{Source: Resource material on biodiversity}

**S. Jeevitha**
2004 A/L (Bio)

---

# SNAKE BITE

No animal has fascinated the human imagination more than the snake. some snakes have venom glands in their heads and that the poison from these glands causes the pain, swelling and even death that sometimes occurs after snakebite.

There are approximately 3500 species of snakes in the world but only 15% are considered dangerous to humans. specially cobras, rattle snakes and vipers are more dangerous to humans in Srilanka

The venomous snakes are distinct because of their venom aparatus . This consists of two venom glands, the venom ducts and one or more fangs. When a rattle snake bites its prey or a human and venom has been discharged the venom cells begin to replace the

contents since there are numerous biologically active components in the venom, the rate at which each component is produced varies, so that over a number of days the gland cells are producing different components at different rates. It is not known exactly how long it takes for a venom gland to be completely reloaded because this depends on how empty it was in the beginning.

When a poisonous snake bites its prey it gives sufficient venom to kill its prey, generally with in 30-90 seconds. Usually it delivers an amount greater than that necessary to kill the prey. But in defensive bites, such as those on human the amount of venom delivered varies from none to a lethal dose.

Snake venoms are complex mixtures, chiefly proteins. Many of these proteins are enzymes. In addition to proteins snake venoms contain carbohydrates, liquids, amines and inorganic substances such as magnesium, zinc and iron.

## *Symptoms and signs of poisoning*

In human not all poisonings produce the same manifestations. Symtoms range from minor skin redness to vomiting, breathing problems, blurred vision, high fever and convulsions. There is also a considerable difference as to when these manifestations appear. Obviously, the quicker they appear and the greater their number, the more severe the poisoning.

## *First aid*

1) put the victim at rest, keep him or her warm, quiet and comfortable.
2) Remove all the victim's rings and constricting items.
3) Loosely immobilize the injured part in a functional position and attempt to keep this part of the body just below heart level.
4) Give plenty of reassurance.
5) Transport the victim to a medical fascility quickly.
6) Do not apply ice or a tourniquet.
7) The snake should be captured killed and should be given to medical personnel or arrival at a hospital.

These recommendations are based on the assumption that the victim can be seen by a physician or at a medical fascility within 30-45 minutes. If the delay is expected to be longer, a constriction band should be placed immediately proximal to the fang marks. The constriction band loose enough to allow a finger to be placed between it and the body.


## *Medical treatment*

Medical treatment is essential for the person who had a snake bite. The basic therapy should be centered on the use of antivenom. Some antivenoms are monovelent. (these can be used only for one species of snakes) some antivenoms are polyvalent. (these can be used for a group of snakes). Early administration of antivenom can neutralize the action of venom. However, antivenom can block only that venom that is still circulating, it cannot reverse the deleterious changes that have already occured. Usually the antivenoms are administered intravenously.

Antivenoms are generally produced from horses which produce antibodies when they are injected with active venom. fortunately, deaths in treated cases of snakebite are very rare. It is essential, however, that every victim of snakebite be seen by a physician.

**T.Ambika**
Grade 13 (2004)A1

# PREFECTS' GUILD



**Seated (L-R)** : Mr.K.Ketheeswaran, Mr.P.Arulkumar(Teachers-in-Charge), T.Ambika(Asst.S.P), R.Luxsika(S.P), Mr.V.Arumugam (Principal), G.Tharsan(S.P), T.Kirusnabala(Asst.S.P), Mrs.S.Sithamparanathan (Vice Principal), Miss.S.Vadivelu, Mrs.N.Thilagarajah. (Teachers in-Charge),

**Standing**

**First row (L-R)** : K.Sinthuja, M.Vathanakeerthana, R.Sinthuja, M.Jeyanthiny, S.Indiraratha, P.Suganja, R.Ketharany, S.Jeevana, N.Sivasanthini, V.Thayalini, T.Usha, V.Kamalachelvi, S.Sinthuja, G.Suganya, J.Shakitha, S.Tharsika, K.Malarvili, T.Mathura.

**Second row (L-R)**: R.Rajeevan, V.Kaneshan, S.Pirasanth, N.Uthayakumar, S.Maithily, S.Gowsika, T.Bahuna, M.Selvambikai, T.Piriyanga, K.Thiruveny, S.Poongundran, A.Kangaijamaran, S.Thasatheepan, M.Selvakanthy.

**Third row (L-R)** : N.Kajenthiran, R.Mathavan, B.Sajeep, M.Thusyanthan, S.Sivasorupan, J.Risanth, S.Karitharan, K.Sivatharsan, S.Kopikrishna.

# UNIVERSITY ENTRANTS ON G.C.E.(A/L) 2002 PERFORMANCE



**Seated (L R)** Mas.N.Lojithan , Mas.S.Sivasuntharam , Mr.V.Arumugam (Principal) , Mas.S.Muralithas , Mas.k.Pugalenthi .

**Standing (L R)** Miss.M.Rubanithy , Miss.S.Hemalatha , Miss.S.Uthayakumari, Miss.P.Praba , Miss.S.Vijitha , Miss.N.Nalayini , Miss.M.Janarthana .
**Absentees** Mas.T.Prasanna , Mas.A.Senthuran , Mas.R.Thangeswaran ,Miss.V.Tharsiny.

# FOUNDER'S DAY & PRIZE DAY- 2002



**Our Distinguished Guest Mr, V. Ananthasangari,M.P. (Who was also our old - student**

# Jaffna District Champions
# Volley - Ball - Under 19 - 2003



OUR COLLEGE TEAM

**Seated (L R)** Mr.V.Senthuran (Teacher), A.Kamalakkumaran(Captain), Mr.V.Arumugam(Principal), Mr.S.Ganeshalingam (POG), Mr.P.Balabavan(Teachers in- Charge & Coach)

**Standing (L R)** A.Abiranthakan , M.Kishokumar, S.Karitharan, R.Ruban, S.Sivasoruban, S.Jathuram, S.Rathiram, R.Shapeshan

# OUR GRADE FIVE SCHOLARS
## (still with us)



**Seated (L R)** K.Thadchajini(Gr-7A) , M.Vanathi(Gr-11A) , Mr.V.Arumugam (Principal) , M.Sinthuja(Gr-9A) , K.Suganya(Gr-9A) .

**Standing (L R)** J.Sasikumar(Gr-6A) , K.Pirathap(Gr-9A) , P.Kokulnath(Gr-11A) ,K.Prasanth(Gr-9A) , S.Sumanan (Gr-6A)

**Absentees** V.Jeneeva(Gr-8A) , T.Gunaseeli.(Gr-12 Bio)

# THE 'A' LEVEL UNION



**Seated (L-R)** : Ms.N.Thilagaraj, Ms.S.Vadivelu(Vice Patrons), S.Kobikrishna, Mr.T.Arumugam (Patron), T.Mayooran, Mr.M.Muralitharan, Mr.P.Arulkumar(Vice Patrons)
**Standing (L-R)** : P.Nantharuby, N.Uthayakumar, K.Sivadarshan, A.Kamalakumaran, R.Mathavan, M.Thushyanthan, S.Sivaruban, S.Sajeep. M.Selvakanthi, A.Vanathi.

# NON -TEACHING STAFF




**Seated (L-R)** : Ms.M.Satheeswaran, Ms.V.Nallaiyah, Mr.V.Arumugam(Principal), Ms.A.Ketheeswaranathan, Ms.S.Gnaneswaran.
**Standing (L-R)** : Mr.A.Rajasingam, Mr.K.Pushparajah, Mr.P.Yogarajah, Mr.S.Nadarajah.
**Absentees** : Mr.T.Visvalingam, Mr.R.Pirabaharan.

# தமிழ் மன்றம்



இருப்போர் (இ-வ) : செல்வி.நெ.காயத்திரி (பொறுப்பாசிரியர்), ஆ.வானதி, திரு.வ.ஆறுமுகம்(காப்பாளர்) , க. தினேஸ்வரன் , திரு.கு.சிவகுமார் (பொறுப்பாசிரியர்)
நிற்போர் (இ-வ) : ஜெ.சாகிதா, நா.பகவான், சி.குகாதரன்,து.பிரசாந்தன். த.உஷா
சமுகமளியாதோர் : திருமதி.ஜெ.நவலோகநாதன்(பொறுப்பாசிரியர்), கு.தர்சன்

# COMMERCE UNION



**Seated (L-R)** : Mrs. M. PhilipThambirajah (Vice Patron), A .Kamalakumaran , Mr .V. Arumugam (Patron) , G.Tharsan, Mr. T. Srikanagasabesan (Vice Patron)
**Standing (L-R)** : T.Ratheena, R.Vakiny, S.Jeyarajavel, G.Ugendra, T. Kagethan, R. Sasitha

# HINDU STUDENTS' UNION



**Seated(L-R)** : Mr.Muralitharan(Vice Patron), K.Suganya, P.Suganya, Mr.V.Arumugam(Patron) S.Gobikrishna, Mr.S.Laleesan. (Vice Patron)
**Standing(L-R)** : M.Vathanakeerthana, T.Usha, T.Ambika, N.Nitharsan, R.Kokulnath, A.Vikneswaran, M.Thushyanthan, S.Nishanthan, R.Bakeerathi, M.Kirubaliny, S.Nathiya.

# ENGLISH UNION



**Seated(L-R)** : Mrs.R.Perinpamoorthy, Mrs.S.Jeyarajah(Vice Patrons) , M.Vathanakeerthana, Mr.V.Arumugam( Patron), T.Ambika, Mrs.S.Gnaneswaran(Vice Patron) ,T.Mayuran,
**Standing(L-R)** : S.Sinthujah, P.Suganya, T.Usha, A.Kamalakumaran, N.Vigneswaran, M.Thushyanthan, R.Mathavan, S.Haritharan, T.Ugendra.

# THE SCOUT TROOP



**Seated (L-R)** : Mr.V.Senthuran, Mr.B.Balabavan(Scout Masters), Mr.V.Arumugam(Principal) Mr.M.Muralitharan, Mr.S.Laleesan(Scout Masters)

**Standing**

**First row (L-R)** : U.Medshan, K.Pirashanth, B.Jasotharan, K.Arun, N.Vishnurupan, S.Muralitharan, K.Thayananth, S.Sriragavan, K.Pirathap, M.Baheerathan.

**Second row (L-R)** : M.Ramanan, S.Kabilan, R.Ketheeswaran, R.Thavaranjan, B.Sinthujan, K.Krishnamoorththy, M.Rakupathy, N.Thenujan, S.Kaliskaran,T.Sujanthan, S.Kirushan, S.Pulenthiran.

# COLLEGE BAND TROUPE



**Seated (L-R)** : K.Sattiyasri, P.Suganya, R.Sutharsiny, Mr.V.Arumugam(Principal), T.Ambika, Mrs.S.Vijayakumar(Teacher-in-Charge)

**Standing**

**First row (L-R)** : S.Piruntha, K.Thiruveni, M.Seyanthiny, K.Sabitha, S.Yasmina, K.Piruntha, S,Jasinthini, K.Tharani, K.Tharaka, T.Genuka, T.Aruna, V.Thayaliny, R.Layana.

**Second row (L-R)** : R.Umagouri, S.Kukarthina, K.Sinthuja, V.Thirusa, N.Mathura, K.Shayantha, P.Nantharubi, K.Sattiyavathana, S.Mithila, S.Thulasika, N.Tharsini, V.Thankappiriya.

# COUNCIL OF FINE ARTS




**Seated (L-R)** : Mr.K.Thavathasan (Teacher-in-Charge), V.Ganesan, Mr.V.Arumugam (Patron), P.Suganya, Mrs.S.Vijayakumar, Mrs.I.Nirupan (Teachers - in- Charge)
**Standing (L-R)** : Miss.M.Vilani, P.Sinthuya,V.Thankapiriya, K.Piramila, N.Kirishanthan, M.Kirupalini, S.Piruntha,N.Mathura,K.Ramsa.
**Absentee** : Mr.S.Nishanthan.

# SCIENCE UNION



**Seated (L-R)** : Mrs.M.Thilagaraj ( Teacher-in-Charge) ,S.Jeevitha, V.Shanthiny, Mr.V.Arumugam(Patron), M.Thusyanthan,
Mr.K.Thillainathan ( Teacher in Charge)
**Standing (L-R)** : R.Rohanatharsan, S.Nathiya, R.Pavatharany, M.Mathavan, S.Sivarupan, M.Vanathy, S.Mirtha,N.Uthayashankar

# STUDENTS' WELFARE SOCIETY



**Seated (L-R)** : Mrs.N.Thilagaraj(Vice Patron) , R.Raniyan, Mr.V.Arumugam (Patron), K.Kohulan, N.sarangan, Mr.N.Ketheeswaran (Vice Patron)

**Standing ( L-R)** : S. Ganeshamoorthy , P. Sivathanushan, T. Yanothan, K. Kirusan, M. Subasan, R. Kalaichelvan, M.Vanitharan, K. Sugantharaj, R. Yayinthan, T .Senthan, K. Vathanamathan , S. Suhinthan, V. Suginthan.

# SOCIAL STUDIES UNION



**Seated (L-R)** : Mr.S.Moganarajan (Vice Patron) , S.Rathakrishnan, R.Kokulnath, Mr.V.Arumugam (Patron), E.Pakeerathy, Mrs.S.Shrikumary (Vice Patron)

**Standing (L-R)** : S.Sanjiga, P.Jesintha, V.Ushananthiny, S.Pirashanthy, J.Thushyanthan, S.Jayatharsan.

# நலன்புரிக்கழக அறிக்கை

| | | |
|---|---|---|
| காப்பாளர் | : | திரு.வ.ஆறுமுகம் (அதிபர்) |
| தலைவர் | : | திரு.கு.சிவகுமார் |
| செயலாளர் | : | திருமதி.நா.திலகராஜ் |
| பொருளாளர் | : | திருமதி.வ.ஸ்ரீவடிவேலு |
| உபதலைவர் | : | திருமதி.பே.ரேணுகா |
| உபசெயலாளர் | : | திருமதி.ஜெ.கேதீஸ்வரன் |

நிர்வாகக் குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| திருமதி.சி.சிதம்பரநாதன | திரு.கு.வாகீசன் |
| திருமதி.த.சத்தியலிங்கம | திரு.மு.முரளிதரன் |
| திருமதி.சி.யோகேஸ்வரன் | திரு.க.பாலபவான் |
| செல்வி.வ.சிவலீலாதேவி | திருமதி.யோ.புண்ணியமூர்த்தி |
| திருமதி.ச.ஞானேஸ்வரன் | செல்வி.து.ராகினி |

எமது கல்லூரியின் நலன்புரிக்கழகமானது கல்லூரியில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் அனைவரினதும் கூட்டு ஒத்துழைப்பில் ஆரம்பித்து,வளர்ச்சி பெற்றுச் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகையில் 75 இற்கும் மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட இக்கழகமானது எப்பொழுதுமே ஒன்றுபட்டுச் செயற்பட்டுவருவது சிறப்பானதாகும்.

இவ்வகையில் இக்கழகமானது அங்கத்தவர்களின் வாழ்க்கையில் ஏற்படுகின்ற இன்பநிகழ்வுகளிலும்,துன்பநிகழ்வுகளிலும் கலந்துகொள்வதுடன் இந்நிகழ்வுகளுக்கு ஏற்ற பங்களிப்பினை செய்துவருவது குறிப்பிடத்தக்கது.

எமது கழகத்தின் நீண்டநாள் அங்கத்தவராக இருந்து செயற்பாடுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வழிகாட்டிய, மூத்த ஆசிரியர் திருமதி.யோ.புண்ணியமூர்த்தி அவர்கள் இளைப்பாறியுள்ளார். அவர் தமது ஓய்வுக்காலத்தில் மனவமைதிபெற்று மகிழ்ச்சியுடன் வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

எமது கழகமானது வருடாவருடம் மதியபோசன விருந்தொன்றைக் கொண்டாடிவருவது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் இடமாற்றலாகிச்சென்ற அங்கத்தவர்களுக்கும், ஓய்வுபெற்றுச் சென்ற அங்கத்தவர்களுக்கும் ஏற்ற அன்பளிப்புக்களை வழங்கிக் கௌரவித்து வருகின்றோம்.இவ்வகையில் இவ்வருட மதியபோசன விருந்து மிகவிரைவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கழகத்தின் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்து வழிகாட்டிவரும் அதிபருக்கும் , உபஅதிபர்களுக்கும் , அங்கத்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் , கழகத்தின் பணி சிறந்தோங்கிட எல்லாம் வல்ல சோமாஸ்கந்தனின் பாதம் பணிகின்றோம்.

செயலாளர்

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்"

# இந்து மன்றம்
# செயற்பாட்டறிக்கை

காப்பாளர் : திரு. வ. ஆறுமுகம் (அதிபர்)
உப காப்பாளரகள் : சைவப்புலவர் மு. முரளிதரன்
சிவத்தமிழ்ச் சொல்லழகர் ச. லலீசன்
தலைவர் : செல்வன் சி. கோபிகிருஸ்ணா
உபதலைவர் : செல்வன் ம. துஸ்யந்தன்
செல்வி த. உஷா
செயலாளர் : செல்வி பு. சுகன்யா
உபசெயலாளர் : செல்வி த. அம்பிகா
செல்வி ம. கிருபாலினி
பொருளாளர் : செல்வி க. சுகன்யா
பத்திராதிபர் : செல்வி ம. வதனகீர்த்தனா

கல்லூரியில் துடிப்பு மிக்க மன்றமாகக் செயற்பட்டுவருகின்ற இந்து மன்றத்தினது அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன். எமது செயற்குழு அமைக்கப்பெற்ற காலப்பகுதியில் மன்றத்திற்கென தனியான யாப்பு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

